பெப்ரவரி 19 - 25, 2006 February 19 - 25, 2006 28 பக்கங்கள் 16.00






REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்




## புலி வேட்டையின் பெயரால்.....!

## நான்காம் கட்ட ஈழப் போர்: தருப்பை அணிந்த கைகளில்!

## கேலிச் சித்திரங்களின் மர்மப் பின்னணி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும்போக்காளர்களின் கைவரிசை

நேதாஜி



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் இடையில் நிலவிவந்த முறுகல் தீவிரமடைந்திருக்கிறது. எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான வேட்பாளர்கள் தெரிவு தொடர்பாக இவ்விருவரும் எதிரும் புதிருமான நிலைப்பாட்டில் இருப்பதாலேயே இருவருக்குமிடையிலான பனிப்போர் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது. ஜெனிவா பேச்சுக்கள் காரணமாக பல சவால்களை எதிர்நோக்கியுள்ள மஹிந்த நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பாகவும் கொழும்பில் பல நெருக்கடிகளினால் முற்றுகையிடப்பட்டுள்ளார்.

### மஹிந்த - சந்திரிக்கா முறுகல்

அண்மையில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாக சபைக் கூட்டத்தில் உரையாற்றிய கட்சியின் தலைவியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிக்கா இரத்தக் கறை படிந்த கரங்கள் ஸ்ரீ.ல.க.சுதந்திரக் கட்சியை தமது பிடிக்குள் கொண்டு வர தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இதற்கு இடமளிக்க முடியாது என்று ஜே.வி.பியினரைப் பூடகமாகக் குறிப்பிட்டுப் பேசினார்.

தனது சொந்த அரசின் நலனிலும், எதிர்கால அரசியல் வாழ்விலும் அக்கறை கொண்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ இதற்குப் பதிலளித்துப் பேசுகையில்,

"எனது கட்சிக்குள் இருக்கும் பலர் ஜனாதிபதித் தேர்தலின் போது எனக்கு எதிராகக் மும்முரமாகச் செயல்பட்டதை நான் மறந்து விடவில்லை. அத் தருணத்தில் என்னோடு தோளோடு தோள் நின்று பணியாற்றி ஜனாதிபதிக் கதிரையில் நான் அமர்வதற்கு அயராது உழைத்தவர்கள் ஜே.வி.பியினரே. அவர்களை புறந்தள்ள முடியாது-" என்று உணர்ச்சி மேலிட சந்திரிக்காவைப் பார்த்துக் கூறினார்.

### மஹிந்த - ஜே.வி.பி

தனது எதிர்கால அரசியல் வாழ்வுக்கு தம்மை மஹிந்த ராஜபக்ஷ எவ்வளவு தூரம் நம்பி இருக்கிறார் என்பது ஜே.வி.பியினருக்கும் புரியாத விடயமல்ல. கடந்த மாத இறுதியில் ஜே.வி.பி ஆதரவு கூட்டமொன்றில் உரையாற்றிய கட்சியின் தொழிற்சங்கத் தலைவரும் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பியசிறி விஜேநாயக்கா,

"ஜே.வி.பி இல்லையேல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இல்லை. ரணிலை தோற்கடித்து மஹிந்தவை பதவியில் அமர்த்துவதற்கு நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த அயராது உழைத்தோம். அமைச்சரவைக்குள்ளேயே 'மஹிந்த சிந்தனைக்கு' எதிராக பலர் இருந்தனர்"- என்று தனது பேச்சின் போது குறிப்பிட்டார்.

இவ்வாறு ஜே.வி.பியினர் தமது பலத்தை மட்டுமல்ல இறுதி நேரத்தில் மஹிந்த தமது காலில் எப்படியாவது வந்து விழுவார் என்பதையும் தெரிந்து வைத்திருக்கின்றனர்.

இந்தப் பின்னனியில்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர்களைத் தீர்மானிப்பது சம்பந்தமாக ஜனாதிபதி மஹிந்தவுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் இடையில் இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்கள் சூடான வார்த்தைப் பிரயோகங்களோடு நல்லிணக்கமின்றி முடிவடைந்துள்ளன.

கட்சியின் தலைவி என்ற வகையில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் அதிகாரம் தமக்கே உண்டென்பதால் இது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை தம்மிடம் விட்டுவிடுமாறு ஜனாதிபதி மஹிந்தவை சந்திரிக்கா கேட்டுக் கொண்டாரெனத் தெரிகிறது.

ஆனாலும் மஹிந்த இதற்கான உடன்பாட்டைத் தெரிவிக்கவில்லை என்றும் இந்த விவகாரத்தில் நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் தம்மிடமும் அதிகாரம் இருப்பதாக அவர் தெரிவித்ததை அடுத்து இருவருக்கும் இடையிலான பிரச்சினை உச்சக் கட்டத்தை அடைந்திருப்பதாகவும் சொல்லப் படுகிறது.

### ஜே.வி.பியினரின் நிலைப்பாடு

கடந்த 3 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இணைச் செயலாளர் என்ற ரீதியில் சந்தித்த ஜே.வி.பி தூதுக்குழுவினர்

*50 - 50 என்ற அடிப்படையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் வேட்பாளர் பங்கீடு இடம்பெற வேண்டுமென்றும்

*தென்னிலங்கை உள்ளூராட்சி சபைகளின் தலைமைப் பொறுப்பு யார் யாருக்கு வழங்கப்படும் என்பது பற்றி விரைவில் தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும்

* கணிசமான உள்ளூராட்சி சபைகளின் தலைமை தாங்கும் பொறுப்பு தமது கட்சிக்கே வழங்கப்பட வேண்டும் என்றும்

கேட்டுக் கொண்டனர்.

இவ்வாறு சுதந்திரக்கட்சியில் தமது நிலையை வலுப்படுத்திக் கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் கட்சியையே தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற முடியும் என ஜே.வி.பியினர் கணக்குப் போட்டுள்ளனர். அதனால்தான் தமது பிடியில் நெகிழ்ச்சிப் போக்கை கடைப்பிடிக்க அவர்கள் தயாராக இல்லை.

### ஸ்ரீ.ல.சு.கட்சி ஆரவாளர்கள்

இருப்பினும் ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் உள்ள சந்திரிக்கா ஆதரவாளர்கள் ஸ்ரீ.ல.சு.கட்சியின் மீதுள்ள ஜே.வி.பியின் பிடி தளர்த்தப்பட வேண்டும் என்றே விரும்புகின்றனர். கட்சியின் அடிமட்டத் தொண்டர்களும் ஜே.வி.பி தமது கட்சியை விழுங்கிவிடுமாயின் தமது அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடும் என்றே அஞ்சுகின்றனர்.

இருந்தபோதும் ஜனாதிபதி மஹிந்தவும் கட்சியின் மூத்த உறுப்பினர் சிலரும் தாம் தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதற்கும் தமது அரசியல் எதிர்காலம் வளம் பெறவும் ஜே.வி.பியினரின் ஆதரவு அவசியம் எனவும் அவர்களை உ[illegible] அரசியல் லா[illegible] புதைக்க முடியாதென்றும் நம்புகின்றனர்.

### மஹிந்தவின் கடும்போக்கு

* ஜே.வி.பியினரை தொடர்ந்தும் தனது கைப்பிடிக்குள் வைத்திருக்கவேண்டும்

*பேரினவாத வாக்கு வங்கியை இழந்து விடக் கூடாது

என்ற ஆதங்கத்தினால் தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளூராட்சித் தேர்தல்களைப் பொறுத்தவரை வேட்பாளர் நியமனத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவுடன் முரண்பட்டு நிற்பது மட்டுமன்றி ஜெனிவா பேச்சுவார்த்தைகளின் போதும் ஜே.வி.பியினரை திருப்திப்படுத்தும் வகையில் கடும் போக்கை கடைப்பிடிப்பதற்கான செயல்பாடுகளிலேயே அக்கறை காட்டி வருகிறார்.

ஜெனிவா பேச்சுவார்த்தைகளுக்கு முன்னோடியாக கொழும்பில் நடைபெற்றுவரும் பயிற்சிப் பட்டறைகளில் பங்குபற்றுவோருக்கு விரிவுரை வழங்குவோர் யாவரும் கடும் போக்காளர்களாகவே இருக்கின்றனர்.

இப் பயிற்சிப் பட்டறை விரிவுரையாளர்களான எஸ்.எல்.குணசேகர மற்றும் எச்.எல்.டீ.சில்வா ஆகியோரை சிங்கள கழுகுகள் என்றே அரசியல் அவதானிகள் வர்ணித்துள்ளனர். இவர்கள் இருவரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முற்றாக எதிர்ப்பவர்கள் மட்டுமன்றி இந்த ஒப்பந்தத்தின் மூலம் நாட்டுக்கு துரோகமிழைக்கப்பட்டுள்ளது என்று கூறியவர்கள் என்றும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் நாடு ஏமாற்றப்பட்டுள்ளது என்று சிந்திப்பவர்களை ஜெனிவா பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற உள்ள தூதுக்குழுவினருக்கு ஆலோசனை வழங்க நியமித்ததன் மூலம்

> நீண்ட காலமாக புரையோடிப் போயுள்ள பிணக்குக்கு தீர்வைக் காண்பதும் தமிழர் தாயகத்தில் வாழும் தமிழ் மக்களின் அவலமான வாழ்வுக்கு தீர்வு காண்பதற்குமான முயற்சிதான் யுத்த நிறுத்த உடன்பாடு. அதில் தவறேதும் இல்லை. அதைச் செம்மையாக நடைமுறைப் படுத்தாமைதான் தவறு.
>
> அப்படியானால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் அர்த்தமுள்ளதாக அமைவது குறித்தே பேசப்போகின்றோம் என்று அரசாங்கம் கூறுவதன் அர்த்தம் என்ன?

ஜனாதிபதியின் அந்தரங்க நோக்கம் என்பது தெளிவாகின்றது என்றும் அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகின்றது.

அதுமட்டுமன்றி, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பலப்படுத்துவதற்கான வழிவகைகள் பற்றி மட்டுமே இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஆராயப்படும் என விடுதலைப் புலிகள் தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ள போது எடுத்த எடுப்பிலேயே அரசாங்க தூதுக்குழுவினருக்கு கடும்போக்கு சிந்தனைப் பயிற்சி அளித்து பேச்சுவார்த்தை மேசைக்கு அனுப்புவது யுத்த நிறுத்தம் சம்பந்தமாக நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு இணக்கமான முடிவுகள் எட்டப்படுவதற்கு அல்ல.

பதிலாக, போனோம், பேசினோம், விடுதலைப் புலிகள் தமது கடும்போக்கினால் பேச்சுவார்த்தைகளை குழப்பியடித்துவிட்டார்கள் என்று குற்றம் சுமத்தி இணைத் தலைமை நாடுகளிடமிருந்து தப்பித்துக் கொள்ளும் முயற்சியாகவே அரசாங்கம் பேச்சுவார்த்தை மேசையை நாடுகின்றது போல் தெரிகிறது.

### தமிழ்ச்செல்வன்

அதனால்தான் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

"தமிழர் படும் கஷ்டங்கள், அவர்களின் பிரச்சினைகள், அவர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் கெடுபிடிகள் போன்றவற்றைப் புரிந்துகொண்டு பேச்சுக்கு வாருங்கள். கருத்தாடல் புரியும் விவாத அரங்குக்கு வருகின்றவர்களாக அல்லாமல் உண்மையைப் பேசி நியாயமான தீர்வைக் காணும் எண்ணத்தோடு வாருங்கள்" - என்று பேச்சுகளில் பங்குபற்றும் அரச பிரதிநிதிகளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இந்த நாட்டில் நீடித்து வரும் பிரச்சினை தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினை. கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் வாழும் தமிழ் மக்கள் யுத்தத்தினால் மட்டுமன்றி 2004 டிசம்பரில் சுனாமிப் பேரலையாலும் பேரழிவுகளைச் சந்தித்து நிற்கிறார்கள்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலானதன் பின்னரும் கூட தமிழ் மக்கள் இராணுவ அச்சுறுத்தலை சந்தித்தே வந்திருக்கின்றனர்.

எனவே அரச தரப்பு சர்வதேச மத்தியஸ்தத்துடன் உண்மைகளைப் பரிமாறி பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமே ஒழிய பேச்சுவார்த்தை இடம்பெறும் இடத்தை விவாத அரங்காகவோ அல்லது கருத்து முறியடிப்புச் செய்யும் களமாகவோ மாற்ற முயற்சிக்கக் கூடாது.

### அர்த்தமுள்ள ஒப்பந்தம்

ஆனால் அரசாங்கம் இந்த மனோநிலை கொண்ட ஒரு தூதுக்குழுவை ஜெனிவாவுக்கு அனுப்பவில்லை. யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிகளை செம்மையாக நடைமுறைப் படுத்துவது பற்றியே பேச்சு, அதற்கு அப்பால் எந்தவொரு விடயமும் பேசப்பட மாட்டாது என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ள அதேவேளை யுத்தநிறுத்த ஒப்பந்தம் அர்த்தமுள்ளதாக அமைவது குறித்தே பேச்சு என்கிறது அரசு.

நீண்ட காலமாக புரையோடிப் போயுள்ள பிணக்குக்கு தீர்வைக் காண்பதும் தமிழர் தாயகத்தில் வாழும் தமிழ் மக்களின் அவலமான வாழ்வுக்கு தீர்வு காண்பதற்குமான முயற்சிதான் யுத்த நிறுத்த உடன்பாடு. அதில் தவறேதும் இல்லை. அதைச் செம்மையாக நடைமுறைப்படுத்தாமைதான் தவறு.

அப்படியானால் யுத்த நிறுத்த ஒப்பந்தம்

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேலிச் சித்திரங்களின் பின்னணி மர்மங்கள்

நபி பெருமானாரை ஒரு தீவிரவாதி யாகச் சித்திரித்து வெளியிடப்பட்ட கேலிச் சித்திரங்கள் இன்று உலகம் முழுவதிலும் உள்ள இஸ்லாமிய சகோதரர்களை கிளர்ந்தெழ வைத்துள்ளன.



டென்மார்க்கின் JYLLANDS - POSTEN பத்திரிகையின் கலை கலாசாரப் பகுதியின் ஆசிரியர் பிளீமிங் றோஸ் (FLEMING ROSE) 12 கேலிச் சித்திரக்காரர்களை அழைத்து ஒரு வேலைத்திட்டத்தைக் கொடுத்தார்.

டென்மார்க் பிரபல எழுத்தாளர் KARE BLUITGEN என்பவர் பிளீமிங் றோஸுக்கு மிகவும் வேண்டிய நண்பர். இவர் முகமது நபி பெருமான் பற்றிய சிறுவர்களுக்கான நூல் ஒன்றை எழுதி வெளியிடத் திட்டமிட்டிருந்தார்.

இந்த நூலுக்கு சித்திரங்கள் வரைய ஓவியர்களைத் தேடிய போது தான் பிரச்சினை தெரிந்தது. அவருக்குத் தெரிந்த கேலிச்சித்திரக் கலைஞர்கள் எவரும் சித்திரங்கள் வரைவதற்கு சம்மதிக்கவில்லை. தீவிரவாத சிந்தனையுள்ள இஸ்லாமிய அன்பர்களின் எதிர்ப்பினை சந்திக்க நேரிடும் என்று அவர்கள் பயந்தார்கள்.

இதனை அறிந்த றோஸ் தனது நண்பர் கலாசார சூழலில் எதிர்நோக்கிய பிரச்சினைகளை வெளிக் கொணருவதற்காக- பத்திரிகையில் பணியாற்றிய பன்னிரண்டு கேலிச் சித்திரக்காரர்களைக் கொண்டு முகமது நபியவர்களை வெவ்வேறு கோணங்களில் சித்திரிக்கும் 12 கேலிச்சித்திரங்களை வரைந்து தனது பத்திரிகையில் கடந்த செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி பிரசுரித்தார்.

இந்த கேலிச்சித்திரங்கள் இஸ்லாமிய மதத்தையும் நபிகள் பெருமானையும் கேலி செய்வதாக அமைந்திருந்தன. இஸ்லாமிய சின்னங்களான பிறையும் நட்சத்திரங்களும் கூட இந்த வரைபடங்களில் கேலிக்குரியவையாகக் காணப்பட்டன.

ஒரு படத்தில் நபிகள் பெருமான் அவர்கள் ஒரு தீவிரவாதியாகவும், வெடி குண்டுதாரியாகவும் சித்தரிக்கப் பட்டிருந்தது அவருடன் காணப்பட்ட வெடிகுண்டு இஸ்லாமிய சின்னத் துடனும் காணப்பட்டது. இன்னொரு படத்தில் பயந்து பயந்து பின்னால் திரும்பிப் பார்த்தவாறு ஓர் ஓவியர் பெருமானாரின் படத்தை நடுங்கிய கைகளால் வரைவதாக காணப்பட்டது. இன்னொரு படத்தில் சினந்தெழுந்து ஆயுதங்களோடு வரும் இஸ்லாமிய சகோதரர்களை விளித்து- பெருமானார் 'பொறுங்கள், பொறுங்கள் ஒரு முட்டாள் டெனிஸ் (டென்மார்க்) காரனின் புத்தி கெட்ட செயல் இது' என்று கூறுவதாக வரையப்பட்டிருந்தது. இன்னொரு படத்தில்- பூமியிலிருந்து வரும் மாண்ட தற்கொலைக் குண்டுதாரிகளை- நபிகள் பெருமானார் இரு கைகளையும் விரித்து வானத்திலிருந்து வரவேற்பதைப் போல் சித்திரிக்கப்பட்டிருந்தது.

நிச்சயமாக இந்த கேலிச்சித்திரங்கள் இஸ்லாமிய உலகை மிகவும் வேதனைப் படுத்தக்கூடியது- கிளர்ந்தெழ வைத்திருக் கின்றது.

பேச்சுரிமைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் என்ற போர்வையில் டென்மார்க் பத்திரிகை சமாதானம் செய்யப்பார்க்கிறது.

ஆனால் உலகளாவிய ரீதியில் இஸ்லாமிய சமூகம் கொதித்தெழுந்துள் ளது. அதற்கு முக்கிய காரணமும் இருக்கிறது.

தான் செய்த காரியம் சரி என்று டென்மார்க் பத்திரிகை சப்பைக் கட்டு வாதங்களை வைத்த வேளையில்- டென்மார்க் பத்திரிகைக்கு ஆதரவாக, வரிந்து கட்டிக் கொண்டு ஜனவரியில் ஸ்கண்டிநேவியாவிலும், ஜெர்மனியிலும், பெல்ஜியத்திலும், பிரான்ஸிலும் பத்திரிகைகள் இந்த கேலிச் சித்திரங்களை மறுபிரசுரம் செய்தன.

இஸ்லாமிய நாடுகளில்- ஜோர்டான், யேமன், மலேசியா நாடுகளிலும் இந்த சித்திரங்கள் பிரசுரமாகின. இங்கு நடந்த எதிர்ப்புகளை சமாளிக்க முடியாமல்- பத்திரிகையில் வெளியான கேலிச்சித் திரங்களுக்கு மன்னிப்பு கோருமாறு டென்மார்க் பிரதமரிடமும், பத்திரிகை ஆசிரியர்களிடமும் இஸ்லாமிய சமூகம் கோரியது.

டென்மார்க் பிரதமரோ, ''எனது அரசு மன்னிப்பு கேட்கமாட்டாது. ஏனென்றால்- ஊடகங்களையோ, ஊடகங்களின் வெளிப்பாடுகளையோ கட்டுப்படுத்தும் உரிமை அரசுக்கு இல்லை. அப்படிச் செய்வது பேச்சுச் சுதந்திரத்தை மீறும் செயலாகும்'' என்று அடித்துக்கூறிவிட்டார்.

என்பதை வெளிக்கொணரவே இப்படியான சித்திரங்கள் பிரசுரிக்கப்பட்டன என்பதே அவரது வாதம்.

ஆனால் சுதந்திரம் என்ற போர்வையில்- எதையும் செய்யலாம் எதையும் எழுதலாம், எதையும் பிரசுரிக்கலாம் என்பது சரியா? 'அயலவனையும் நேசி' என்ற கோட் பாடுகளை போற்றுகின்ற மக்கள் அதிகம் வாழுகின்ற- இந்த கேலி சித்திரங்களை மறுபிரசுரம் செய்த ஐரோப்பிய

பிரசுரித்த பத்திரிகை ஆசிரியர்கள் ராஜினாமாச் செய்தனர்.

மொத்தத்தில் டென்மார்க், எகிப்து, ஜெர்மனி, ருமேனியா, சுவீடன், நோர்வே, பெல்ஜியம், ஐஸ்லாண்ட், பிரான்ஸ், ஹங்கேரி, நெதர்லாண்ட், இத்தாலி, போர்த் துக்கல், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, பல்கேரியா, அயர்லாந்து, ஜோர்டான், நியூசிலாந்து, கிறீன்லாந்து, அமெரிக்கா, தென் ஆபிரிக்கா, ஸ்லோவேக்கியா, கனடா, செக்கோஸ்லேவேக்கியா, மலேசியா, போலந்து, அவுஸ்திரேலியா, பிஜி, இஸ்ரேல், குறேசியா, இந்தோனேசியா, உக்ரேய்ன், யேமன், பிரேஸில், பிரிட்டன் போன்ற 38 நாடுகளில் செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கும் பெப்ரவரி 8 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளில் இந்த 12 கேலிச்சித்திரங்களும் முழுமையாகவோ பகுதிகளாகவோ பிரசுரமாகியிருந்தன.

இவற்றுக்கு எதிரான எதிர்ப்புப் போராட்டங்கள் ஒக்டோபர் மாதத்தில் கொப்பன்ஹேகன் நகரில் 3,500 பேர் கலந்து கொண்ட அமைதியான எதிர்ப்பு ஊர்வலமாக முதலில் ஆரம்பித்தது. நவம்பர் மாதத்தில் பல ஐரோப்பிய நாடுகளில் இவை பிரசுரமான போது



முதலில் கேலிச்சித்திரங்களை பிரசுரித்த- டென்மார்க் பத்திரிகை ஆசிரியர் பிளேமிங் றோஸ்- "SECULAR SOCIETY எனப்படும் மத சுதந்திரத்தை பேணும் சமூக கோட்பாட்டை இஸ்லாமிய மதத்தினரில் சிலர் ஏற்றுக்கொள்கின் றார்கள் இல்லை. தங்களுக்கென்று விசேட இடத்தை தங்களது மத உணர்வுகளுக்கென்று விசேட ஸ்தானத்தை அவர்கள் கேட்கின்றார்கள். இது நடைமுறையில் உள்ள ஜனநாயகம், பேச்சுச் சுதந்திரம் என்பவற்றுக்கு எதிரா னது. இப்படியான சூழலில் கேலிகள், கிண்டல்கள், பழிச் சொற்கள்



போராட்டங்கள் வலுப்பெற்றன.

முதலில் தொழிலாளர் போராட்டமாக பாகிஸ்தானில் நவம்பர் மாதத்தில் தொடர்ந்தது. ஜனவரியில் மேலும் எதிர்ப்புகள் கிளம்பின. டென்மார்க் பொருட்கள் இந்நாடுகளில் பகிஷ்கரிக்கப்பட்டன. டென்மார்க் தூதுவர்கள் சில நாடுகளில் இருந்து வெளியேறினர். எதிர்ப்புகள் பரவலாக கிளம்பவும், சில இடங்களில் வன்முறைச் சம்பவங்களும் தலைதூக்கின. பெப்ரவரி மாதம் உலகம் எதிர்ப்புகளை கணக்கில் எடுக்கும் வகையில் டமாஸ்கஸ் நகரத்தில் நோர்வே டென்மார்க் தூதுவராலயங்கள் எதிர்ப்பாளர்களின் தாக்குதல்களுக் குள்ளாகின. சுவீடன், சிலி நாட்டுத் தூதுவராலயங்கள் தாக்கப்பட்டு தீயிடப் பட்டன. பெய்ருட்டில் டென்மார்க் தூதுவராலயம் 10,000 எதிர்ப்பாளர்களினால் தீக்கிரை யாக்கப்பட்டது. டென்மார்க்கில் உள்ள லிபிய தூதுவராலயம் மூடப்பட்டது.

என்பவற்றை ஏற்றுக் கொள்ளத் தயாராக இவர்கள் வாழ வேண்டும். இவை கவர்ச்சிகரமாகவோ, ரசிக்கும்படியாகவோ எவ்வேளையிலும் இருக்கமாட்டா. மத உணர்வுகளை கேலி செய்வதை ஏற்க முடியாது என்று அவர்கள் கூறுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எமக்கு கட்டுப்பாடு விதிக்க அவர்களுக்கு உரிமை இல்லை. இதனை உணர்த்தவே இந்த 12 கேலிச்சித்திரங்களும் இங்கு பிரசுரமாகின்றன'' என்று பத்திரிகையில் பிரசுரித்தார்.

தனது எழுத்தாள நண்பர் சிறுவர் களுக்காக எழுதிய நபிகள் பெருமானாரின் நூலுக்கு- கேலிச் சித்திரங்கள் வரைய ஓவியர்கள் மறுத்ததும், வரைவதற்கு முன்வந்த ஓவியர்களுக்கு மரண அச்சுறுத் தல்கள் விடுக்கப்பட்டதும், ஒரு சிலர் தாக்கப்பட்டதும், டென்மார்க் மத சார்பற்ற அரசின் கருத்து, பேச்சு, மத சுதந்திரங்களுக்கு இஸ்லாமிய தீவிரவாதிகளால் விடுக்கப்பட்ட சவால்

நாடுகளின் செயல் சரியா?

உனது சுதந்திரம், எனது மூக்கு நுனியுடன் முடிவடைகிறது. 'YOUR FREE- DOM ENDS WHERE MY NOSE BEGINS' என்று பிரபல தலைவர் கூறியது நினைவுக்கு வருகிறது.

இப்படியான சம்பவங்கள் இன்று உலகில் பல பாகங்களில் நடந்து கொண்டிருக்கின்றன.

முகமது நபி அவர்களின் கேலி சித்திரங்களை பிரசுரித்ததற்காக- டென்மார்க் குற்றவியல் சட்டக்கோவை 140 இன் கீழே டென்மார்க்கில் உள்ள மதங்களின் வழிபாட்டு முறைகளை- கேவலப்படுத்துவதோ அல்லது பகிரங்கமாக கேலி செய்வதோ குற்றமாகும்.

இந்தச் சட்டத்தின் கீழ்- JYLLANDS- POSTEN பத்திரிகை ஆசிரிய பீடத்தை சட்டத்தின் முன் நிறுத்துமாறு- டென்மார்க்கிலுள்ள முஸ்லிம்

எஸ்.ஏ.ஆர்.

ஸ்தாபனங்கள் 2005 ஒக்டோபர் மாதத்தில் டென்மார்க் பொலிஸில் முறையிட்டன. ஆனால் பிரதேச அரச சட்டத்தரணி கேலிச்சித்திரங்கள்- ஒரு கிரிமினல் குற்றம் அல்ல என்று ஜனவரி 2006 இல் தீர்ப்பளித்தார்.

குற்றத்தை நோக்கும் போது- பேச்சுச் சுதந்திரத்திற்கு உரிய உரிமையையும் கணக்கிலெடுக்க வேண்டும். பேச்சுச் சுதந்திரம் என்பதை கணக்கிலெடுக்கும் போது மனித உரிமை மதிக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் கேலிச் சித்திரங்கள் தண்டனைக்குரிய குற்றம் அல்ல என்பதே டென்மார்க் சட்டம் முன்வைத்த கருத்தாகும்.

கேலிச் சித்திரங்களை பிரசுரித்த பத்திரிகையும் ''எம்மைப் பொறுத்தவரை இந்த கேலிச் சித்திரங்கள் சாதாரணமானவை. மற்றவர்களின் மனதை புண்படும்படியாகவோ, டென்மார்க் சட்ட விதிகளுக்கு புறம்பானவையாகவோ அவை இல்லை. எனினும் ஒரு சில முஸ்லிம்கள் இந்த கேலிச் சித்திரங்களால் சஞ்சலமடைவதால்- அவர்களிடம் நாம் மன்னிப்பு கூறுகின்றோம்''- என்று- ஜனவரி 30 ஆம் திகதி கடிதம் ஒன்றை ஆசிரியர் குழு சார்பில் தமது பத்திரிகையில் பிரசுரித்தது.

டென்மார்க் அரசியல் சட்டத்தின் பிரகாரம்- அதன் 77 ஆவது சரத்து- இவ்வாறு கூறுகிறது- ''டென்மார்க் பிரஜை ஒவ்வொருவருக்கும் தனது கருத்துக்களை பிரசுரிக்கவோ, பேசவோ சுதந்திரம் உண்டு. அதனை தடை செய்வது குற்றம்''.

இதற்கு முன்னர் 1984 இல் தோர்ஸன் என்ற டென்மார்க் ஓவியர்- டென்மார்க் ரயில்வே ஸ்டேசன் சுவர் ஒன்றில் இயேசு நாதரை நிர்வாண நிலையில் வரைந்திருந்தார். இதே ஓவியர் 1992 இல் இயேசு நாதரை ஒரு காமாந்தகரனாகவும், தீவிரவாதிகளோடு தொடர்பு கொண்டவராகவும்- காட்டும் JESUS VENDER TILBAGE என்ற திரைப்படத்தை எடுத்தார். இந்த இரு சம்பவங்களாலும் பலமான எதிர்ப்புக் கிளம்பி ரயில்வே ஸ்டேசன் சுவரிலிருந்து- ஓவியம் அகற்றப்பட்டாலும்- தோர்ஸன் மேல் சட்டப்படி எதுவித நடவடிக்கையும் எடுக்க முடியாது போய்விட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழகம் நோக்கிய புலப்பெயர்வுகள்...

ஈழமக்களின் தமிழகம் நோக்கிய பயணம் மீண்டும் அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு மாதங்களில் கட்டம் கட்டமாக கிட்டத்தட்ட 500 பேர் வரை அகதிகளாக தமிழகம் போய் சேர்ந்துள்ளனர்.

இலங்கையின் களநிலவரம் தலைகீழாக மாறியது கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் தான்.

புதிய ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பொறுப் பேற்ற பின்னர் நிலைமை மோசமானது. தென்னிலங்கையில் பேரினவாத அலை காரணமாக தேர்தலில் இனவாதக் கூட்டணி ஆட்சியமைத்துக் கொண்டது.

மஹிந்த ராஜபக்ஷவினால் ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளின் கூட்டணி வெற்றி வாகை சூடியது. தமிழர் தாயகப் பகுதியில் தேர்தலை அடியோடு தமிழ் மக்கள் புறக்கணித்தனர்.

இதனால் சிங்களத் தேசம் மரண அடியை வாங்கிக் கொண்டதுடன் சர்வதேசமும் விழிபிதுங்கிக் கொண்டது. மீண்டும் வடக்கு- கிழக்கில் பாதுகாப்புக் கொடுமைகள் இறுக்கப்பட்டன. இராணுவப் பிரசன்னம் அதிகரித்தது. தேடுதல்கள், சுற்றிவளைப்புகள், கைதுகள் தமிழர் தாயகம் எங்கும் வியாபித்தன.

இந்த இராணுவ நெருக்கடி நிலை தமிழ் மக்கள் மத்தியில் பதற்றத்தை தூண்டியது. மாலையுடன் ஊர்கள் அடங்கிப்போயின. தமிழ் மக்கள் மூன்றாண்டுகள் அனுபவித்த சமாதானம் சாகத் தொடங்கியது. இந்த நிலையில் படையினர் மீதும், புலிகள் மீதும் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கின.

படையினர்மீது தொடர்ச்சியான கிளைமோர் தாக்குதல்களும் கண்மூடித்தனமான அதிரடித் தாக்குதல்களும் இடம்பெற்றன. இந்தக் காலகட்டத்தில் 120க்கும் அதிகமான பொதுமக்கள் படுகொலையுண்டனர். 100 படையினர் வரை உயிரிழந்தனர். புலிகள் தரப்பிலும் குறிப்பிட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டன.

கெரில்லாப் பாணித் தாக்குதல்களும், பதிலடியாக படையினரின் தாக்குதல்களும் 80களின் ஆரம்பகால நிலையை நினைவூட்டின. 83 இனக் கலவரத்தைத் தொடர்ந்து ஈழத்தமிழ் மக்கள் தமிழகம் நோக்கி பயணிக்கத் தொடங்கினர். இந்தியாவும் அக்காலகட்டத்தில் அவர்களை வரவேற்றது.



இவ்வாறு கட்டம் கட்டமாக சென்ற ஈழத்தமிழர்களில் தற்போது 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் 103 முகாம்களில் தமிழகத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு குறிப்பிட்ட உதவிகளை இந்திய அரசு செய்து வருகிறது.

இவர்களை திருப்பி அனுப்புவது குறித்து பரவலாகப் பேசப்பட்டது. எனினும் பெரும்பாலானோர் இலங்கையில் சுமுக நிலை ஏற்பட்ட பின்னரே திரும்பமுடியும் என கருத்துத் தெரிவித்தனர். இந்த நிலையில் மீண்டும் வன்முறைகள் தமிழர் தாயகப் பகுதிகளில் தலைதூக்கத் தொடங்கின. மீண்டும் 'படகுப்பயணம்' தொடங்கியது.

1997 - 1998 காலப்பகுதியில் வன்னிப் பெருநிலப்பரப்பில் இராணுவத்தினர் பெரும் ஆக்கிரமிப்பை மேற்கொண்ட சமயம் நூற்றுக் கணக்கான மக்கள் தமிழகம் நோக்கிப் பயணமாகினர். அந்த வேளையில் படகு கவிழ்ந்த சம்பவம் ஒன்றில் 48 அகதிகள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

83களின் பின்னர் பாக்குநீரிணை பல்லாயிரம் ஈழத்தமிழர்களை தாயகத்தில் கரைசேர்ந்திருந்தாலும், பல நூற்றுக்கணக்கானோரை அது பலிகொண்டதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு மாதங்களில் 500 ஈழத்தமிழ் அகதிகள் தனுஷ்கோடி வந்துள்ளனர் என தமிழக பொலிஸ் பதிவுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

படகோட்டிகளிடம் இவர்கள் ஆளுக்கு சுமார் 5 ஆயிரம் ரூபாய்கள் வரை கொடுத்து தமிழகம் செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. தமது உயிரைக் கையில் பிடித்துச் செல்லும் இந்த பயணம் ஆபத்தானதும் கூட.

எனினும் தாயக மண்ணை விட்டுச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு செல்வோரிடம் இந்திய புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். 'கியூ' பிரிவுப் புலனாய்வாளர்களின் வேலையே 'புலி' பிடிப்பதுதான். இவ்வாறு சென்ற அகதிகளில் ஒருவர் அண்மையில் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழீழ போக்குவரத்து கழகத்தில் பணியாற்றியமைக்காக மகேந்திரன் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு செல்பவர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுகின்றனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு செல்பவர்கள் குறித்து தீவிர கண்காணிப்பையும் இந்திய மத்திய புலனாய்வு மற்றும் தமிழக புலனாய்வுப்பிரிவு ..... ஆகியவை மேற்கொண்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராஜி என்பவர் கருத்து வெளியிடுகையில், "யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. சந்தேகத்தின் பேரில் கைது செய்யும் இளைஞர்களை சுட்டுக்கொல்கின்றனர். பலரை இராணுவம் தடுத்து வைத்துள்ளது. கிராமங்களுக்குள் புகுந்து தமிழர்களை குறிவைத்து இராணுவத்தினர் தாக்குதல் நடத்துகின்றமையால் தமிழர்கள் அச்சம் காரணமாக வெளியேறி வருகின்றனர். தமிழர்களை இராணுவம் சுட்டுக் கொன்றுவிட்டு பழியை புலிகள் மீது சுமத்தி வருகின்றது" என்று தெரிவித்தார்.

இன்னொருவர் கருத்து வெளிடுகையில் "ரொக்கெட் குண்டுகளால் இராணுவம் கடுமையாகத் தாக்கி வருகிறது. அண்மையில் எமது பகுதியில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4பேரை இராணுவத்தினர் எரித்துக் கொன்றனர்" என்றார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகளின் பகுதிகளை நோக்கி சுமார் 25 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர் எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

அடுத்த வாரம் ஜெனிவாவில் தொடங்கியுள்ள சமாதானப் பேச்சுகள் இராணுவ நெருக்குவாரங்களைக் குறைத்து சுமுகநிலையை ஏற்படுத்துமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இடம்பெயர்வுகளையும் புலப்பெயர்வுகளையும் சந்திப்பது எமது மக்களுக்குப் புதிது அல்ல. எனினும் இதற்கு எப்போது முடிவு?

சமகால நிலவரங்களை பார்க்கும் போது தற்போதைக்கு எதுவும் வெளிச்சமாகவில்லை.

-ஷோபா-

# கேலிச் சித்திரங்களின்...

(3ஆம் பக்கத்தொடர்ச்சி)

டென்மார்க்கில் பத்திரிகைகள் யாவும் தனியாருக்கு சொந்தமானவை. அரசின் எதுவித கட்டுப்பாடும் பத்திரிகைகள் மீது கிடையாது. பத்திரிகைகள் எதுவித கட்டுப்பாடும் இன்றி எதனையும் பிரசுரிக்கலாம். மதபோதகர்கள், அரசியல்வாதிகள் ஏன் டென்மார்க் [illegible]ணி மார்க்கிரத்தா கூட- கேவலமான [illegible] சித்திரங்க[illegible] கையில் [illegible]

ஜனவ[illegible] 29 [illegible] டென்மார்க்கின் தேசிய வானொலி- இ[illegible] கேலிச்சித்திரங்கள் விடயம[illegible] ஒரு வாக்கெடுப்பை நடத்தியது. அந்த வாக்கெடுப்பின் படி அதில் பங்குபற்றிய 79 வீதமானோர் டென்மார்க் பிரதமர் முஸ்லிம் சமூகத்திடம் மன்னிப்புக் கேட்கக்கூடாது என்றும் 48 வீதமானோர் பத்திரிகைச் சுதந்திரத்தில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது என்றும்- 62 வீதமானோர் JYLLANDS பத்திரிகை மன்னிப்பு கேட்கக் கூடாதென்றும் 58 வீதமானோர்- பத்திரிகை பிரசுரித்தது சரி என்றும் விருப்பைத் தெரிவித்தனர்.

இதைப் போல் சில பத்திரிகைகள் நடத்திய வாக்கெடுப்பிலும்- கேலிச்சித்திரங்கள் தப்பில்லை, அவை சுதந்திரமான எண்ணத்தின் வெளிப்பாடே என்ற கருத்துத்தான் ஓங்கி நின்றது.

இப்படியான வாதப் **பிரதிவாதங்களுடன் கேலிச்சித்திரப் பிரச்சினை தொடர்ந்தும் உலகை வலம் வந்து கொண்டிருக்கின்றது.**

இந்த நிலையில் சமூக விஞ்ஞான சூழலில் இந்தப் பிரச்சினையை நோக்கும் போது- மத நம்பிக்கை உலகில்- முக்கியமாக ஐரோப்பிய நாடுகளில்- குன்றி வருவதே- இப்படியான பிரச்சினைகளுக்கு காரணம் என்று சமூக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மதம் மக்களின் வாழ்க்கையில் முக்கியமான ஒன்றாக இல்லை. அங்கு முன்னர் இருந்த அழகிய பெரிய கிறிஸ்தவ ஆலயங்கள்- இன்று இல்லை. ஒரு சில மக்களே- ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயத்துக்குச் செல்கின்றனர். மக்கள் ஆதரவு இல்லாததால்- கிறிஸ்தவ, கத்தோலிக்க ஆலயங்கள்- மூடப்படுகின்றன. ஆலயங்கள் சில- இரவு கேளிக்கை விடுதிகளாகவும் தங்குமிடங்களாகவும், கார் நிறுத்தும் இடங்களாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

தமது மதத்திலேயே நம்பிக்கை **இல்லாத-மதத்தை மதிக்காத-மதம் மீது பயமில்லாத-சமூகத்தினிடையே- மற்றைய மதங்களை மதிக்கும் பயன் பாட்டை எப்படி எதிர்பார்க்க முடியும்?**

அடுத்ததாக- இந்த கேலிச் சித்திரங்கள் விஷயத்தில் ஆரம்பத்தில் மௌனியாக இருந்த அமெரிக்காவும் பிரிட்டனும் திடீரென்று முஸ்லிம் மக்களுக்கு வக்காலத்து வாங்க வரிந்து கட்டிக் கொண்டு புறப்படும் காரணம்- உலக முஸ்லிம் மக்களிடையே புதுச் சந்தேகங்களை கிளப்பியுள்ளது.

ஈராக் போரில் இஸ்லாம் மதத்தின் குர் ஆன் புத்தகத்தையும், முஸ்லிம் சகோதரர்களையும்- கீழ்த்தரமாக நடத்திய அமெரிக்கா- பிரிட்டிஷ் படைவீரர்களை இன்னும் இஸ்லாமிய சகோதரர்கள் மறக்க முடியவில்லை. அன்று அப்படி மதவிரோத போக்கைக் கடைப்பிடித்தவர்கள் இன்று முதலைக் கண்ணீர் வடிக்கின்றார்கள் என்றால் ஆச்சரியமாக இருக்கின்றது என்று கூறுகின்றார்கள்.

செப்ரெம்பர் 2005 இல் பிரசுரிக்கப்பட்ட கேலிச்சித்திரங்களுக்கு- கிட்டத்தட்ட ஐந்து மாதங்கள் கழித்து- அழிவுகள் தருகின்ற எதிர்ப்புகள் கிளம்பியது கூட சந்தேகங்களை வளர்க்கின்றது.

எவராவது பின்னாலிருந்து இவற்றை தூண்டுகின்றார்களா? முஸ்லிம் மக்களுக்கும்- இஸ்லாம் மதத்துக்கும் தீவிரவாத சாயம் பூசும் இன்னொரு சதியா? பிள்ளையையும் கிள்ளி- தொட்டிலையும் ஆட்டும் செயலா? பல பல சந்தேகங்கள். காலம்தான் பதில் சொல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் கட்சிக்கு போதாத காலம்!

வட இந்தியாவில் கணிசமான செல்வாக்குடைய பாரதீய ஜனதாக் கட்சிக்கு தென்னிந்தியாவின் நான்கு மாநிலங்களிலும் அவ்வளவு பெரிய வாக்கு வங்கி கிடையாது. ஆனால் மத்தியில் ஆட்சி அமைக்க வேண்டுமானால் வடமாநில செல்வாக்கு மட்டும் போதாது. வடமாநிலங்களில் தோற்றால் கூட தெற்கில் வென்றால் மத்தியில் ஆட்சி அமைக்கும் விஷயத்தில் தேறிவிடலாம் என்பது பல தடவைகள் நிருபணமாகியிருக்கிறது.

2001 தேர்தலில்கூட பி.ஜே.பி. தனது பிரதான கோட்டையான உத்தரப்பிரதேசத்தில் கோட்டை விட்டது. ஆனால் தமிழகம் மற்றும் ஆந்திராவில் பெருவெற்றி பெற்றது. அதன் வாயிலாக ஜாம் ஜாம் என்று ஆட்சி அமைக்க முடிந்தது. இவை லோக்சபா

**பத்திரிகை வீடு**

தேர்தலின் விவரங்கள்.

மாநிலத் தேர்தல்களிலோ எந்த ஒரு தென்னிந்திய மாநிலத்திலும் பி.ஜே.பி. யால் தனித்தோ இணைந்தோ ஆட்சிக்கு வரமுடியாத நிலையே இருந்து வந்தது. கர்நாடகாவிலும் ஆந்திராவிலும் கட்சிக்கு ஓரளவு செல்வாக்குண்டு. குறிப்பாக கர்நாடகாவில் ஆட்சிக்கு வர கட்சி கடந்த பல ஆண்டுகளாகப் பகீரதப் பிரயத்தனம் செய்து வந்தது. எனினும் பாரம்பரியமாக அங்கு மாறி மாறி ஆட்சி நடத்திய காங்கிரஸையும் ஜனதாக் கட்சியையும் உச்சுவது இலேசாக இருக்கவில்லை.

காலஞ்சென்ற கர்நாடக முதல்வரும் பழுத்த அரசியல்வாதியுமான ராமகிருஷ்ண ஹெக்டே கடந்த ஆண்டு இறக்கும் வரை ஜனதா கட்சி வலுவாகவே இருந்தது. ஆனால் கட்சிக்குள் அவருக்கும் முன்னாள் பிரதமர் தேவகவுடாவுக்கும் இடையிலான இழுபறியில் கட்சி பலவீனமடைந்தது. இதனால் மாநில அரசியலில் பழைய ஜனதாக் கட்சி காணாமலே போய்விடுமோ என்ற சந்தேகம் கூட இருந்தது.

தேவகவுடா பிரதமராக இருந்த செல்வாக்கைக் கொண்டு பெரும்பாடு பட்டு கட்சியை உயிர்ப்பித்தார். தொடர்ந்து 3 லோக்சபா தேர்தல்களில் ஜனதா தளக் கட்சிக்கு 28 தொகுதிகளில் ஒன்றில் கூட வெற்றி கிடைக்கவில்லை: காங்கிரஸும் பி.ஜே.பி.யும் தான் வென்று வந்தன, இந்த நிலையை மாற்றியவர் தேவகவுடாதான். கடந்த சட்டசபைத் தேர்தல்களில் கணிசமான இடங்களை வென்று ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக ஜனதா தளம் கட்சி வந்தது. தேவகவுடா மதசார்பின்மையை ஆதரிப்பவர் என்பதால் ஆட்சியமைப்பதில் பி.ஜே.பி.க்கு உதவி செய்யாது காங்கிரஸை ஆதரித்தார். இதன் விளைவாக ஏற்கனவே பதவியிலிருந்த காங்கிரஸ் தொடர்ந்தும் ஜனதா தள உதவியுடன் ஆட்சியிலிருக்க முடிந்தது. துணை முதல்வர் பதவி ஜனதா தளத்துக்கு வழங்கப்பட்டது. அடுத்த ஆட்சி எங்களுடையது தான் என்று கனவு கண்டு வந்த பி.ஜே.பி. தலைவர்களின் ஆசை நிராசையாகவே தொடரலாயிற்று.

இந்தப் பின்னணியில் தேவகவுடாவின் மகன் தலைமையில் ஒரு குழுவை ஜனதா தளத்திலிருந்து பிரிப்பதில் பி.ஜே.பி வெற்றி கண்டுள்ளது. அவரது தலைமையில் பெரும்பாலான ஜனதா தள சட்டசபை உறுப்பினர்கள் தனிக்குழுவாக பி.ஜேபி.யுடன் பேரம் பேசி கூட்டாட்சி அமைத்துள்ளனர். இதன்படி முதல் ஒன்றரை ஆண்டுகளும் ஜனதா தளமும் அடுத்த ஒன்றரை ஆண்டுகளும் பி.ஜே.பி.யும் முதல்வர் பதவியை வகிக்கவுள்ளன. கடைசியில் ஒரு வழியாக கர்நாடகத்தில் பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்துவிட்டது. அதன் தலைவர் எதியுரப்பா துணைமுதல்வராகிவிட்டார். கட்சியின் நெடுநாள் கனவு நனவாகிவிட்டது.

அதைவிட முக்கியமான விஷயம் தென்மாநிலமொன்றில் முதன்முதலாக பி.ஜே.பி. ஆட்சி அமைத்துள்ளது என்பது. இது நிச்சயமாக கட்சியின் வளர்ச்சியில் ஒரு மைல்கல் என்பதில் சந்தேகமில்லை. சமீபகாலமாக பல்வேறு பிரச்சினைகளில் சிக்கி திண்டாடிக் கொண்டிருந்த கட்சிக்கு இது மிக நல்ல செய்தியே.

மறுபுறம் காங்கிரஸ் கட்சிக்கு புதிதாக சிக்கல்கள் ஏற்படத்தொடங்கியுள்ளன. மே மாதம் தமிழகம் உள்ளிட்ட 4 மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இதில் எந்த மாநிலத்திலும் வெற்றி பெறும் வாய்ப்பு காங்கிரஸுக்கு இல்லை என்பது தான் கட்சியை அச்சுறுத்தும் விடயம்.

பி.ஜே.பி.யும் இந்த மாநிலங்களில் ஆட்சிக்கு வரமுடியாது என்றாலும் அசாமிலும் கேரளாவிலும் காங்கிரஸ் கைவசமுள்ள ஆட்சியை இழந்துவிடலாம் என்பது தான் முக்கியமான கவலையாக காங்கிரஸுக்கு உள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரை ஆட்சிக்குவரும் சந்தர்ப்பமில்லை என்றாலும் அயலிலுள்ள பாண்டிச்சேரி யூனியன் பிரதேச ஆட்சியைத் தக்க வைக்க வேண்டிய கட்டாயம் இருந்து வருகிறது. மொத்தத்தில் எதிர்வரும் மாதங்கள் கட்சிக்கு தோல்வி மேல் தோல்வி தரும் மாதங்களாக இருக்கலாம்.

**எஸ். சுரேந்திரஜித்**

இதற்கிடையில் அணுஆயுத விவகாரத்தில் ஈரானுக்கு எதிரான நிலைப்பாட்டை காங்கிரஸ் அரசு எடுத்திருப்பது இடதுசாரிகளின் கடுங்கோபத்தைக் கிளறியுள்ளது. தமது எச்சரிக்கையை மீறி அமெரிக்காவுக்கு ஆதரவாக வியன்னா கூட்டத்தில் மத்திய அரசு வாக்களித்ததால் அதைக்கவிழ்க்கவும் தயங்கமாட்டோம் என் இடது சாரிகள் கூறியிருப்பது மன்மோகன் அரசுக்கு புதிய தலையிடியாக மாறலாம். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஈரான் விவகாரம் காரணமாக அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றை லோக்சபாவில் கொண்டுவர முலாயம் சிங் யாதவின் கட்சி முயற்சிக்கிறது. இதனை இடதுசாரிகளும் பி.ஜே.பி.யும் ஆதரித்தால் அரசு கவிழ வாய்ப்புண்டு.

சுமுகமாக இருந்த காங்கிரஸ் இடதுசாரி உறவால் தான் காங்கிரஸின் சிறுபான்மை அரசு இதுவரை தப்பிப்பிழைத்து வந்தது. இப்போது அந்த உறவில் கொந்தளிப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது. மத்தியில் கூட்டாளிகளாக இருந்தாலும் கேரளாவிலும் மேற்கு வங்கத்திலும் ஆட்சியிலுள்ள காங்கிரஸுக்கு பிரதான எதிரி இடதுசாரிக் கட்சிகளே.

மே மாதம் இந்த இரு மாநிலங்களிலும் சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ளதால்தான் இரு கட்சிகளும் ஒன்றையொன்று தாக்கத் தொடங்கியுள்ளன. இதனால் மத்திய அரசு கவிழ வாய்ப்புண்டா என அங்கலாய்ப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறது பாரதீய ஜனதாக் கட்சி. ஈரான் சர்ச்சை வேறு வந்து முளைத்திருக்கிறது. காங்கிரஸ் கட்சிக்குப் போதாத காலம் தான்.


# VACANCIES

எமது பத்திரிகை நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு G.C.E (O/L) பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1)TYPE SETTERS | - | முன் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை |
| 2)PAGE MAKERS | - | முன் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை |
| 3)TRAINEE TYPE SETTERS | - | நல்ல கணினி அறிவு |
| 4)ARTIST | - | ஓவியத் துறையில் நல்ல தேர்ச்சியும், அறிவும் |
| 5)CLERKS | - | கணினி அறிவு |
| 6)DESPATCH CLERK | - | மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான லைசன்ஸ் |
| 7)MARKETING EXECUTIVES | - | ஆங்கிலத்தில் சரளமாக பேசக் கூடிய வல்லமை (வாகன லைசன்ஸ்) |
| 8)COLLECTORS | - | சிங்களத்தில் பேசக்கூடிய வல்லமை |

தங்குமிட வசதி தேவைப்படின் வழங்கப்படும்

நற்சாட்சிப் பத்திரங்களுடன் வேலை நாட்களில் இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் காலை 10.00 மணிக்கும் மாலை 5.00 மணிக்கும் இடையில் நேரில் வரவும். அல்லது 22.02.06 க்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

Operation Manager
சுடர் ஒளி
85, Jayantha Mallimarachchi Mawatha
(Mahawatta Road)
Grandpass.

விவசாயிகளின் முதல் தேர்வு
ஜோன் டியர் ஸ்ரேன்டட் கம்பைன் ஹாவெஸ்டர்
Farmers first choice



JOHN DEERE / STANDARD
COMBINE HARVESTER.
நெல் அறுவடை இயந்திரம்

முகவர்:-
நோர்த் ஈஸ்ட் ரூரல் டிவெலொப்மென்ட் செர்விஸ் லிமிடட்
கிளிநொச்சி
தொலைபேசி : 021 2285751, 2285023

தேவ் டிரக்டர்ஸ்
196, கண்டி ரோட், யக்கல.
(லங்லோ அருகில்)
தொ : 033 2226010 பெ : 033 2226716



இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு மறுசீரமைக்கப்பட்ட, மறுசீரமைக்கப்படாத உயர்ரக
மெஸிபர்கியூஷன்
MASSEY FERGUSON
எந்த வேளையிலும் எத்தனை ட்ரக்டர்களையும் வாங்கி வரக்கூடிய இலங்கையின் மிகப்பெரிய ட்ரக்டர் நிறுவனம்.

முகவர்:-
நோர்த் ஈஸ்ட் ரூரல் டிவெலொப்மென்ட் செர்விஸ் லிமிடட்
கிளிநொச்சி
தொலைபேசி : 021 2285751, 2285023

தேவ் டிரக்டர்ஸ்
196, கண்டி ரோட், யக்கல.
(லங்லோ அருகில்)
தொ : 033 2226010 பெ : 033 2226716

## பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப் பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். வாழ்வு வீணாகிவிட்டதே என்று பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஒடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...
2006 பெப்ரவரி 19 – 25 வரை
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 2368427
Hot Line: 0777 569205

வவுனியாவில்...
2006 மார்ச் 04 - 06
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...
2006 மார்ச் 6 -10
A.S.N. சுற்றுலா விடுதி
392/A. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

பெப்ரவரி 19 -25, 2006

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## சுமூகமான நிலையை குழப்பும் பேச்சு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஜெனிவாவில் அடுத்த வாரம் நடைபெற இருக்கின்றன.

2003 ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் இரு தரப்பினரும் மீண்டும் சந்திக்க இருப்பதால், மிகவும் முக்கியமான சந்திப்பாக இது கருதப்படுகிறது. சமாதானத்திற்கான இறுதிச் சந்தர்ப்பமும் கூட.

கடந்த மாதம் 25 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை அனுசரணைப் பணியை ஏற்றுள்ள நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கிளிநொச்சியில் சந்தித்துப் பேசி ஜெனிவாவில் பேச்சுக்களை நடத்த இணக்கம் காணப்பட்டதை அடுத்து வடக்கு கிழக்கில் மட்டுமல்ல கொழும்பிலும் வன்முறைச் சம்பவங்கள் குறைந்திருக்கின்றன. தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்கள் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம்தான் கடைசியாக இடம்பெற்ற குறிப்பிடத்தக்க சம்பவம்.

ஜெனிவாப் பேச்சுக்கு முன்னர் வடக்கு, கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கடைசியாக கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பின்போது புலிகள் சார்பாக வலியுறுத்தப்பட்டிருந்தது. அது நியாயமான ஒரு கோரிக்கையே.

ஆனால், ஜனாதிபதி ராஜபக்ஷ ரோய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டி

தென்னிலங்கைத் தலைவர்களின் மன நிலையில் இன்னும் கடுகளவு மாற்றமும் ஏற்படவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

ஜெனிவாப் பேச்சுக்காக ஒரு வரி நிகழ்ச்சி நிரல் மட்டுமே தயாரிக்கப்படும் என்பது உறுதியாகிவிட்டது. அதாவது யுத்த நிறுத்த ஏற்பாடுகளை எவ்வாறு செம்மையாகக் கடைப்பிடிக்கலாம் என்பது பற்றியே ஜெனிவாவில் பேசப் படப் போகிறது. வேறு விடயங்கள் எதுவும் பேசப்பட மாட்டாது. நிகழ்ச்சி நிரல் அதற்கு இடம் கொடுக்காது.

இப்படியான நிலையில் ஜெனிவாப் பேச்சுக்களின் போது பல்வேறு விடயங்கள் பேசப்பட இருப்பது போன்ற ஒரு தோற்றம் தென் இலங்கையில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இது தென்னிலங்கை மக்களை ஏமாற்றும் கபட நோக்கம் கொண்டது.

புலிகளோடு என்ன பேசுவது என்பது குறித்து கலந்தாலோசித்து முடிவு செய்வதற்காக பயிற்சிப் பட்டறைகள், விரிவுரைகள், சர்வ தேசப் பிரமுகர்களின் உபதேசங்கள் என்று எல்லாம் கொழும்பில் சுறுசுறுப்பாக காரியங்கள் நடைபெறுகின்றன. வடக்கு – கிழக்கு, தமிழர்களின் தனியான தாயகப் பூமி என்ற விடுதலைப் புலிகளின் கோட்பாட்டுக்கோ, கோரிக்கைகளுக்கோ தாம் இணங்கப் போவதில்லை என்று ராய்ட்டருக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்தது மூலம் ஜெனிவாப் பேச்சில் இந்த விடயங்கள் எல்லாம் பேசப்படப் போகின்றன என்று தென்னிலங்கை மக்களை நம்ப வைக்கிறார். இரு தரப்புக்கும் இடையில் நல்லெண்ணம் ஏற்படுத்தப்பட வேண்டிய தற்போதைய நிலையில் அதனை குழப்பி அடிப்பதை உள்நோக்கமாக கொண்டது இது.

வன்முறைகள், படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும், துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். சிறுவர்களை படைக்குச் சேர்ப்பது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்பதே 27 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்கா, ஜப்பான், நோர்வே ஆகியவற்றைக் கொண்ட இணைத் தலைமையின் பிரதான கோரிக்கை.

இவற்றில் முதல் இரண்டும் யுத்த நிறுத்த உடன்பாடு ஒப்பந்தத்துக்குள் வருகின்றன. சிறுவர்களை படைக்குச் சேர்ப்பது குறித்து யுத்த நிறுத்த உடன்பாட்டில் எதுவும் இல்லை.

ஆகவே தற்பொழுது நெருக்கடிக்கும் பிரதான காரணமாக இருந்துவரும் வன்முறைகள், படுகொலைகள் நிறுத்தப்பட்டு துணைக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டாலே நெருக்கடிக்குத் தீர்வு கண்டு விட முடியும். சமாதானப் பேச்சுக்களை தொடர்ந்து நடத்தவும் வழி ஏற்படும்.

# சுற்றி சுற்றி சுப்பரின் கொல்லைக்குள்

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி சரியாக நான்கு ஆண்டுகள் கழித்து ஐந்தாவது ஆண்டு ஆரம்பமாகும் 22.02.2006 இல் ஒப்பந்தம் குறித்து இந்த இரண்டு தரப்பும் ஜெனிவாவில் பேசப்போகின்றன.

### மஹிந்தவும் அதேவழியில்

கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக சிங்களத் தலைமைகள் தமிழ்த் தலைவர்களை முறியடிக்க எவ்வாறெல்லாம் திட்டமிட்டு செயல்பட்டார்களோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவர்களுக்கு எவ்வகையிலேனும் குறைந்தவர் அல்லர் என்பதையே களநிலைமைகள் எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காணப் போகிறீர்கள் என முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியிடம் கேட்கப்பட்டபோது ''தமிழர்களின் மண்டைகளை நொறுக்கப் போகின்றோம்'' என்பதுதான் அவரது பதிலாக இருந்தது.



1980களின் மத்தியில் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமிழருக்கு எதிராக எந்தப் பிசாசுடனும் கூட்டுச் சேரத் தயாராக இருப்பதாகத் தெரிவித் திருந்தார்.

இவர்களைப் போலவே இன்றைய ஜனாதிபதியும் தமிழனீர- தமிழ்த் தலைமையை முறியடிக்க பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறார். பயிற்சிப் பட்டறை, வெளிநாட்டு நிபுணத்துவ ஆலோசனைகள், சர்வதேச அரசியல் அரங்கில் ராஜதந்திர காய் நகர்த்தல்கள்- இவ்வாறு மதியுரைஞர் பாலா தலைமையிலான தமிழ்த் தரப்பை ஜெனிவாவில் எதிர்கொள்வதற்கு அலரி மாளிகை ஆரவாரப்படுகிறது. உயர்மட்டத்தில் ஊன் உறக்கமின்றி விடுதலைப் புலிகளை மட்டந்தட்ட சதிவலை பின்னப்படுகிறது.

1980களின் மத்தியில் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமிழருக்கு எதிராக எந்தப் பிசாசுடனும் கூட்டுச் சேரத் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இவரைப் போலவே இன்றைய ஜனாதிபதியும் தமிழரை- தமிழ்த் தலைமையை முறியடிக்க பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறார். பயிற்சிப் பட்டறை, வெளிநாட்டு நிபுணத்துவ ஆலோசனைகள், சர்வதேச அரசியல் அரங்கில் ராஜதந்திர காய் நகர்த்தல்கள்- இவ்வாறு மதியுரைஞர் பாலா தலைமையிலான தமிழ்த் தரப்பை ஜெனிவாவில் எதிர்கொள்வதற்கு அலரி மாளிகை ஆரவாரப்படுகிறது. உயர்மட்டத்தில் ஊன் உறக்கமின்றி விடுதலைப் புலிகளை மட்டந்தட்ட சதிவலை பின்னப்படுகிறது.

### அப்போதும் இப்போதும்

விடுதலைப் புலிகளின் தலைவர் ஜனவரி மாதம் 25 ஆம் திகதி யுத்த நிறுத்தம் குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வன்னியில் இணக்கம் தெரிவித்தபோது ஒப்பந்தத்தை பலப்படுத்துவது குறித்துப் பேசுவதற்கே இணக்கம் தெரிவித்து இருந்தார். அதை அப்போது ஏற்றுக்கொண்ட அரசாங்கம், ஒப்பந்தத்தை திருத்துவது குறித்தே ஜெனிவாவில் பேசுவதற்கு இப்போது ஆயத்தமாகிறது. அ[illegible] பால் பேச்சுவார்த்தை நகர்வதற்கு வாய்ப்

பில்லை என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் 22.02.2002 இல் கைச்சாத்தானது. ஆனால் சமாதான முயற்சிகள் மாலுமி இல்லாக் கப்பல் போல செல்லும் திசை தெரியாது தடுமாறுகின்றதே ஒழிய குறிப்பிடத்தக்க தூரத்துக்காவது முன்னேறவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரியில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

* விடுதலைப் புலிகளை தனது வஞ்சகத் திட்டத்திற்கு இணங்க வைப்பதற்கு சர்வதேச வலைப்பின்னலைப் பின்னியதன் மூலமும்

* இதோ நாட்டுக்கு வந்தது பேராபத்து என்று கூப்பாடு போட்டு, ரணிலின் அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க விடாமல் தடுப்பதற்கு தில்லு முல்லு பண்ணியதன் மூலமும்

ரணிலும், சந்திரிக்காவும் சமாதான முயற்சிகளுக்கு ஆப்பு வைத்தனர்.

இப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தனது தேர்தல் கால மஹிந்தவின் பேரினவாத சிந்தனைகளுக்கு இசைவாக ஜெனிவா பேச்சுகளை முன்நகர்த்த முயல்வதன் மூலம் அமைதி முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முற்படுகிறார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை திருத்துவ திலேயே உறுதியாக இருக்குமாறு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள விருக்கும் அரசாங்கத் தூதுக்குழுவினரிடம் ஜனாதிபதி மஹிந்த கேட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் கிசுகிசுக்கின்றன.

### விடுதலைப் புலிகள் உஷார் நிலையில்

இவ்வாறான ஒரு நகர்வை அரச தரப்பு முன்னெடுக்குமாயின் விடுதலைப் புலிகள் எவ்வாறு நடந்து கொள்ளுவார்கள் என்பது ஊரறிந்த விடயம். அவர்கள் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். எப்போதும் உஷாராகவே இருப்பார்கள்.

ஒட்டுப்படைகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் நினைவஞ்சலி நிகழ்வில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு இராணுவ பிரிவு தளபதி பானு,

''ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைந்து நிராயுதபாணியாக்குவதும் மக்களின் வாழ்வில் அமைதியை எற்படுத்துவதுமே சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்திடம் இன்று நாம் எதிர்பார்ப்பவை. ஆனால் இவற்றை ஸ்ரீலங்கா அரசு நடைமுறைப்படுத்தப் போவதில்லை''- என்று தெரிவித்திருந்தார்.

அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரைச் சந்தித்துப் பேசிய புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு அமைவாக ஒட்டுப்படைகளின் ஆயுதங்களை அரசாங்கம் களைய வேண்டும் எனவும் உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்கள் குடியேற அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

### அரசின் சிந்தனை

ஆனால் அரசாங்கமோ யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துகள் குறித்து வித்தியாசமான அணுகுமுறையையே ஜெனிவா பேச்சுவார்த்தைகளின் போது கையாளத் தீர்மானித்துள்ளது.

சுபாஷ்

இடம்பெற இருக்கும் பேச்சுவார்த்தைகள் குறித்து ஜனாதிபதிக்கும் அரசாங்கத் தூதுக்குழுவினருக்கும் ஆலோசனை வழங்கும் கடும்போக்காளரான எஸ்.எல். குணசேகர- ஒட்டுப் படைகள் குறித்து விசேடமாக கருணா தரப்பு குறித்து பேச்சுவார்த்தை மேசையில் பேசுவதற்கு அனுமதிக்கக்கூடாது என்று தெரிவித்திருக்கிறார். யுத்த நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டபோது இவ்வாறானதொரு குழு இல்லாமையே அதற்கான காரணம் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அரச தூதுக்குழுவும் எஸ்.எல்.குணசேகரவிடமிருந்து உள்வாங்கிக் கொண்ட சிந்தனைகளுடனேயே பேச்சுவார்த்தை மேசைக்கு செல்லவிருக்கிறது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னர் அமைக்கப்பட்ட எந்த ஆயுதக்குழுவும் தொடர்ந்து இயங்க முடியும் என்பதும், ஆயுதக் குழுக்கள் பற்றி ஒப்பந்தம் கூறிய போதும் அது ஒப்பந்தம் கைச்சாத்திட்ட போது நடமாடிய ஆயுதக்குழுக்களைப் பற்றி மட்டுமே பேசுகின்றது என்பதுமே அரசாங்கத்தின் தற்போதைய நிலைப்பாடாக இருக்கிறது.

எனவே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் உருவாக்கப்பட்ட ஆயுதக் குழுக்களிடமுள்ள ஆயுதங்கள் களையப்பட்டு அவை நிராயுதபாணிகளாகக்கப்பட வேண்டுமாயின் ஒப்பந்தம் திருத்தப்பட வேண்டும் என்ற வாதத்தையே அரச தூதுக்குழு ஜெனிவாவில் முன்வைக்கப்போகிறது.

இந்தப் பின்னணியில் எமக்கு ஒரு விடயம் தெளிவாகப் புரிகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது அமுலில் உள்ள யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்துகள் சிலவற்றை தனக்குச் சாதகமாகத் திருப்பி புலிகளின் மீதான பிடியை இறுக்குவதற்கான வழிவகைகளையே நாடி நிற்கிறார் என்பதே அது.

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘புலி வேட்டை’ என்ற பெயரில்...

கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் தலைவிரித்தாடிய கொலைக் கலாசாரம் இப்போது ஓய்வுக்கு வந்திருக்கின்றது.

உயிருக்கு அஞ்சி எப்போ என்ன நடக்குமோ என்ற பீதியில் இயங்கிக் கொண்டிருந்த யாழ்ப்பாணம் அந்த ஆபத்துக் கட்டத்திலிருந்து ஓரளவுக்கு விடுபட்டிருக்கின்றது. ஆனால் கொலைகள் ஆரம்பமான கையோடு அவற்றுக்கு சமாந்தரமாக தலைதூக்கிய கொள்ளைகள் இன்னும் ஓய்ந்தபாடில்லை.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை ஜெனிவாவில் நடத்துவதற்கு இருதரப்பும் உடன்பாடு கண்ட பின்னர் - கடந்த மாதம் நடுப் பகுதியுடன் - வடக்கு - கிழக்கில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் துப்பாக்கிச் சத்தங்கள் மௌனித்துவிட்டன. ஆனால், துப்பாக்கி வேட்டுக்களை விடவும் மோசமானவை என வர்ணிக்கக் கூடிய கொள்ளைச் சம்பவங்கள் இன்னமும் நின்றுவிடவில்லை.

சில வாரங்களாக கொலைகள் - குண்டு வெடிப்புக்கள் தொடர்பான செய்திகளை எதிர்பார்த்தபடியே செய்தித் தாள்களைப் புரட்டிய யாழ் மக்கள் இப்போது அதிலிருந்து விடுபட்டு "நேற்று எத்தனை கொள்ளைகள் நடந்தேறினவோ?" என்ற ஏக்கப் பெருமூச்சுடன் தான் பத்திரிகைகளை படிக்கத் தொடங்குகின்றார்கள்.

"ஆயுத முனையில் பொருள்கள் கொள்ளை", "கத்தி முனையில் நகைகள் சூறை" என்றவாறு அதிர்ச்சி சம்பவங்களால் உறைந்து போயிருக்கிறது யாழ்ப்பாணம்.

இத்தகைய கொள்ளைகள் எப்போது தங்கள் வீடுகளில் - வசிப்பிடங்களில் - தொழில் தலங்களில் நடக்குமோ என்ற அச்சத்தில் தினம் தினம் இரவுப் பொழுதை உறக்கமின்றிக் கழிக்கும் குடும்பங்கள் குடாநாட்டில் ஏராளம்.

பெரும்பாலும் சுமார் 5 முதல் 10 பேர் வரையானோர் குழுக்களாக இணைந்து இந்த கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர். பெரும்பாலும் நள்ளிரவு தாண்டி விடிகாலைப் பொழுதில் வலு லாவகமாக கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர்.

இதில் மக்களை ஆச்சரியத்திற்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியிருக்கின்ற விடயம் என்னவென்றால் கொள்ளையிட வருபவர்கள் ஆயுததாரிகளாக இருப்பது தான்.

சாதாரண கைக்குண்டுகள் தொடக்கம் கைத்துப்பாக்கிகள், ஏ.கே.ரகத் துப்பாக்கிகள் வரை பல வகையான ஆயுதங்களையும் பயன்படுத்தி - அவற்றைக் காட்டி - மிரட்டி ஆயுத முனையில் அப்பாவி மக்களை அடக்கி விட்டு - தங்கள் எண்ணப்படி வீடுகளில் மூலை முடுக்கெல்லாம் சல்லடை போட்டு நல்லது எது, கெட்டது எது, தரம் குறைந்தது எது, கூடியது எது என்று பார்த்துப் பார்த்து எடுத்துக் கொண்டு செல்கின்றார்கள்.

ஆயுதங்களைக் கண்டவுடன் உயிருக்குப் பயந்து மூச்சுக் கூட விட முடியாமல் வீட்டு உரிமையாளர்கள் பயந்து நடுங்க, அவர்களை எங்காவது ஓர் அறையில் வைத்துப் பூட்டி விட்டு இரவோடிரவாக - ஆற அமர - அவசரப்படாமல் - வழித்துத் துடைத்துக் கொண்டு விடிகாலையில் தலைமறைவாகி விடுவது யாழ்ப்பாணக் கொள்ளையர்களின் தனிப்பாணி ஆகிவிட்டது.

இதையும் மீறி வீட்டில் உள்ளவர்கள் கத்தினாலென்ன கூக்குரலிட்டாலென்ன அயலவர்கள் எவரேனும் துணைக்கு வரவா போகிறார்கள்? அது தான் நடக்காதே!

இரவில் அயல் அண்டையில் கொலை தான் நடந்தாலும் என்ன? ஏது? என்று பார்க்க கதவைத் திறந்து வெளியில் வரத் திராணியற்றுப் போயிருக்கிறார்கள் யாழ் மக்கள்.

பெரும்பாலும் சீருடையினர் போன்று வேடமிட்டு முகத்தைக் கறுப்புத் துணியால் கட்டிக் கொண்டு நள்ளிரவில் கதவை தட்டுகின்ற கொள்ளைக் கும்பல்கள் வீட்டை சோதனையிடப் போவதாக வீட்டுக்காரர்களிடம் கூறிவிட்டே தமது கைங்கரியத்தை ஆரம்பிக்கின்றனர்.

"புலிவேட்டை" என்ற பெயரால் ஆயுதக் கும்பல்கள் செய்கின்ற இத்தகைய அட்டூழியங்கள் குடாநாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

கடந்த மாதம் மட்டும் இதுபோன்ற பத்துக்கும் மேற்பட்ட பெரும் கொள்ளைச் சம்பவங்கள் நடந்தேறியிருக்கின்றன.

கடந்த மாத இறுதிப்பகுதியில் - 28ஆம் திகதி கல்வியங்காடு, புதிய செம்மணி வீதியிலுள்ள வீடொன்றில் நள்ளிரவு நேரம் நுழைந்த சுமார் 10 பேர் கொண்ட திருடர் கோஷ்டி அங்கிருந்து எடுத்துச் சென்ற நகைகளின் பெறுமதி ருபா 30 லட்சம்.

எதிர்காலம் பற்றிய கனவுகளுடன் வாயைக் கட்டி வயிற்றைக்கட்டி சிறுகச் சிறுகச் சேமித்து வைத்த சொத்துக்களை ஓரிரவில் பறிகொடுத்துவிட்டு இடிந்துபோயிருக்கின்றன இவ்வாறான பல குடும்பங்கள்.

இந்தக் கொள்ளையில் ஈடுபடுகின்றவர்கள் சீருடையினர்தான் என்பது இதுவரையில் உறுதியாக நிருபிக்கப் பட்டாவிட்டாலும் இக்கொள்ளைகள் இடம்பெறுகின்ற விதங்கள் - சூழல்கள் - பின்னணிகளை நோக்குகின்ற போது இவற்றில் படையினருக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்பு இருக்கலாம் என்று மக்கள் சந்தேகிக்கின்றனர். அதிலும் நியாயம் இல்லாமலில்லை.

ஏனெனில், கடந்த சில மாதங்களாக இரவில் வீதிகளில் இறங்கி நடமாட மக்கள் தயங்குகின்றார்கள். தங்கள் கடமைகளை முன்னிரவோடு முடித்துக்கொண்டு முடங்கிக் கொள்ளப் பழகிவிட்டார்கள் குடாநாட்டு மக்கள்.

நிலைமை இப்படியிருக்கையில் நள்ளிரவில் குழுக்களாக இணைந்து முகத்தை கறுப்புத் துணியால் கட்டி உருமறைப்புச் செய்துகொண்டு குறிப்பிட்ட ஒரு பிரிவினர் கொள்ளையில் ஈடுபட்டுத் தப்பிக்கிறார்கள் என்றால், சீருடையினரின் ‘ஆசீர்வாதம்’ இல்லாமல் அது முடியாது.

அதிலும் இராணுவத்தினரின் முகாம்களுக்குச் சமீகமாக உள்ள வீடுகள் சிலவற்றிலும் அண்மையில் பெரும் கொள்ளைகள் இப்படி இடம்பெற்றிருக்கின்றன.

அது மட்டுமன்றி இரவில் வீடுகளுக்குச் செல்லுகின்ற கொள்ளையர்கள் தமிழிலும் சிங்களத்திலும் சரளமாக பேசிக்கொள்கின்றார்கள் என்று மக்கள் கூறுகின்றார்கள்.

இதனை விட தாங்கள் கொள்ளையடித்துக்கொண்டு செல்லும்போது வழியில் பொலீஸாரிடமோ படையினரிடமோ சிக்கி விடுவோமோ என்ற பதற்றத்தையும் பயத்தையும் அவர்களிடம் துளிகூடக் காணமுடியவில்லை என்ற தகவலும் வெளியாகியிருக்கின்றது.

இவற்றை வைத்துப் பார்க்கின்றபொழுது கொள்ளையர்களுக்கு இறுக்கமான ஒரு பின்னணி இருக்கலாம் என்ற மக்களின் சந்தேகம் வலுவடைவதையும் உணரலாம்.

கொழும்பு போன்ற பிரதேசங்களில் இயங்கிவருகின்ற பாதாள உலகக்கும்பல்கள் இப்போது குடாநாட்டிலும் முளைவிடத் தொடங்கியிருக்கின்றன என்ற கவலையும் மக்களிடம் எழுகிறது.

அங்கும் கூட பாதாள உலகக் கும்பல்களுக்கு அரசியல்வாதிகள் மற்றும் பிரமுகர்களின் தொடர்பு - பின்னணி - இருக்கின்றமை அவ்வப்போது உறுதிப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது.

**- யாழ்ப்பாணி -**

அந்த வகையில் வலுவான ஒரு பின்னணியோடு யாழ்ப்பாணத்திலும் இத்தகைய குழுக்கள் தோன்றி வருவதை மறுக்கமுடியாது.

இந்த விடயத்தில் பொறுப்புள்ள சகல தரப்பினரும் விழித்துக்கொள்ளவேண்டிய தேவை இருக்கிறது.

தமிழர் தாயகத்திலும் பாதாள உலகக் கும்பல்கள் உருவெடுப்பதைப் பார்த்துக்கொண்டிராமல் அவற்றை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டியது அவசியமாகும். இந்தக் கைங்கரியத்தைக் காலம் தாழ்த்தாது செய்து மக்களைப் பாதுகாக்கவேண்டிய காலத்தின் கட்டாயத்தைச் சம்பந்தப்பட்டோர் உடனே நிறைவேற்ற முன்வராவிட்டால் நிலைமை மோசமாகி குடாநாடு பாரிய சீரழிவை எதிர்நோக்குவதைத் தடுக்கமுடியாது போய்விடும்.


## 5000 Scholarship programme 2006
## இலவச தபால் மூல ஆங்கிலப் பாடநெறி.

**தொழில் புரிபவர்கள் தொழில்வாய்ப்புகளை எதிர்பார்த்திருப்போர் பாடசாலை மாணவர்கள் இல்லத்தரசிகள் யுவதிகள் என அனைவரும் வீட்டிலிருந்தவாறே ஆங்கிலம் கற்கலாம்.**

**இலங்கையில் முன்னணி தபால் மூல கல்வி நிலையமான Jeffwoolar Educational Institute அகில இலங்கை ரீதியில் 5,000 மாணவர்களுக்கு இலவசமாக ஆங்கிலம் கற்பிக்கவுள்ளது.**

தொழில் புரிபவர்கள், தொழில் வாய்ப்புகளை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகள்,பாடசாலை மாணவர்கள், இல்லத்தரசிகள் என அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

இது 45 நாட்களைக் கொண்ட குறுகிய கால தபால்மூல பாடநெறியாகும். இத் திட்டத்தின்கீழ் பாடநெறியைத் தொடரும் ஒவ்வொரு மாணவரும் 45 நாட்களில் சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கு, எழுதுவதற்கு பயிற்சி அளிக்கப்படுவர்.

**ஏறக்குறைய 10 வருடங்களாக தபால் மூலம் கல்வி கற்பிப்பதில் முன்னணி வகித்துவரும் எம்மிடம் இதுவரை 25,000 இற்கு அதிகமான மாணவர்கள் கல்வி கற்று, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புகளை பெற்றுள்ளனர்.**

இத் தபால்மூல ஆங்கிலப் பாடநெறியைத் தொடர வயது எல்லை இல்லை.

### பாடநெறி பற்றிய விபரம்

இத் தபால்மூல ஆங்கிலப் பாடநெறியில் 12 பாடப்புத்தகங்கள் உள்ளன. பாடப்புத்தகங்கள் கணினி மூலம் நவீன தொலைக்கல்வி முறைகளைக் கொண்டு தயாரிக்கப் பட்டவையாகும். மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வாரத்திற்கு 2 விகிதம் அனுப்பப்படும்.

**ஆங்கில பேச்சுப் பயிற்சி, வீடு கேட்டு எழுதுதல், இலக்கணம், கடிதம் எழுதுதல், கட்டுரைகள், குறுக்கெழுத்துப் போட்டி என்பவற்றைக் கொண்டதாக அமையும்.**

உங்களுக்கு அனுப்பப்படும் பாடப் புத்தகத்தில் காணப்படும் பயிற்சிகளுக்கு நீங்கள் விடை எழுதி பதிவு இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். அவைகள் பிழை திருத்தப்பட்டு, உங்களுக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்படும்.

பாடநெறியை சிறப்பாகக் செய்ய தினசரி 45 நிமிடங்கள் பாடங்களைக் கற்றல் வேண்டும். பாடநெறியில் காணப்படும் பயிற்சிகளைச் செய்து அனுப்புதல் வேண்டும்.

### சான்றிதழ் பற்றிய விவரம்

தபால்மூல ஆங்கிலப் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு-

**45 நாட்களின் முடிவில் Diploma In English- சான்றிதழ் வழங்கப்படும்.**

எமது நிறுவனத்தினால் வழங்கப்படும் சான்றிதழானது தொழில்வாய்ப்புகளைப் பெற உதவும்.

### இலவசம்

பாடநெறியைத் தொடர விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பின்வருவன இலசவமாக வழங்கப்படும்.

- Lamainated Hand Bag
- சிங்கள பேச்சுப் பயிற்சி
- அரபு பேச்சுப் பயிற்சிப் புத்தகம்
- Student Identity Card

அடையாள அட்டை பெற விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவத்துடன் 2 முத்திரை அளவிலான Photo களை இணைத்து அனுப்பவும்.

அடையாள அட்டை பெறுவது கட்டாயமில்லை.

### பதிவு பற்றிய விவரம்.

தபால்மூல ஆங்கிலப் பாடநெறியைத் தொடர விண்ணப்பிக்கும் மாணவர்கள் பதிவுக் கட்டணம் ரூ.600/- செலுத்துதல் வேண்டும். கீழே தரப்படும் மாதிரி விண்ணப்பப் படிவம் ஒன்றை எழுதி பதிவுக் கட்டணம் ரூ.600 /- ஐ

Commercial Bank- 84- 8001-6370
Seylan Bank 0170-0191-7524-101
HNB - 4157-3850-2904-0001

வங்கியில் Romzan ,Director Jei கணக்கில் பணம் செலுத்தி ரசீதை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பவும்.

அல்லது **Director Jei** என்ற பெயருக்கு ரூ.600.00 பெறுமதியான **Money Order** ஒன்றை இணைத்து அனுப்பவும். பாடத் தொகுதிகள் வீட்டுக்கே அனுப்பப்படும்.



.அல்லது மாதிரி விண்ணப்பப் படிவம் ஒன்றை எழுதி ரூ.5 பெறுமதியான முத்திரைகள் 6 இணைத்து அனுப்பவும். பாடத்தொகுதிகள் வீட்டுக்குக் கிடைக்கப்பெற்றதும், பதிவுக் கட்டணம் ரூ.600/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

பாடத்தொகுதிகள் வாரத்திற்கு 2 விகிதம் வீட்டுக்கே அனுப்பப்படும். வேறு கட்டணங்கள் இல்லை.

### விண்ணப்ப முடிவுத் திகதி

அகில இலங்கை ரீதியில் 5,000 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவதால் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

## 31-03-2006

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

Name-பெயர்:....................
Address -முகவரி: ...............
Date of birth-பிறந்த திகதி : ...
T.P.No -தொ.பே இல
Sex-இனம் :..........
Course fee paid by :
Bank ☐ M.o.☐ V.p.p.☐
Date ..... Signature. ..........

தயவுசெய்து மேற்தரப்பட்ட விவரங்களைத் தெளிவாக ஒரு தாளில் எழுதிப் பாடநெறிப் பதிவுக் கட்டணத்துடன் பதிவுத் தபால்மூலம் அனுப்பவும்.

**JEI INSTITUTE**
P.O.BOX.119,KANDY. Tel: 0812 201480

அழையுங்கள்: Rosan. 0777-806 606


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபது கோடி வேண்டுமாம் சந்திரிக்காவுக்கு

அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்திரிக்கா சந்தித்த போது தான் ஜனாதிபதியாக இருந்த கடைசிக் காலத்தில் கையெழுத்திட்டுக் கொடுத்த ரூபா 60 கோடி பெறுமதியான காசோலையை செல்லுபடியானதாக்கித் தருமாறு கேட்டுக் கொண்டாராம்.

சந்திரிக்கா ஜனாதிபதி பதவியை விட்டு விலகிச் செல்லவேண்டி இருந்த போது அவசரம் அவசரமாக 60 கோடி ரூபா பெறுமதியான இந்தக் காசோலையை தனியார் நம்பிக்கை நிதியம் ஒன்றுக்கு வழங்கி இருந்தாராம். இதற்கான பணம் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பெறப்பட இருந்ததாம்.

தற்போதைய ஜனாதிபதி பதவி எற்றதும் இந்தக் காசோலையை பற்றிய விவரம் அவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அவர் நம்பிக்கை நிதியம் பணம் பெற்றுக் கொள்ள முடியாதவாறு வங்கியுடன் ஏற்பாடுகளைச் செய்து கொண்டாராம்.

இந்தக் காசோலையையே மீண்டும் செல்லுபடியாக்கி 60 கோடி ரூபாவை அந்த நம்பிக்கை நிதியம் பெற்றுக் கொள்வதற்கு ஆவண செய்யுமாறு மஹிந்தவை கேட்டுக் கொண்டாராம் சந்திரிக்கா.

இவ்வாறு கேட்டுக் கொண்ட போது இன்னொரு விடயத்தையும் மஹிந்தவுக்கு ஞாபகப்படுத்த சந்திரிக்கா தவறவில்லையாம்.

"நான் உங்களை முதன் முறையாக நாட்டின் பிரதமராக்கிய போது பலர் என்னை எச்சரித்தனர். துரதிர்ஷ்டவசமாக நான் கொல்லப்பட்டால் என்று என்னை பயமுறுத்தினர். நீங்கள் ஜனாதிபதியாக பதவியை கைப்பற்றுவீர்கள் என்று என்னைப் பயமுறுத்தினர். இப்போது அதே ஆட்கள் தான் உங்கள் அமைச்சரவையில் இருக்கிறார்கள்" இப்படிச் சொன்னார் சந்திரிக்கா.

சந்திரிக்கா சொன்னதைக் கேட்டு முறுவலித்த ராஜபக்ஷ

"அம்மணி நீங்கள் என்னை பிரதமராக்கியது உண்மை. ஆனால் ஜனாதிபதி தேர்தலில் என்னைத் தோற்கடிப்பதற்கு உங்களால் இயன்றவரை முயற்சி செய்தீர்கள். எனினும் தேர்தலில் நான் தான் வெற்றி பெற்றேன்" என்று பதிலடி கொடுத்தார்.

ஆனால் சந்திரிக்கா விட்டுவிடவில்லை. அடுத்த அணு குண்டை தூக்கிப் போட்டார்.

நாடாளுமன்றத்திற்குள் அத்தகைய உறுப்பினராக நுழைவதே எனது அடுத்த இலட்சியம் என்று சொல்லி தனது அணுகுண்டைப் போட்ட போது மஹிந்த அதிர்ந்த போனாராம்.

இருப்பினும் மஹிந்த தன்னை ஒருவாறு சுதாரித்துக் கொண்ட போது ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைவராக வரும் எண்ணம் உங்களுக்கு உண்டா என சந்திரிக்கா தொடர்ந்து கேட்டார்.

"எனக்குத் தெரியாது. இதுவரை அது பற்றிய முயற்சியில் நான் ஈடுபடவில்லை" என்று பதிலளித்தாராம் மஹிந்த.

# சிரிப்போ சிரிப்பு

அரசாங்க வட்டாரங்களைச் சுற்றிவரும் நகைச்சுவையான விடயம் ஒன்று அனைவரையும் கலகலப்பில் ஆழ்த்தி உள்ளதாம்.

ஜெனிவா பேச்சுவார்த்தைகளுக்கு அரச தூதுக் குழுவுக்கு தலைமை தாங்க இருக்கும் நிமால் ஸ்ரீபால டீ சில்வாவைப் பற்றிய நகைச்சுவை செய்தியே அது.

விடுதலைப் புலிகள் 25 கேட்டால் அமைச்சர் 40 கொடுப்பார் என ஜே.வி.பியினர் கூறிச்சிரிக்கிறார்களாம்.

2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் இடம் பெற இருந்த நேரத்தில் ஜே. வி. பியினருக்கு எத்தனை தேர்தல் தொகுதிகள் பங்கிடப்பட வேண்டும் என்பதை தீர்மானித்து ஒதுக்கும் பொறுப்பு சந்திரிக்காவால் நிமால் ஸ்ரீபால டி சில்வாவுக்கு வழங்கப்பட்டதாம்.

அப்போது ஜே.வி.பியினர் தமக்கு 25 ஆசனங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வாவிடம் கேட்டார்களாம்.

அவ்வேளையில் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் ஸ்ரீ.ல.சு.கட்சி சார்பில் போட்டியிடக் கூடிய தகுதி வாய்ந்த எவரும் இருந்ததாக அமைச்சருக்குத் தெரியவில்லையாம். அதனால் ஜே.வி.பியினர் கேட்டதிலும் பார்க்க 15 மேலதிக ஆசனங்களை அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்தாராம் அவர். ஜே.வி.பியினர் அத்தேர்தலில் தமக்கு ஒதுக்கப்பட்ட 40 ஆசனங்களில் 39 ஆசனங்களில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் பலம் வாய்ந்த சக்தியாக உருவெடுத்துள்ளார்கள்.

அமைச்சர் ஸ்ரீபாலடி சில்வாவிடம் இப்போது விடப்பட்டுள்ள புதிய பொறுப்பு குறித்து அரசாங்க மட்டத்தில் கடும் கடுகடுப்பு நிலவுகிறதாம். டாக்டர்கள், தாதியர் மற்றும் ஆஸ்பத்திரி பணியாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாத ஒரு அமைச்சரால் ஜெனிவா பேச்சுகளை எப்படி சரியான திசையில் முன்னெடுக்க முடியும் எனப் பலர் கேட்கிறார்களாம்.

# பயிற்சிப்பட்டறை

ஜெனிவா பேச்சுகளுக்கு முன்னோடியாக ஜனாதிபதி செயலகத்தில் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையில் அரசியல் கட்சித் தலைவர்கள் இராணுவ உயரதிகாரிகள் பேச்சுவார்த்தைக்கான ஆலோசகர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் நிவாட் கப்ராயின் அறிமுக உரையுடன் பயிற்சிப் பட்டறை ஆரம்பமானது. அவரைத் தொடர்ந்து ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க உட்பட பலர் உரையாற்றினர்.

தலைவி பேரியல் அஷரப் தனது உரையின் போது யுத்த நிறுத்த ஒப்பந்தம் கிழக்கில் உள்ள முஸ்லிம்களை கவனத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்றார். ஸ்ரீலங்கா தூதுக்குழுவினர் முஸ்லிம்களின் அபிலாசைகளைக் கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா எல்.ரீ.ரீ.ஈ. யினர் சமாதானம் எட்டப்பட வேண்டும் என்பதற்காகவே பேச்சுவார்த்தைகளுக்கு வரவில்லை என்றும் அரசாங்கத்தை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுவதே அவர்களின் நோக்கம் என்றும் குறிப்பிட்டார்.

சமாதானத்தை எட்டுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொள்ளும் நேர்மையான முயற்சிகளுக்கு தனது குழு ஆதரவு உண்டென்றும் அவர் மேலும் தெரிவித்தார். அமைச்சர் ஸ்ரீமத் சூரியாராச்சி அங்கு பேச்சுவார்த்தையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பலப்படுத்த வேண்டுமானால் அதில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்றும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பாவித்து எல்.ரீ.ரீ.ஈ. யினர் தம்மை நன்கு பலப்படுத்திக் கொண்டனர் என்றும் கூறினர்.

# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

ஜெர்மனியில் உள்ள லைப் சிக் நகரத் தலைமை நீதிபதியாக 1620 முதல் 1666 வரை பெனடிக்ட் என்பவர் இருந்தார்.

அவரால் மரண தண்டனை விதிக்கப் பட்டவர்கள் 30ஆயிரம் பேர். சிறு குற்றங் களுக்குக்கூட இரக்கமின்றி மரண தண் டனை கொடுப்பார். ஒவ்வொரு குற்ற வாளிக்கும் தூக்குப் போடும்போதும் தானே நேரில் பார்வையிடுவார்.

உயிரைத் துரும்பாக கருதிய இவர் கடவுள் பக்தி மிகுந்தவர். ஒழுங்காகக் கோயிலுக்குப் போவார். பைபிளை 50 முறை முழுவதுமாக படித்தவர். தான் வளர்த்து வந்த நாய் இறந்து போன போது துக்கம் தாங்க முடியாமல் நாய் இறந்து சில நிமிடங்களில் தானும் உயிரை விட்டார்.

* * *

மே மாத வெயிலில் டெல்லி வெந்து கொண்டிருந்தது. சாலை ஓரமுள்ள தண்ணீர் பந்தல் முன் பேருந்து ஒன்று வந்து நின்றது. பயணிகள் வேகமாக இறங் கினார்கள் பந்தல் மூடிக்கிடந்ததால், பயணிகள் தாகத்தால் தவித்தனர்.



அப்போது அந்த வழியே வந்த ராஜேந்திரப் பிரசாத், காரை நிறுத்தச் சொல்லி, கீழே இறங்கினார். தண்ணீர் பந்தலின் பூட்டை உடைக்கும்படி டிறைவரிடம் சொன்னார். பூட்டை உடைத் ததும் உள்ளே சென்று தண்ணீர் வழங்குப வர் இருக்கும் இடத்தில் அமர்ந்து, பயணிக ளுக்கு குடிநீர் வழங்கினார். இதற்கு 30 நிமிடம் ஆயிற்று. எல்லாப் பயணிகளுக் கும் தண்ணீர் கொடுத்துவிட்டுத் தான் ராஜேந்திரபிரசாத் சென்றார்.

அப்போது ராஜேந்திரபிரசாத் இந்தியா வின் ஜனாதிபதியாக இருக்கிறார்!

* * *

அரசியல் தலைவர்களின் அலுவலகங் களில், அவரவர் அரசியல் முன்னோடிக ளின் படங்கள் இருக்கும். தாயகத்தில் பெரியார், அண்ணா படங்கள் இருந்தாலும் வைகோவின் இருக்கை அருகில் இடம் பிடித்து இருப்பவர்கள் யார் யார் தெரியுமா? அய்யன் வள்ளுவரின் ஓவியமும் அன்னை தெரெசா படமும் தான்.

கூடவே, சங்கு முழங்கும் தமிழ் விரனின் கலை நேர்த்தியான கற்சிலையும் இருக்கிறது.


* * *



2006 புத்தாண்டுக்கு இத்தாலியில் அறிமுகமாகி இருக்கும் உடை, இது. ரோஜா இதழ் போன்ற மெல்லிய துணியில் தைக்கப்பட்டுள்ளது. இதன் விலை ரூ.60 ஆயிரம்!

* * *

1944ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டுது. அதனால் உணவு விடுதிகளில் இட்லி விற்கக்கூடாது என்று அரசாங்கம் தடை விதித்தது. அப் போது "குமரன்" என்னும் பத்திரிகை, "இட்லிக்கு வந்தது இடர்" என்னும் கடைசி அடி கொடுத்து வெண்பா (பாட்டு) இயற்றும் போட்டி வைத்தது. அதில் பரிசு பெற்ற ஒரு பாடல்:



வாராத பஞ்சமிங்கு வந்திடுமோ என்றஞ்சி
ஆராய நேரமின்றி அவசரமாய் - பாராள்வோர்
இட்டதொரு சட்டத்தால் எங்கும் மலிந்திருக்கும்
இட்டலிக்கு வந்தது இடர்!

* * *

"சிவாஜி" படத்தில் ஏதாவதொரு பிரபலத்தை நடிக்க வைத்துவிட வேண்டும் என ரஜினி-சங்கர் ஆலோசனை செய் தனர். அப்போது "சானியாவிடம் கேட்டுப் பாருங்கள்" என ரஜினி சொன்னார்.



சங்கர் நேரடியாக சானியாவை சந் தித்து, ரஜினியின் விருப்பத்தைச் சொன்னார். ஆனால் சானியா, "மன்னிக் கவும்! எனக்கு நடிப்பில் ஆர்வம் இல்லை! ரஜினி என்னோடு ஜோடி சேர வேண்டு மானால், டென்னிஸ் விளையாட வரச் சொல்லுங்கள்!" என்று சொல்லி அனுப் பினார்.

* * *

ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் தென்கிழக்கு ஆசியாவிலே உயரமானது. இது கி.பி. 1530-1540க்குள் விஜயநகரப் பேர ரசின் அச்சுதராயரால் கட்டப்பட்டது.



இந்தக் கோபுரத் தின் முன்பக்க அக லம் 166 அடி. பக்க வாட்டில் அகலம் 97 அடி. கோபுரத்தின் உயரம் 236 அடி.

13 நிலைகள் கொண்ட இந்தக் கோபுரத்தின் உச் சியில் உள்ள கலசங் களின் எண்ணிக்கையும் 13தான். ஒவ்வொரு கலசத்தின் உயரம் 10.5 அடியும், சுற்றளவு 5.5 அடியும், எடை 135 கிலோவும் உள்ளது.

திருப்பணிகள் 1979இல் தொடங்கி 1987இல் நிறைவு பெற்றன. இக்கோபுரம் நம் தமிழ்நாட்டின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் ஓர் அற்புதச் சின்னம் என்பதில் சந்தேகமில்லை.

* * *

கைகளைத் தட்டுவதனால் 90சதவீத நோய்கள் குணமாகின்றன என்று சமீபத் திய மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

நமது உடல் உறுப்புகளின் நரம்பு நுனிகள் கைகளில் முடிவடைகின்றன. கைகளைத் தட்டுவதனால் ஏற்படும் உட லின் அதிர்வுகள், ரத்த நாளங்களில் உள்ள அடைப்புகளை நீங்கச் செய்வதுடன், அவற்றில் படிந்துள்ள கொழுப்பையும் போக்குகிறது. இதனால் இரத்த ஓட்டம் சீராக நிகழ்கிறது. உணர்வு[illegible]மன் செய்யப்படுகிறது.

நாள் ஒன்றுக்கு சுமார் 20 நிமிடங்கள் வரை கைகள் தட்டலாம். கை தட்டும் ஒலி பலமாகக் கேட்க வேண்டும் என்பதில்லை, ஓசையின்றியே பயிற்சி செய்யலாம்.

இப்பயிற்சியினால் ரத்த அழுத்த நோய், சக்கரை நோய் மற்றும் எலும்பு தொடர் பான நோய்கள் அனைத்தும் குணமாகின் றன என்று ஆய்வில் கண்டறியப்பட் டுள்ளது.

இக் கைதட்டும் பயிற்சியை உலக சுகாதார நிறுவனம் ஒரு புதுவித யோகா பயிற்சியாக அங்கீகரித்துள்ளது.

"செல்போன்"களால் மன அழுத்தம் அதிகமாகி இருக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்!

அலுவலகத்தில் வேலை முடித்து வீட்டுக்கு வருவார்கள். அல்லது, வெளியில் எத்தனையோ கோபதாபங்கள் இருக்கும். வீட்டுக்கு வந்து நிம்மதியாக இருக்க முடியாது. செல்போன் ஒலிக்கும்! எடுத்துப் பேசினால் பிரச்சினை தொடரும்! அல்லது புதுப் பிரச்சினை வரும்!! இதனால் ஓய்வு கெட்டுப் போகும்! மன அமைதி சிதைந்து போகும்!! இதன் காரணமாக மன அழுத்தம் அதிகமாகும்! மன அழுத்தத்தால் இரத்த அழுத்தம் அதிகமாகும்! மூளைக் குழப்பம் போன்ற நோய்கள் ஏற்படும்!

* * *

### உன்னதம் தேடு

*நிலவின் உன்னதத்தை*
*மேகத்தில் தேடு!*
*வாழ்க்கையின்*
*உன்னதத்தை*
*உணர்வுகளில் தேடு!*
*உறவுகளின் உன்னதத்தை*
*உள்ளத்தில் தேடு!*
*காலத்தின் உன்னதத்தை*
*விழிகளில் தேடு!*
*மகிழ்ச்சியின் உன்னதத்தை*
*மனதில் தேடு!*

* * *

சாதிக்கப்போகிறோம் என்கிற போது கணக்குகள் சரியாயினும் தப்பாயிலும் சாதிப்பது நிச்சயம் என்ற இலக்கை மட்டும் நோக்கிப் போ. அப்போது உன் நம்பிக்கை உனக்கு வெற்றியைத் தேடித் தருகிறது.

* * *



"எனக்கு சங்கீத கலாநிதின்னு பட்டம் கொடுக்கப்போறதா சொன் னீங்க. இப்போ 'சங்கீத கலா'ன்னு பட்டம் கொடுத்திருக்கீங்களே?"
"நிதி வசூலாகலே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஒரு பச்சோந்தியும் உத்தமியும்

ஆத்மராஜா றூத் சந்திரிக்கா

இடது கையைத் திருப்பி நேரம் பார்த்தேன். இன்னும் பதினைந்து நிமிடம் இருந்தது விமானம் தரை இறங்குவதற்கு. அஸின் சாயலில் பளிச்சென்று இருந்த விமானப் பணிப்பெண் பூவாய் சிரித்தாள்-அருகில் வந்தாள். "வண் மோ கூல் டவல் ப்ளீஸ்...." அன்னமாய் நடந்துபோய் எடுத்துத் தந்தாள். சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் பயணிகள் இறங்குவதற்கு உஷாரானார்கள்.

விமான அறிவிப்புகள் ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் மாறி மாறி ஒலித்தன. இரவுப் பயணம் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. அருகிலிருந்த தேவா அக்கா அனாயாசமாய் ஸ்வீட் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் எவ்வித பதற்றமும் இல்லாமல்.

விமான நிலையத்திற்கு ஸ்டான்லி எனும் மனிதர் வருவதாக தோமஸ் போல் சேர் எனக்கு மின்னஞ்சல் அனுப்பி இருந்தார். எனக்கு ஸ்டான்லியைத் தெரியாது. அவருக்கும் என்னைத் தெரியாது. அவர் கையில் 'கே என் எச்' எனும் வரவேற்பு அட்டை இருக்கும் என்பதுதான் தகவல். திடீரென எனக்கு சரோஜா மிஸ் இலங்கைக்கு வந்த சம்பவம் ஞாபகத்தில் வந்து பயங்காட்டியது.

சரோஜா மிஸ் இலங்கைக்கு வரும்போது தலைமை அலுவலகத்திலிருந்து ஓர் வாகனத்தை விமானநிலையத்திற்கு சாரதியுடன் அனுப்பி வைத்திருந்தார்கள்.

ஓர் பெரிய அட்டையில் நிறுவனப் பெயரை எழுதிக்கொடுத்து - வரவேற்பில் சாரதியை நிற்குமாறு சொல்லப்பட்டிருந்தது.

சரோஜா மிஸ் வந்தார் - விமானநிலைய வரவேற்பில் தேடிப் பார்த்தார். நிறுவனப் பெயர் கொண்ட வரவேற்பு அட்டையோடு எவரும் இல்லை. சுற்றும் முற்றும் தேடினார். இரவு நேரம். இறுதியாக தேடிக் களைத்து கொழும்பிலுள்ள தலைமை அதிகாரியோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டார். "மூன்று மணித்தியாளத்துக்கு முன்பதாகவே சாரதியுடன் வாகனத்தை அனுப்பிவிட்டேன். அவர் அங்கேதான் இருப்பார் தேடிப்பாருங்கள்" என்றார் அதிகாரி.

தேடிக்களைத்து ஓய்ந்துபோன பின் சரோஜா மிஸ் ஓர் இருக்கையில் அமர்ந்தார். தூக்கம் வந்தது. அவர் அருகில் இருந்த ஒரு வயோதிபரைத் தட்டி எப்படிச் செல்வது என வழிகேட்ட போதுதான் அதிர்ந்தார்.

அரைத் தூக்கத்திலிருந்தவரின் கையிலிருந்த வரவேற்பு அட்டை சரிந்து கிடந்தது. அவர் திடுக்கிட்டு எழுந்தபோதுதான் அவர் தான் தன்னை அழைத்துச் செல்ல வந்த வாகனச் சாரதி என்பதை அறிந்து சிரித்தார்.

இந்தச் சம்பவத்தை அடிக்கடி கூறிச் சிரித்துக் கொள்வார். இப்போது எனக்கு ஒரே பயம். இரவு பதினொரு மணியாகிவிட்டது. ஒரு வேளை வரவேற்க வந்த ஸ்டான்லியும் தூங்கியிருப்பாரோ? அவர் கையில் இருந்த வரவேற்பு அட்டை நழுவி விழுந்திருக்குமோ? இந்த இரவு நேரத்தில் பெங்களூர் விமான நிலையத்தில் சரீரம் பதற அவஸ்தைப்பட வேண்டி வருமோ?

பயந்து போனேன். நேரம் சரி. சட்டென விமானம் தரை இறங்கியது. பயணிகள் பரபரப்பானார்கள். கஸ்டம்ஸ் அலுவல்களை முடித்து வெளிவந்தபோது... வரவேற்பில் கம்பீரமாய் நின்றார் ஸ்டான்லி. பெரியதொரு 'கே என் எச்' வரவேற்பு அட்டையோடு. சினேகமாய் சிரித்தார்.

பதினாறு வயதுப் பெண்ணொருத்தி - "வெல்க்கம் டு பெங்களூர்" என பூவாய்ச் சிரித்து ஓர் சிவப்பு ரோஜா தந்தாள். இந்திய மண்ணின் வரவேற்பு, சினேகம், நேரம் தவறாமை எல்லாமே முதன் முதலில் பிடித்துப்போயிற்று.

"ஐயம் ஸ்டான்லி டி சில்வா நைஸ் ற்டு மீற் யூ" என்று கரம்தந்து வரவேற்றார். பெயரைக் கேட்டு அதிர்ந்தேன். இங்கேயும் சில்வா... சிங்கள இனத்தவரா....? என்னுள் கேள்விகள்.

போகும் வழியில் பட்டென கேட்டேன். "ஸ்டான்லி சேர் நீங்கள் சிங்களவரா?"

"இல்லை நான் இந்தியன் நான் சிங்களவன் இல்லை ஆரியன்"

"அப்படியானால் உங்களுக்கு சிங்களம் தெரியாதா?"

"நோ... எனக்குத் தெரியாது."

அப்பாடா.... பெரும் நிம்மதியாகப் போனது. ஏனெனில், இந்தியாவில் நாங்கள் நிற்கும் காலங்களில் ஸ்டான்லி சேர் தான் எங்களுக்கு வழித்துணையாய் இருக்கப் போகிறார்.

இந்தியாவைப் பற்றி அங்குள்ள சம்பவங்களைப் பற்றி வேலைகள் பற்றி நானும் தேவா அக்காவும் ஸ்டான்லி சேர் முன்னிலையில் பேசுவதானால் இனிமேல் சிங்களத்தில் உரையாடிக்கொள்ளலாம். அவருக்கு எதுவும் புரியாது. நாங்கள் சுதந்திரமாய் உரையாடலாம்.

கார் ஹோட்டல் தொம்ஸ்ஸுக்கு போனது.

பாஸ்போட் டைக் காட்டி பதிவு செய்தபோது கேட்டார்கள்; "ஸ்ரீலங்காவின் எந்தப் பகுதியில் இருந்து வருகிறீர்கள்?"

"யவ்னா"

அவன் முகத்தில் லேசான ஓர் அதிர்ச்சி.

இலங்கைத் தமிழர்கள்; அதுவும் யாழ்ப்பாணத்தில் இருந்து வருபவர்கள் என்றால் ஓர் மெலிதான பய உணர்வு இருப்பது தெரிந்தது. நேரம் பனிரெண்டு மணி. பசித்தது. ஸ்டான்லி சேர் கேட்டார் "என்ன சாப்பிடுறீர்கள்?"

நான் பட்டென்று சொன்னேன். "சோறும் கறியும்"

குபீரிட்டுச் சிரித்தார். அர்த்த இராத்திரியில் சோறும் கறியும் வேண்டும் என்று நிற்கும் முதல் ஆள் நானாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

உண்மையில் எனக்குப் பசித்தது. மத்தியானம் ஒரு மணிக்கு எயார்ப் போட்டுக்குப் போகுமுன் ராணி அக்கா சமைத்த சாப்பாட்டை என்னால் சாப்பிட முடியவில்லை. ஃபிளைட்டிலும் தந்த உணவு என் பசியைப் போக்குவதாய் அமையவில்லை. எங்கள் ஸ்ரீலங்கா சட்டைகளை மாற்றி சல்வாருக்குள் நுழைந்தோம். [illegible] கார் விரைந்தது. இறுதியாக நாகர்ஜுனா ரெஸ்டோரன்டுக்கு வந்தோம். அது மட்டும் தான் அந்தவேளையிலும் திறந்திருந்தது - பரபரப்பாயிருந்தது.

நான் விரும்பிய சோறும் கறியும் மிகவும் சுவையாகக் கிடைத்தன. திமுதிமுவெனக் கூட்டம். இந்திய சனத்தொகை ஞாபகத்தில் வந்தது. எப்போது சாப்பிட்டு எழும்புவார்கள் எனப் பார்த்துக் கொண்டே ஓர் பெரும்கூட்டம் நின்றது.

சாப்பிட்டு விட்டு டீ குடிக்க நிமிர்ந்தபோது தான் - நான் அவனைக் கண்டேன். ஒரு தொன் அதிர்ச்சி. விழிகசக்கி மீண்டும் பார்த்தேன். அவன்தான். என் அதிர்ச்சியை ஸ்டான்லி சேர் கண்டு கொண்டார். கேள்வியானார். நல்லவேளை தேவா அக்கா காணவில்லை. உலகம் இவ்வளவு குறுகியதா? இவ்வளவு சுலபமாக ஒருவரை ஒருவர் கண்டுகொள்வதற்கு? ஆச்சரியப்பட்டேன்.

இதனை அதிஷ்டவசமானதென்பதா? இறைவனுடைய நியதி என்பதா? தற்செயலானதென்பதா?

எதுவென்பது?

ஒன்றரை தசாப்தங்களாக தொலைந்து போன எங்கள் ஆரூரன் மீளக்கிடைத்தானென்பது - ஆச்சரியமல்ல - பேராச்சரியம். என் பெங்களூர் பயணத்தில் இப்படியொரு அதிசயம் நிகழுமென நான் எதிர்பார்க்கவேஇல்லை.

மனம் பரபரத்தது - ஸ்டான்லி சேரும் தேவா அக்காவும் பேசிக்கொண்டிருந்த கண்பொழுதில் சட்டென எழுந்தேன். கைகழுவப் போவதாய் நினைத்திருப்பார்கள். என்னைப் பார்த்த அதிர்ச்சியில் இருந்து மீளாத ஆரூரன் என்னருகே வந்தான். என் கரங்களைப் பற்றி 'சந்திரீய்ய்....' என்றான் குரல் தழுதழுத்தது.

எத்தனை ஆண்டுகள்?

இரண்டாம் ஈழக்கட்டப்போர் சதிராடிய தொண்ணூறுகளில் அயல்நாட்டுக்கு ஓடவென பணம் சேர்த்து ஓடிய வாகீசன் அண்ணன் போராட்ட இயக்கங்களோடு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு வீரத்தமிழன், மானத்தமிழன் என மார்தட்டித் திரிந்த அவன் தம்பி ஆரூரன். கடைசியிலே சூழ்நிலை பூதாகாரமாக ஓர் முன்னிருட்டில் [illegible] பட்டு குருதி பீரிட்டுக் கிடந்த ஆரூரன் என் விழித்திரையில் மங்கலாகத் தெரிகிறான். "ஐயோ என்ரை பிள்ளையை சுட்டுப் போட்டாங்கள்டா அந்தச் சண்டாளங்கள்" என அவன் தாய் ஒப்பாரி சொல்லிஅழுதது நினைவில் வந்தது. முன்னிருட்டில் இராணுவங்கள் திமுதிமுக்க பயந்து போனோம். ஆரூரன் என் பால்யநண்பன் - என்னோடு கூடப்படித்தவன். முற்போக்கு யதார்த்தம் நிறைந்தவன். என் பிரிய ஸ்நேகிதி ராகவியின் நேஸகன்.

அந்த இரவுப் பொழுதிலே ஆரூரன் இறந்து போனதாயும் - அவன் உடலை எங்கோ கொண்டுபோய் எரித்தார்கள் எனவும் ஊரெங்கும் கதை பரவியது.

அந்தக் கதையே உண்மையென ஊருலகம் நம்பியது. ராகவி பதறிப் போனாள். உயிருக்குயிராய் நேசித்த ஆரூரன் இறந்த பின் தன் வாழ்வை தனிமையானதாக்கி பதினைந்து வருடம் வாழ்ந்து முடித்திருக்கிறாள்.

நான் ராகவியை கேட்கும் போதெல்லாம் அவள் நிச்சயமாய் சொல்வாள் 'ஆரூர் சாகவில்லை சந்திரி - எப்போதாவது ஒருநாள் எங்கிருந்தாவது வருவான்... அவன் சாகவில்லையென்று என் மனம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறது. அவன் வருவானென்ற எதிர்பார்ப்புகள் அழிந்து போனாலும் என்னால் நிச்சயமாக அவனது நினைவுகளுடன் மிகுதிக் காலத்தையும் கழிக்க முடியும் சந்திரி ப்ளீஸ் ஓர் திருமணத்திற்கு என்னை வற்புறுத்தாதே'... எழிலும், இளமையும் விடைபெற்ற ஓர் பெண்ணாய் மௌனமாக என் மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கிறாள் ராகவி.



எத்தனை உண்மையுள்ள நேஸமிது.

சகல சௌகரியங்களும் அவளுக்கிருக்கின்றன. ஆனால், தொலைந்துபோன ஆரூரனுக்காக அவள் தனிமையைத் தவமாக்கி வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

ராகவியை நினைத்து இப்போது என் மனம் பரவசமானது. ஆரூரன் அழகாக இருந்தான். நன்றாக வெளிறி சதைபோட்டு ஓர் தமிழ்படக் கதாநாயகன் போலிருந்தான்.

"என் ஆரூர் நீ எப்படி இங்கே...." தலை தாழ்ந்தான்.

"சூடுபட்டாப் பிறகு மன்னாருக்குப் போய் இந்தியாவுக்கு வந்திட்டன். முன்னம் சென்னையில தான் இருந்தன். நான் உயிரோட இருக்கிற விஷயம் அம்மாவுக்குக் கூடத் தெரியாது.

எல்லாரும் நான் செத்துப் போனதாய்த் தான் நினைச்சிருக்கினம். நான் எல்லாத்தையும் விட்டுட்டன் சந்திரி - நான் ஓர் மனிதனாய் சந்தோஷமாய் வாழவேண்டுமென்று நினைச்சன். அது அங்கிருந்தால் ஒரு காலும் முடியாது.

எல்லாப் பக்கத்திலும் எனக்கு சஞ்சலங்கள் தான் மிஞ்சும்.

நான் ஓர் பக்றியில வேலை பாக்கிறன் - நல்லவேலை நல்ல சம்பளம். அங்கேயே செட்டிலாகிட்டன் சந்திரி. ப்ளீஸ் என்னை மன்னிச்சுக் கொள்....

(12ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் கட்ட ஈழப்போர்: தடுப்பு ஜனாதிபதி மஹிந்த கையில்

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகி 4ஆண்டுகள் நிறைவு பெறும் நாளில் ஜெனிவாவில் இருதரப்புகளும் நேரில் பேசுகின்றன.

ஐ.தே.கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த சமயம், நோர்வேத் தரப்பு அரசு மற்றும் விடுதலைப் புலிகளுடன் ஆறுமாதகாலம் செலவழித்து ஒரு யுத்தநிறுத்த உடன்படிக்கையை உருவாக்கியது.

எதிர்காலத்தில் இடம்பெறும் சிக்கல்களுக்கு இடமளிக்காதவகையில் மிகவும் நுணுக்கமாக இரு தரப்பினராலும் ஆராய்ந்து அலசப்பட்ட பின்னர் மூன்று பக்கங்களைக் கொண்டதாக இந்த உடன்பாடு தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப் பட்டது.

உடன்பாடு நடைமுறைக்கு வந்த ஆரம்பகாலத்தில் மிகவும் செம்மையாகக் கடைப்பிடிக்கப்பட்டுவந்த அதன் விதிகள், காலம் செல்லச் செல்ல முற்றாகச் செயலிழக்கும் நிலைக்குத்தள்ளப்பட்டன.

உடன்பாட்டின் முக்கிய அம்சங்கள் படைத்தரப்பால் உதாசீனம் செய்யப்பட்டதன் விளைவு, இன்று அந்த உடன்பாடு நடைமுறையில் உள்ளதா இல்லையா என்ற நிலைக்குள் அதனைத் தள்ளிவிட்டது.

இந்த உடன்பாடு செம்மையாக நடைமுறைப்படுத்தப் பட்டிருக்குமானால், அடுத்த நிலைக்கு - நிரந்தரத் தீர்வை நோக்கி - சமாதான முயற்சிகள் நகர்ந்திருக்கும். உடன்பாடு நெருக்கடி நிலைக்குள் சிக்கியதால் இப்போது சமாதான முயற்சிகள் யாவும் ஸ்தம்பித்துப் போகும் சூழல் உருவாகியுள்ளது.

தெற்கில் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்கள், ஆழிப்பேரலை அனர்த்தம் போன்றவையே சமாதான முயற்சிகளை இன்னும் செத்துப்போகாமல் காப்பாற்றி வருகின்றன.

ஜெனிவாவில் நடக்கப்போகும் [illegible]ச்சுகள் சே[illegible] மாதான முயற்சிகளுக்குப் புத்துயிர் அளிக்குமா? நிரந்தரமாக சமாதி கட்டுமா? என்பது தான் இன்று சகல மட்டங்களிலும் எழுந்துள்ள கேள்விகளாகும்.

நெருக்கடி மிகவும் தீவிரமாகி, யுத்தம் ஒன்று இந்த நாட்டில் மீண்டும் அரங்கேறும் சூழ்நிலை உருவாகிய நேரத்தில்-

கடந்தமாதம் 23ஆம் திகதி நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் நோர்வே சமாதானக் குழுவின் தலைவருமான எரிக் சொல் ஹெய்ம் இலங்கை வந்தார்.

சிங்களத் தரப்பின் தலைவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் தமிழ்த் தரப்பின் தலைவரான தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனையும் அவர் சந்தித்தார்; பேச்சுக்கள் நடத்தினார். அதன் பயனாக எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் சுவிற்சர்லாந்து தலைநகர் ஜெனிவாவில் இருதரப்புகளும் நேரடியாகப் பேச வாய்ப்புக்கிட்டியது.

இந்தப் பேச்சுகளில் விடுதலைப் புலிகள் தரப்பில் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், மட்டக்களப்பு அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், அடேல் பாலசிங்கம் ஆகியோர் பங்குபற்றுவர்.

அரசுத்தரப்பில் அமைச்சரும் சட்டவாதியுமான நிமால் சிறிபால டி சில்வா, சிரேஷ்ட அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, ரோஹித்த போகொல்லாகம ஆகியோர் இடம்பெறுவர் என அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யு[illegible] வகையில் ஒருவரை அரச[illegible]ல் இணைத்துக்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. ஆனால் அந்தப் பிரதிநிதி யார் என்பது குறித்து முடிவுகள் எதுவும் இக்கட்டுரை எழுதப்படும் வரை எட்டப்படவில்லை.

படைத்தரப்புச் சார்பில் கடற்படைத்தளபதி வசந்த கரன்னகொட, பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஆகியோரும் பேச்சில் கலந்துகொள்ளவுள்ளனர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நோர்வேத் தரப்பில் அதன் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், அந்த நாட்டின் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சரும் தற்போது உலக நாடுகளில் ஜனநாயகத்தை வளர்ப்பதற்கான ஜனநாயகம் மற்றும் தேர்தல் உதவிக்கான சர்வதேச நிறுவனத்தின் செயலாளர் நாயகமுமாகிய விடார் ஹெல்கிசன், இலங்கைக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரஸ்கர், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் ஆகியோர் பிரசன்னமாக இருப்பர்.



யுத்த நிறுத்த உடன்படிக்கையைச் செம்மையாக நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள் குறித்து மட்டுமே இந்த முதற்பேச்சில் ஆராயப்படும் என்று விடுதலைப்புலிகள் அறிவித்துவிட்டனர். ஆனால், இதற்கு மாறாக, இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண்பதற்காகத்தான் இந்தப்பேச்சு இடம்பெறுகின்றது என்ற தோரணையில் தெற்கு அரசியல் களத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. விடுதலைப் புலிகளின் மதிநுட்பத்தை- சாமர்த்தியத்தை - எதிர்கொள்ளும் களமாக இந்தப் பேச்சைநோக்கி, பேச்சில் கலந்துகொள்ளும் அரச குழுவுக்கு விசேட பட்டறைகள், ஆலோசனை, மதியுரைக் குழுக்கள் எனப் பெரும் எடுப்பில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இதுவரை நடைமுறைப்படுத்தப்படாத கீழ்க்கண்ட விடயங்களின் அமுலாக்கம் குறித்து மட்டுமே உண்மையில் பேச்சு இடம்பெறப்போகின்றது.

* வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் செயற்படும் ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து வெளியேற்றுதல்.
* மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீராக்க இராணுவப் பிரசன்னம், தேடுதல்கள், கொலைகள் போன்றவற்றை நிறுத்துதல்.
* அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக்குடியமர அனுமதித்தல்.
* சுதந்திரமான கடற்றொழிலுக்கு அனுமதித்தல்.
* சுதந்திரமான மக்கள் நடமாட்டத்துக்கான வழிமுறைகள்.
* பாடசாலைகள், பொதுக்கட்டடங்களில் இருந்து படையினர் விலகல்.
* போராளிகளின் கடல்வழி மற்றும் தரைவழிப் பயணங்களில் உள்ள தடைகளை நீக்குதல்.
* மனித உரிமைகளைப் பாதுகாத்தல்.
* இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் போராளிகள் அரசியல் பணி மேற்கொள்ளல்.

மேற்கண்ட விடயங்களில் எட்டப்பட்ட இணக்கத்தை நடைமுறைப்படுத்துவது குறித்துத்தான் பேச்சில் முக்கியமாக ஆராயப்பட இருக்கின்றது.

இந்த விடயங்கள் யாவும் படைத்தரப்புடன் சம்பந்தப்பட்டவை. முப்படைகளின் தளகர்த்தா என்ற வகையில் படைகளைக் கட்டுப்படுத்தி, பேச்சில் எட்டப்படும் தீர்மானங்களை விரைந்து செயற்படுத்தவேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது.



கடந்த காலப் பேச்சுகளின்போது அரசு ஒரு கட்சியிடமும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவி மற்றொரு கட்சியிடமும் இருந்தன. அதனால் பேச்சில் எட்டப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் பெரும் சிக்கல் உருவானது. அதனால் அத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமலே போயின.

இன்று அரசும் ஜனாதிபதிப் பதவியும் ஒரு கட்சியிடமே உள்ளன. அத்துடன், எதிர்க்கட்சி இந்த முயற்சிகளுக்கு முழு ஆதரவும் தருவதாக அறிவித்துள்ளது.

சிங்கள தேசத்துக்குக் கிட்டியுள்ள கடைசிச் சந்தர்ப்பம் இதுவாகும். சரியான முறையில் செயற்பாடுகளை மேற்கொண்டு தெற்கு அரசு இந்தச் சூழலைப் பயன்படுத்தாவிட்டால் நாடு நாலாம்கட்ட ஈழப்போருக்கு முகம் கொடுக்கவேண்டியதுதான். அத்தகைய நிலை ஒன்று உருவாவதைத் தவிர்க்கும் பாரிய பொறுப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கைகளில்தான் இருக்கின்றது.

பேச்சின்போது விடுதலைப் புலிகள் நிபந்தனைகளையோ, அழுத்தங்களையோ போடப்போவதில்லை. யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தும்படி மட்டுமே அவர்கள் கேட்கப்போகின்றார்கள். அதற்கான சர்வதேச அங்கீகாரத்தையும் அவர்கள் கோரப்போகிறார்கள்.

சர்வதேசத்தின் அங்கீகாரத்துடன் பேச்சில் எட்டப்படும் தீர்மானங்களைத் துணிந்து மஹிந்த செயற்படுத்துவாரா? அல்லது பங்காளிக் கட்சிகள் மற்றும் படைத்தரப்பின் சொற்படி நடக்கப் போகின்றாரா? என்ற கேள்விகளுக்கு பேச்சின் பின் அவரின் அணுகு முறைகள்தான் பதில் கூறப்போகின்றன.

விடுதலைப் புலிகளின் ராஜதந்திர நகர்வுகள் சர்வதேசத்தின் பிரசன்னத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கையைச் செம்மையாக நடைமுறைக்குக் கொண்டு வருதாகத்தான் இருக்கும். புலிகளின் ராஜதந்திரத்துக்கு வெற்றி கிட்டுமா? அல்லது மஹிந்தவின் ராஜதந்திரம் வெல்லுமா? என்று உடனடியாக

**ருகன்**


எதிர்வு கூற முடியாது.

எதுவாக இருந்தாலும் பேச்சில் எட்டப்படும் தீர்மானங்களை விரைந்து அரசு செயற்படுத்துவதன் மூலம் நாலாம்கட்ட ஈழப்போரைத் தவிர்க்கமுடியும். இல்லையேல் நாலாம் கட்டப் போர் தவிர்க்க முடியாததொன்றாகிவிடும்.

இந்த அபாய நிலையை உணர்ந்து ஜனாதிபதியும் அவரது சகாக்களும் செயற்படுவார்களா என்பதை அடுத்து வரும் நாள்களில் அறியமுடியும். அந்த நாள் களுக்காகக் காத்திருப் போம்.■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இன்றைய உலகை பீடித்துள்ள பேராபத்துகளில் ஒன்று AIDS என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இயற்கை அழிவுகளான வெள்ளம், புயல், மண்சரிவு, பூகம்பம் போன்றவற்றால் மட்டுமன்றி உள்நாட்டு யுத்தங்களாலும் பாரிய அளவில் மனித உயிர்கள் பலிகொள்ளப்படுகின்றன. இத்தகைய அனர்த்தங்களுடன் உலகம் பூராவும் வேகமாகப் பரவி வரும் எயிட்ஸ் நோயும் மனித இனதத்தை அழித்து வருகிறது.


*1981* ஆம் ஆண்டு முதன் முதல் அமெரிக்காவில் இந்த நோய் கண்டு பிடிக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை சுமார் 20 மில்லியன் பேர் வரை இந்நோயால் இறந்துள்ளனர். 2004ஆம் ஆண்டு எயிட்ஸ் நோயால் சுமார் 30 லட்சம் பேர் வரையில் இறந்துள்ளதுடன் உலகம் முழுவதும் எயிட்ஸ் தொற்று உள்ளவர்களின் எண்ணிக்கை 2 கோடி 50 லட்சம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இன்றைய உலகை அச்சுறுத்தும் பாரிய உயிர்க்கொல்லியான எயிட்ஸ் பற்றிய தகவல்கள் கேள்வி பதில் வடிவில் கீழே சுருக்கமாக தரப்பட்டுள்ளன.

1. **AIDS என்பதன் விரிவாக்கம் என்ன?**
   A - Acquired
   I - Immune
   D - Deficiency
   S - Syndrome
2. **AIDS நோயின் வைரஸ் யாது?**
   H. I. V.
3. **H. I. V. என்பதன் விரிவாக்கம் என்ன?**
   H - Human
   I - Immune Deficiency
   V - Virus
4. **AIDS க்கு எதிராக போராடும் ஐ.நா வின் பிரதான அமைப்பு எது?**
   UNAIDS
5. **UNAIDS அமைப்பு எந்த ஆண்டு யாரால் உருவாக்கப்பட்டது?**
   *1986இல். ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி ஆனானால் உருவாக்கப்பட்டது.*
6. **உலக AIDS தினம் எந்த மாதத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது?**
   *டிசம்பர் - 1*
7. **உலக AIDS தினம் டிசம்பர் - 1 என எந்த ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டது?**
   *1988ஆம் ஆண்டு*
8. **AIDS க்கு எதிராக போராடும் ஏனைய அமைப்புகள் எவை?**
   UNHCR, ILO, UNDP, WHO
9. **AIDS தொற்றும் வழிமுறைகள்**
   HIV தொற்று உள்ளவருடன் உடல் உறவு கொள்ளும் போது
   HIV உள்ள ஒருவரின் குருதியை ஏனையவருக்கு ஏற்றும் போது
   HIV உள்ள ஒரு தாய் கர்ப்பம் தரிக்கும் போது பிள்ளைக்கு ஏற்படும்.
   HIV உள்ள ஒருவர் முகச்சவரம் செய்தவுடன் ஏனையவர்கள் அதே சவரக் கத்தியை பாவித்து முகச்சவரம் செய்யும் போது.
10. **HIV தொற்றும் திரவங்கள்?**
   யோனிதிரவம்
   ஆண்விந்து
   குருதி

**ARP.** யோகருபன்
தரம் *12*
கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்
கிளிநொச்சி.

# அறிமுகமாகிறது தொலை தோற்றம்



இன்றைய நவீன அறிவியல் ஆளுமை கொண்ட உலகில் தூரம் என்ற வார்த்தை அகராதிகளில் மறைந்து கொண்டிருக்கிறது. தூரத்தை நம் கைக்குள் கொண்டு வந்ததில் தொலைத் தொடர்பு உன்னத பங்கு வகிக்கிறது.

உதாரணமாக நியூயோர்க்கில் நடைபெறும் ஒரு கருத்தரங்கில் பங்கு பற்றுவதற்கு இனி பாஸ்போட், வீசா எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. வீட்டில் இருந்து கொண்டே கணினி மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் ஊடாக அங்கு நடைபெறும் கருத்தரங்கில் கலந்து கொள்ளலாம்.

ஆராச்சியாளர்கள் தொலைத்தோற்ற முறையை கணினி மற்றும் தகவல் தொடர்பு முறையில் கண்டுபிடித்துள்ளார்கள். தொலைத்தொடர்பு முறையை பயன்படுத்தி ஒரு இடத்தில் இருந்து கொண்டே வேறு ஒரு இடத்தை கண்காணிக்கலாம். கட்டளைகளை பிறப்பிக்கலாம். அங்கு உள்ள நிலமையை கையாளலாம். இதற்காகவே பிரத்தியேகமாக காதுகளில் மாட்டிக் கொள்வதற்காக ஹெட் போன், நம்முடைய அசைவுகள் மற்றும் சமிக்ஞைகளை விளக்குவதற்காக கணினி உடன் தொடர்பு செய்யப்பட்ட கையுறை மற்றும் தொடு உணரிகள் (Tuch Sensors) பயன் படுத்தப்படுகின்றன. கட்டுப்பாட்டு கருவிகள், காட்சி திரைகள் மற்றும் நுண் கணினி மூலம் தகவல் பரிமாற்றம் செய்யப்படுகின்றது.

இராணுவத்தில் பணி புரியும் ரோபோவுக்கு, தொலைத்தோற்ற முறையில் அங்குள்ள நிலமைகளை கண்காணித்து, நிலவும் சூழ்நிலைகளுக்கேற்ப கட்டளைகளை நாம் கொடுக்கலாம்.

நாம் கொடுக்கும் சமிக்ஞைகள் மூலம் அங்குள்ள ரோபோவும் செயல்படும்.

போர் எல்லைகளில் எதிரிகள் ஊடுருவல் மற்றும் பதற்றமான சூழ்நிலைகளை தொலைத்தோற்றமுறையில் முறியடிக்கலாம்.

மருத்துவத் துறையில் தொலைத்தோற்ற முறை மிகவும் இன்றி யமையாதது. வேறு ஒரு நாட்டிலோ, அல்லது தொலைவிலோ இருக்கும் நோயாளியின் உடல் நிலையை அறிந்து அதற்கேற்ப மற்றொரு இடத்தில் இருக்கும் மருத்துவரால் சிகிச்சைஅளிக்க முடிகின்றது.

மருத்துவர் கொழும்பில் இருந்து கொண்டே ரோபோ உணரி மூலம் யாழ்ப்பாணத்தில் உள்ள நோயாளியின் சிகிச்சைக்கு கொடுக்கப்படவேண்டிய உறுப்புகளின் வரைபடம் மற்றும் 3D பரிமாணப் படங்களை பெற்று அதற்கேற்ப சமிக்ஞைகள் மற்றும் இயக்கங்கள் மூலம் அங்குள்ள நோயாளிக்கு சிகிச்சைஅளிக்க முடியும். கொழும்பில் உள்ள டாக்டரின் கட்டளைப்படி யாழ்ப்பாண வைத்தியசாலையில் உள்ள ரோபோ அதற்கான சிகிச்சையை கொடுக்கும். மருத்துவர் பெற்றுள்ள படத்தில் எந்த இடத்தில் எந்த செயலைச் செய்கிறாரோ அதை அப்படியே அங்குள்ள ரோபோ செயல்படுத்தும்.

அதேபோலவே அறுவை சிகிச்சைநடைபெறும் ஒரு இடத்திற்கு உலகில் பல்வேறு இடங்களிலிருந்து மருத்துவர்கள் வரவேண்டிய கட்டாயம் இருக்கும். பல்வேறு மருத்துவர்களின் ஆலோசனைகளையும் பெறவேண்டி இருக்கும். இவ்வாறு ஒரே இடத்தில் ஒன்று சேரமுடியாத மருத்துவர்கள் குழு தொலைத்தோற்ற முறையில் தங்களது ஆலோசனைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும். இதுமருத்துவத் துறையில் மிகப்பெரிய புரட்சி என்றே சொல்லலாம்.

அறிவியல் முன்னேற்றம் நாம் இதுவரை கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு போய்க்கொண்டிருக்கின்றது. கற்பனையில் கூட ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் முடியாது. இப்படியுமா? இப்படியும் செய்யமுடியுமா? என்று மூக்கின் மேல் விரல் வைத்து ஆச்சரியப்படக்கூடிய அளவிற்கு விஞ்ஞான வளர்ச்சி சென்று கொண்டிருக்கின்றது.


## சுடர்ஒளி தினசரி / வாரமலர் விளம்பர கட்டணங்கள்

| பத்திரிகை | முழுப்பக்கம் | | அரைப்பக்கம் | | கால்பக்கம் | | Col Cm | | Special Rate | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கலர் | கறுப்பு / வெள்ளை | கலர் | கறுப்பு / வெள்ளை | கலர் | கறுப்பு / வெள்ளை | கலர் | கறுப்பு / வெள்ளை | கலர் | கறுப்பு / வெள்ளை |
| சுடர்ஒளி தினசரி | ரு. 47, 600/- | ரு. 26, 000/- | ரு. 27, 000/- | ரு. 16, 200/- | ரு. 13, 500/- | ரு. 8, 100/- | ரு. 100/- | ரு. 60/- | ரு. 85/- | ரு. 45/- |
| சுடர்ஒளி வாரமலர் | ரு. 45, 000/- | ரு. 30, 000/- | ரு. 23, 250/- | ரு. 15, 680/- | ரு. 11, 760/- | ரு. 7, 840/- | ரு. 147/- | ரு. 98/- | ரு. 122/- | ரு. 75/- |

★ தொடர்ச்சியான 2500 Col Cm (Contract) ஒப்பந்த விளம்பரங்களுக்கு மட்டுமே

★ முன்பக்க விளம்பரங்களுக்கு 50%மும், மற்றைய குறிப்பிட்ட பக்கங்களுக்கு 25%மும் மேலதிகமாக அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தன் பதில்கள்



**ஆடலவன்-வவுனியா**

**கே: பித்தா! நீர் எவரையாவது காதலித்திருக்கிறீரா? அப்படியானால் உமது அனுபவத்தை கூறும் பார்க்கலாம்?**

ப: அப்பா... ராசா.... காதல், கீதல்,



அனுபவம், கினுபவம் அப்படி இப்படி என்று நீர் கேட்க, நானும் ஏதோ ஒரு உத்வேகத்தில் சொல்ல.. அது சுடர் ஒளியில் வர... அதனை எனது மனைவி படிக்க... படித்துவிட்டு 'ஏன் என்னட்ட வந்தனீர்... அவளிட்ட போக வேண்டியதுதானே!' என்று கூறி என்னை கலைக்க... நான் குலைக்க... அவள் கடிக்க... நான் ஏறுக்கு மாறாக கதைக்க... அதைக் கேட்டு அவளுக்கு கோபம் வர அதுக்கு நான் தூபம் போட.... உருட்டுக் கட்டையை எடுத்துக் கொண்டு அவள் துரத்த... நான் ஓட.... அவள் என்ன கலைத்துக் கொண்டு வர.... நான் தடுக்கிவிழுந்து தவழ்ந்து எழும்பி ஓட..... அவள் விரட்டோ விரட்டென்று விரட்ட..... அதை ஊரே வேடிக்கை பார்க்க... கை கொட்டிச் சிரிக்க...

வேண்டாமப்பு கூடி இருக்கிற குடும்பத்தில கும்மி அடிச்சு குழப்பிவிடாதே என்னை பெத்த ராசா...

**ப.சன்னாசி - செல்வா நகர்.**

**கே: பித்தா தமிழகத்தில் உள்ள அரசியல் தலைவர்களில் ஒருவரான வைகோ எமது மக்களுக்காக அடிக்கடி குரல் எழுப்பி வருகிறார். ஆனால் எமது நாட்டில் இருக்கும் ஒருசில தலைவர்கள் எம்மைப் பற்றி நினைப்பதே இல்லையே?**

ப: எமது தலைவர்களில் சிலர் பதவி மீது பற்றுக் கொண்டவர்கள். எவன் எக்கேடு கெட்டாலும் தாம் வசதியாக வாழவேண்டும் என்று விரும்புகிறவர்கள். அரசாங்கத்தின் சலுகைகளுக்காக பறப்பவர்கள்.

ஆனால் வைகோ அப்படிப் பட்டவர் அல்லர். மத்திய அரசுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைத்திருந்தாலும் பதவிக்காக பந்தம் பிடிப்பவர் அல்லர். ஊழல் குற்றச்சாட்டு எதுவும் சொல்ல முடியாத MR.CLEAN என வர்ணிக்கப்படுபவர். எந்த ஆட்சி வந்தாலும் கொள்கை மாறாத... எது வந்தாலும் தலையிலே சுமக்கக் கூடிய துணிச்சலானவர்.

எனவே எமக்கு ஓர் துன்பம் வந்தால் அவரின் சதை ஆடுகிறது. இங்கே உள்ள தலைவர்களுக்கு எமக்கு ஓர் துன்பம் வந்தால்... எங்கே தமக்கும் வந்து விடுமோ என்று உடம்பே ஆடுகிறது. அதாவது நடுங்குகிறது. பிறகு எப்படி அவர்கள் எமக்காக பேசுவது.

**செ.ராகவன்**

**கே: அன்புள்ள பித்தா! உன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு நீர் கூற விரும்புவது என்ன?**

ப: வாழ்க... வளர்க...

வீழ்வது நாமாக இருந்தாலும் பரவாயில்லை...

ஆனால் வாழ்வது தமிழாக இருக்கட்டும்.

**பத்மராணி, கோணாவில்.**

**கே: பித்தா! எனது சினேகிதி ஒருத்தியை ஏராளமான ஆண்கள் வந்து பெண்பார்த்துச் செல்கிறார்கள். ஆனால் எவரும் சம்மதிக்கிறார்கள் இல்லை. இதுவரையில் பலர் வந்து பார்த்து பிஸ்கட், சோடா எல்லாம் சாப்பிட்டு விட்டு போகிறார்கள். பார்த்துவிட்டு போனவர்களில் சிலர் மறுபடியும் வந்து பார்த்துவிட்டு போகிறார்கள் போல் இருக்கிறது என்றாள் சிநேகிதி. இதைத்தடுக்க என்ன செய்யலாம்?**

ப: வந்து பார்த்துவிட்டுச் செல்லும் மாப்பிள்ளைகளை



பிடித்து பச்சை குத்தி அனுப்பிவிட்டால் மீண்டும் வருபவர்களை அடையாளம் காண்பது சுலபம்.

**ஆ.ஆனந்தி, புளியங்குளம்.**

**கே: பித்தா! மனிதனுக்கு விஷப்பல் இருந்திருந்தால்......**

ப: நாக்குக்கு வேலை இல்லாமல் போய் இருக்கும்.

**அ.யோகேஸ்வரன், செல்வநாயகபுரம்.**

**கே: பித்தா! நான் விரும்பும் ஒருவரையா என்னை விரும்பும் ஒருவரையா திருமணம் செய்வது நல்லது? இதில் ஒருத்தி நான் விரும்பும் காதலி மற்றவள் பெற்றோர் பேசி வைத்திருப்பவர்?**

ப: கண்ணு நீர் விரும்புபவர் உம்மை விரும்பலாம் அல்லது விரும்பாமலும் போகலாம். உனது காதல் ஒரு தலைக் காதலாகவும் இருக்கலாம்.

ஆனால உம்மை விரும்புபவர் உம்மை விரும்புபவராக இருப்பதுடன் பெற்றோரினால் பேசி வைக்கப்பட்டவர். எனவே நீர் விரும்புபவரை விட உம்மை விம்புபவர் தான் உமக்கு ஏற்றவர்.

**எம்.வைலட் லக்ஸ்மி, யாழ்.**

**கே: டியர் பித்தண்ணா! இம்முறை காதலர் தினத்துக்கு உமது காதலியை எங்கே எல்லாம் கூட்டிப் போனீர்?**

ப: காலையிலே ஏதாவது ஒரு கோவில். பிறகு அப்படியே ஒரு



சைவக்கடைக்குப் போய்.... ஒரு வெட்டு. பின்னர் அப்படியே விகாரமகாதேவி பூங்காவில் உள்ள ஒரு ஒதுக்குப்புறத்தில் கொஞ்சம் சரச சல்லாபம். பின்னர் சைனீஸ் ரெஸ்டோரன்ட். அப்படியே கோல்பேஸ் வந்து குடை விரித்து உடம்பின் மேல் புறத்தை மூடிக்கொண்டு கொஞ்சம் சில் மிஷம். அப்படியே பஸ் பிடித்து எங்கேயாவது ஒரு சூடான 'A' படம். அதன் பின்னர் எங்கேயாவது ஒரு ஹோட்டலில் ரூம் போட்டு... கிளைமாக்ஸ் என்று அன்றைய நிகழ்ச்சியை நிறைவு செய்......ய நினைத்தேன் கலர் கலராய் கனவெல்லாம் கண்டேன்... ஆனால் அதற்கு முக்கிய தேவையான காதலி கிடைக்க இல்லை..... அன்றைக்கு என்டு பார்த்து எல்லோரும் பிஸி.

**பி.எஸ். ஜீவன், கொழும்பு 13.**

**கே: அன்பின் பித்தா! நான் இயக்குனர் சேரனாக வர ஆசைப்படுகிறேன். முதலில் அவருடன் உதவி இயக்குனராக இருந்து பின்பு சொந்தப் படம் எடுக்க முடிவு செய்துள்ளேன். சரித்திரக் கதை ஒன்றும் கைவசம் உண்டு. எனது ஆசை நிறைவேறுமா?**

**பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:-**

பித்தனிடம் நீங்கள் எத்தனை கேள்விகளையும் கேட்கலாம். தரமான கேள்விகளுக்கு பித்தன் பதில் அளிப்பான். நீங்கள் அனுப்பும் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:-




பித்தன் பதில்கள்
'சுடர் ஒளி வாரஇதழ்'
85, ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14


ப: சேரனாக வர வேண்டும் என்ற உமது ஆசைக்கு எனது பாராட்டு. இந்த ஆசை உம்மை சேரனாக ஆக்காவிட்டாலும். ஒரு தரஸி, பேரரசு, எழில், சரன் ஆகவாவது ஆக்கும். ஆனால் அதற்காக சேரனின் உதவி இயக்குனர் ஆக வேண்டும் சொந்தப் படம் சரித்திரப் படம் எல்லாம் எடுக்க வேண்டும் என்று ஆகாயக் கோட்டை கட்டுவது ரொம்ப ஓவர். தற்போது சேரனிடம் ஏகப்பட்ட உதவியாளர்கள் இருக்கிறார்கள். அடுத்து சொந்தப் படம் எடுப்பதென்றால் எமது ஊர்ப்பணத்தில் குறைந்தது, 10 கோடியாவது தேவை. சரித்திரப் படம் இப்போது வேலைக்கு ஆகாது. துட்டுச் சேராது. எனவே இவைகளை விட்டு விட்டு வேறு வழியிலே கலை உலகிலே நுழைந்து உமது திறமைகளை வெளிப் படுத்தி முன்னேறும் வழியைப் பாரும்.

**ஜெ.டானிஸ்ரா... ஊர்காவற்றுறை.**

**கே: பித்து... முன்னர் ஆமி ஆமி என்று ஓடினோம்**

**பின்னர் சுனாமி சுனாமி என்று ஓடினோம்.**

**இப்போ நேவி நேவி என்று ஓடுகிறோம் ஏன்?**

ப: எமது தலைவிதி. இலங்கையிலே பிறந்தது நாம் செய்த பாவம். அதிலும் தமிழனாகப் பிறந்தது படு பாவம். அதுதான் இந்த நிலை. ஆனாலும் காத்திருப்போம். காலம் மாறும்... நாம் விரட்டும் காலம் வரும் என்று நம்புவோம்.



**சுலோச்சனா, பளை.**

**கே: பித்தா! நீர் உமது மனைவிக்கு நல்லாக இடம் கொடுத்து விட்டீர், கொஞ்சம் அதட்டி வைத்தீர் என்றால் வாயை மூடிக்கொண்டு இருப்பாள்?**

ப: அதட்டினேனே வாயை மூடினாளே! ஆனால் அவளது வாயை அல்ல எனது வாயை.

# ஒரு பச்சோந்தியும்...

(9ஆம் பக்கத்தொடர்ச்சி)

ராகவி எனக்காகக் காத்திருக்கிறா எண்டு நீ சொல்லப்போறது தெரியும் - எனக்கு எல்லாமே தெரியும். நானொரு சூழ்நிலைக் கைதியாகிட்டன் சந்திரி. ஐ யம் றியலி சொறி".... விழிகசிந்தான். எனக்கு ரெண்டு குழந்தைகள் கூட இருக்கு, வசதியான இடத்தில் கலியாணம் செய்தனான். எத்தினை நாட்கள் நிப்பாய் சந்திரி"

"மூன்று வாரம்"

"நான் உன்னை வந்து சந்திக்கின்றேன் - இதோ என்னுடைய விசிட்டிங் காட், என்னைக் கண்டதை எனக்கோர் குடும்பம் இருப்பதை, ஏன் நான் உயிருடன் இருப்பதை யாருக்குமே ஊரில் சொல்லிடாதை சந்திரி ப்ளீஸ் - குறிப்பாக ராகவிக்குச் சொல்லாதை.... அவள் தாங்க மாட்டாள்" கரங்கூப்பி விடைபெற்று அவசரமாய் இறங்கிப் போனான்.

மனதில் சுமையோடு சோர்வாய் என் இருக்கைக்கு வந்தபோது தேவா அக்கா பாத்ரூமுக்குப் போயிருந்தாள் நல்ல வேளை. ஸ்டான்லி சேர் என்னிடம் எதுவுமே கேட்கவில்லை. ஆருரோடு பேசுவதைக் கண்டார். ஆனாலும் மிக நாகரீகமான மனிதர் எதுவுமே கேட்கவில்லை.

'சோறுகறி வேணும் உடனேயே...' என்று அவரை பாடாய்ப் படுத்தியது எவ்வளவு நல்லதாய்ப் போனது. இல்லையேல் இத்தனை ஆண்டுகளுக்குப் பின் ஆருரைச் ...தித்திருக்க முடியுமா?

அவனது சந்தோஷமான நிகழ்கால ...ழ்வைப் பற்றி அறிந்திருக்க முடியுமா?

ஒரு டம்ளர் குளிர்நீர் குடித்தேன். வாயில் ...ர போட்டுக் கொண்டேன்.

"ஸ்டான்லி சேர் - அவன் எனது பால்ய நண்பன். வெகுகாலத்திற்கு முன்னரே இந்தியாவுக்கு வந்தவன் அவ்வளவுதான்" என்றேன். பெருந்தன்மையாய் புன்சிரிப்போடு எழுந்தார்.

மூவரும் படியிறங்கி வந்தோம்.

தன் மனைவி இரு குழந்தைகளுடன் மிக ஆடம்பரமாக உயர் ரக காரினுள் ஏறிச் செல்லும் ஆருரனைக் கண்டேன். மனம் சமநிலையடைய மறுத்தது. ஆருரன் ஓர் பச்சோந்தி - உத்தமன் இல்லை. ராகவி எத்தனை துயர்களை எதிர் கொண்டாள்... ஆருரனின் காதலி என்ற பெயரில் எத்தனை தடவைகள் இராணுவத்தாலும் பொலிஸாலும் இயக்கங்களாலும் விசாரிக்கப்பட்டாள்.

பதினைந்து ஆண்டுகளைத் தவமாக்கி - ஓர் கர்மயோகிபோல காத்திருக்கும் ராகவியை நினைக்க அழுகை குபீரிட்டது. எத்தனை ரகமான மனிதர்கள் அன்பு, காதல், பாசம், நம்பிக்கை? என்பனவற்றிக்கான அர்த்தம் புரியாத மனிதர்கள்.

ஒருவரின் கண்ணீரிலும் துயரிலும் மற்றையவர்கள் மகிழ்ந்து சாதனை புரிகின்ற உலகம்.

பெண்மையின் உண்மைத்துவங்களைப் புரியாத ஆருர் போன்ற பச்சோந்திகள் எத்தனை பேர்?

'சூழ்நிலைக் கைதியானேன் - ஐ யம் றியலி சொறி' எனும் சிறிய வார்த்தைகளைச் சொல்லி தப்பித்துச் சௌகரியமாய் வாழும் ஆருர்கள் எத்தனை? என் மண்ணில் இலட்சியத்தோடு வாழும் ஒவ்வொரு போராளியையும் நினைத்துப் பார்க்கிறேன். இவன்போராளி இல்லை - இவன் போராடவுமில்லை. இவனொரு பச்சோந்தி - சுயநலவாதி. ஆருரனைத் தேடவென்று ராகவி அலைந்த இடங்கள் எத்தனை? கொடுத்த முறைப்பாடுகள் எத்தனை? செலவழித்த நேரம், காலம், பணம் எத்தனை? மகள் ... போனாள் என அந்தக் குடும்பம் சந்தித்த துயரங்கள் எத்தனை எத்தனை....?

துயரத்தோடே தொம்ஸூக்கு போனோம். 'இனிய இரவு' சொன்ன ஸ்டான்லி சேரை நிமிர்ந்தும் பார்க்காமல் படியேறிப் போய் றூம் திறந்து கட்டிலில் தொப் என விழுந்தேன்.

தேவா அக்கா கேட்டாள்.... "ஏன் என்ன நடந்தது உனக்கு"

"பிரயாணக் களைப்பு - குட் நைட்"

பேச்சை துண்டித்தேன்.

இதமான குளிரும் மிதமான வசதியுமாய் இருந்த பெங்களூர் நகரம் வெறுத்தது - ஆருரன் எனும் சுயநலவாதியைச் சந்தித்ததால்.

என் மனதினுள்ளே தீர்மானம் எடுத்தேன். நிச்சயம் இனி நான் ஆருரனைச் சந்திப்பதில்லை - அவன் வளமான குடும்பத்தையும் வசதியான வாழ்க்கையையும் காண செல்லப் போவதில்லை. பெங்களூரில் நிற்கும் மூன்று வாரங்களில் தவறுதலாக அவனை நான் சந்திக்க நேர்ந்தால் அவனுடன் பேசப் போவதில்லை. அவன் அழைப்பை ஏற்று அவன் வீட்டுக்கு விருந்துண்ணப் போவதில்லை. எவ்வித காரணமும் கொண்டு ராகவிக்கு அவனைச் சந்தித்ததை மறைக்கப் போவதில்லை. அவனை உலகமகா உத்மனாகவும் தியாகியாகவும் எண்ணி ஏமாந்து இருக்கும் ராகவியை இனியும் ஏமாறவிடப் போவதில்லை. ஓர் சுயநலவாதியை அவள் இனங் கண்டு கொள்ளட்டும்.

அவள் வாழவேண்டும் - பதினைந்து வருட தவத்தைக் கலைத்து அவள் அவளுக்காக வாழ வேண்டும்.

அவளுக்காக தியாகங்கள் செய்த அவள் குடும்பத்துக்காக அவள் வாழவேண்டும். நேசத்தின் புனிதத்துவங்கள் புரியாத ஆருரனுக்காக அவள் தொலைத்த எழிலையும் இளமையையும் அவள் மீளப் பெறமுடியா விட்டாலும், அவளால் சாதிக்க முடியும். அழகும் இளமையும் தாண்டிய ஆற்றலும், ஆளுமையும், அறிவும் அவளிடமுண்டு.

ஆருரனிடம் இல்லாத நேர்மையும், உண்மையும் அவளிடமுண்டு. யாரிடமும் இல்லாத பொறுமையும், சகிப்புத்தன்மையும், இறைபத்தியும் அவளிடமுண்டு.

இவை அவளுக்கு போதும். அவளிடமுள்ள அன்பு, இரக்கம், உண்மை, நேர்மை, பொறுமை, ஆற்றல், அறிவு இவை அவளை நிச்சயம் வாழவைக்கும். ராகவிக்கான நல்லதொரு எதிர்கால வாழ்வைக் கட்டி எழுப்புவதற்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாரானேன்.

ஒரு காலம் வரும் - நல்ல தீர்வு தரும் அவள் வாழ்வு வளமாகும், என் கனவு நிஜமாகும்.

பிரார்த்தனையோடு தூக்கம் தழுவ முனைந்த போது...

றூம் கதவு தட்டப்பட்டது.

"குட் மோனிங் அக்கா நெஸ்கபே எடுத்துக்கோங்கோ..." புன்னகையோடு ஒரு பதினெட்டு வயது மதிக்கத்தக்க பையன் நின்று கொண்டிருந்தான்.

இவ்வளவு விரைவாக விடிந்து விட்டதா...? அதிசயித்தேன்.

"தங்யூப்பா..." எடுத்துக் கொண்டேன்.


யன்னல் திரையை விலக்கினேன். அதிகாலையில் பெங்களூர் பனிச்சென்று இருந்தது. இந்த விரைவான விடியல்போல என் ப்ரிய ராகவியின் வாழ்வும் விடியும் நிச்சயமாய். நம்பிக்கையோடே.... நகரின் அழகைப் பார்த்தேன். கண்டியில் வாழ்ந்த நாட்கள் ஞாபகம் வந்தன. கண்டி போன்ற அதே சாயல், காலநிலை. தொலை பேசி ஒலித்தது. மறுமுனையில் "குட் மோனிங் - காலை ஒன்பது மணிக்கு றெடியாய் இருங்கள் இருவரும்" ஸ்டான்லி சேரின் குரல். கடமை உணர்வு மிக்க இந்திய மக்களை நினைத்து வியந்தேன்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# குறும்பு



# கலக்கல்

வதனி

## S.M.S சிரிப்பு

2002 இல் ரமேஸ் மோதிரம் கொடுத்தான்...
2003 இல் மகேஸ் சங்கிலி கொடுத்தான்...
2004 இல் யோகேஸ் Hand Chain கொடுத்தான்...
2005 இல் சுரேஸ் செல்போன் கொடுத்தான்...
2006 இல் நீ எதுவுமே தராமல் போயிட்டியேடா பாவி...

அன்பே Please என் காதலை
ஏற்றுக் கொண்டு - பதில் தா...
நீ மாட்டேன் என்றால்.. நான்
தற்கொலை செய்து விடுவேன்
போன வருஷம் உன்ரை அக்கா...
பண்ணின மாதிரி... ஏமாத்திடாத கண்ணு...
PlS... PlS... PlS...

நீ.. நீயே தான் வேணும் வேணுகா
நீ மட்டும் தான் வேணும்
வேறேதுவுமே வேணாம்
ஓடி வந்துவிடு டார்லிங் ஓடிவந்துவிடு
காதலர் தினத்திலன்று ஓடிப்போகலாம்...
ஓடிப்போய் எங்காவது சந்தோஷமாய் வாழலாம்.
ஓடிவா... ஓடி வந்து விடு.. Please.
பின்குறிப்பு:
ஓடி வரும் போது வீட்டிலே இருக்கும் நகை, பணம், வங்கிப் புத்தகம் எல்லாம் எடுத்து வா... மறந்து விடாதே.

My Dear மனோ நம்ம காதல்
வெற்றியடைஞ்சிட்டுடா...
வெற்றியடைஞ்சுட்டுது.
எங்க வீட்ல நம்ம காதலுக்கு பச்சைக் கொடி
காட்டிட்டாங்கடா. காட்டிட்டாங்க...
எந்த பரதேசியோடை யெண்டா என்ன...
பன்னாடையோட யெண்டா என்ன
ஓடிப் போகச் சொல்லிட்டாங்கடா... கண்ணு...
ஓடிப் போகச் சொல்லிட்டாங்கடா...
நீ... வெற்றியடைஞ்சிட்டாயடா...

## ஜோக்

கேள்வி:- கடவுளுக்கு எப்போது கடுமையான கோபம் வரும்?

பதில்:- கல்யாணம் ஆகாத கன்னிப் பொண்ணு கர்ப்பம் ஆகிவிட்டால் அதனை அறிந்த பெற்றோர்...
'ஐயோ கடவுளே இப்படிப் பண்ணிட்டியே...' என்று புலம்பும் போது... அதாவது யாரோ செய்த தப்புக்காக கடவுள் மீது பழி வருமே... அப்போது தான் கடவுளுக்கு கடுமையாக கோபம் வரும்.



## பொருத்தம்

**பெண்டாட்டிக்கும் செல் போனுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?**

இரண்டுமே நாம் பிஸி ஆக இருக்கும் போது... நம்மை டிஸ்டர்ப் பண்ணும்.

நாம ட்ரை பண்ணும் போது... அவை பிஸியா இருக்கும்...

**பெண்டாட்டிக்கும் கிரடிட் கார்ட்டுக்கும் உள்ள ஒற்றுமை..?**

மாட்டினோம் என்றால் வாழ்க்கை பூராவும் கடனாளியா இருக்க வேண்டியதுதான்..

**பெண்டாட்டிக்கும் டீ.வீ. தொடர் நாடகத்துக்கும் உள்ள ஒற்றுமை?**

தேவையில்லாமல் சும்மா கண்டநேரமும் அழுது கொண்டே இருக்கும்.

**பெண்டாட்டிக்கும் வானொலிக்கும் என்ன ஒற்றுமை?**

நாம கேக்கிறோமோ... இல்லையோ...
எமக்கு புரிகிறதோ இல்லையோ...
நாம் ரசிக்கிறோமோ இல்லையோ...
கத்திக் கொண்டே இருக்கும்.

**பெண்டாட்டிக்கும் கத்திக்கும் என்ன ஒற்றுமை?**

இரண்டுமே் உயிரை வாங்கும்.





"பெண்களுக்கு இடஒதுக்கீடு செய்யிறதுக்கு நம்ம தலைவர் ஆதரவு தாறாராம்."
"எப்படி...?"
"அவர் உட்கார்ந்திருக்கிற கதிரையிலேயே இடம் தாறாரே."



"தலைவர் கணக்கில ஒரளவு தேர்ச்சி அடைஞ்சிருப்பார் என்று நெனைக்கிறேன்"
"எப்படிச் சொல்றே?"
"நாலு வருஷமா கம்பி எண்ணியிருக்காரே!"





"எதுக்கு நிறையப் பேர் அந்த டாக்டர்கிட்ட ஆபரேஷனுக்குப் போறாங்க?"
"நோயாளி இறந்திட்டா, குடும்பத்தில் ஒருத்தருக்கு ஆஸ்பத்திரியில வேலை கொடுக்கிறார்!"

"பல்லி விழும் பலன்கள் பற்றி நல்லா தெரிஞ்சவர் இவர்!"
'ஜோதிடரா?"
"உஹூம்... ஒட்டல் சரக்கு மாஸ்டர்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலம்

## சாகித்திய விழாவில் ஒரு நோக்கு

தேசிய ரீதியாக நடத்தப்படும் எந்த ஒரு விழாவிலும் அரசியல் சாயம் பூசப்படக் கூடாது. விளையாட்டு விழாக்களாக இருக்கலாம் கலை, இலக்கிய, கலாசார, விழாக்களாக இருக்கலாம். அங்கே உண்மையானவர்களுக்கும், திறமையானவர்களுக்கும் முன்னுரிமையும், வாய்ப்பும் வழங்கப்பட வேண்டும். இலை மறை காய்களாக இருப்பவர்களைத் தேடிப்பிடித்து அவர்களை வெளி உலகிற்கு அடையாளம் காட்ட வேண்டும். அப்பொழுதான் இவ்வாறான விழாக்களை நடத்துவதின் நோக்கம் நிறைவேறும்.

இவ்வாறான விழா ஒன்று அண்மையில் நுவரெலியாவில் நடைபெற்றது. அதற்கு மத்திய மாகாண சாகித்திய விழா என்று பெயரிடப்பட்டிருந்தது. ஆனால் நடைபெற்ற விழா சாகித்திய விழா தானா? என்ற கேள்விக்குறியை அல்லவா எழுப்பிவிட்டுள்ளது. அதற்கு இன்றும் விடை கிடைக்கவில்லை.

மலையகம் ஏற்கனவே பல சாகித்திய விழாக்களைக் கண்டு களித்துள்ளது. கடந்த காலங்களில் மத்திய மாகாணத்தில் தமிழ் கல்விக்குப் பெறுப்பான அமைச்சர்கள் இந்த விழாவை நடத்தி உள்ளனர். ஆனால் இந்த விழாக்கள் அனைத்தும் அமைச்சர்கள் சார்ந்த கட்சியையும், தொழிற்சங்கத்தையும் பிரசாரப்படுத்தும் ஒரு மாநாடு போலவே அமைந்திருந்தன என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

இம்முறை இளமைத் துடிப்பும் மலையகத்துக்கு எதையாவது செய்யவேண்டும் என்ற ஆர்வமும் கொண்ட இளம் அமைச்சரான அருள்சாமி தலைமையிலேயே மத்திய மாகாணசாகித்திய விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த விழா பரபரப்பாகவும் அதோடு எதிர்பார்ப்புகளுடனும் பேசப்பட்டது. இது வரை நடைபெற்ற விழாக்களை விட சற்று மாறுபட்டதாகவே இருக்கும் என எல்லோரும் எதிர்பார்த்தனர்.

அமைச்சர் அருள்சாமி தன்னால் முடிந்தவரை முயற்சி செய்து ஒரு பெரிய மாற்றத்தை செய்திருந்தார். அதாவது நகரையும் விழா மண்டபத்தையும் அலங்கரிக்கும் கொடிகளின் நிறத்தை மட்டும் மாற்றி இருந்தார். இந்த ஒரு மாற்றத்தை தவிர வேறு எதையும் குறிப்பிட்டு கூறமுடியவில்லை.

எல்லாமே பழையகுருடி கதவைத் திறவடி என்ற கதையாகவே இருந்தன.

அமைச்சர் அருள்சாமி எப்படி அவசரம் அவசரமாக அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டாரோ அப்படியேதான் அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலம் போல் அமைந்துவிட்டது இந்த விழாவும். இது இலக்கிய உள்ளங்களுக்கும் கலைஞர்களுக்கும் ஒரு பெரிய ஏமாற்றமாகவே அமைந்து விட்டது.

அங்கு ஏற்பட்ட குளறுபடிகளுக்கும் குறைபாடுகளுக்கும் தனிப்பட்ட முறையில் அமைச்சரை மட்டும் குறை கூறிவிட முடியாது. அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவினர் தமது பொறுப்பை முறையாக செய்யவில்லையா? அல்லது அமைச்சர் கண்டும் காணாமலும் இருந்துவிட்டாரா?

சாகித்திய விழா ஒன்றில் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் யார்? கலை, இலக்கிய, கலாசார மற்றும் ஊடகத் துறையினர், கல்விப் பணியாற்றியோர் என கௌரவிக்கப்படுவது தான் சிறப்பு.

இவர்களை எப்படித் தெரிவு செய்வது? அமைச்சருக்கு ஐந்து பேர், செயலாளருக்கு ஐந்து பேர், மற்றும் தமது அரசியல் சகாக்களின் சிபார்சுகளில் சிலர் விழா நடைபெற பொருளுதவியும் - ஒத்துழைப்பும் வழங்கிய வகையில் சிலர் என தெரிவுசெய்யப்பட்டா கௌரவிக்கப்பட வேண்டும்? இது உண்மையான பாராட்டாகவும் கௌரவமாகவும் அமையுமா?'' இப்படி இலக்கியவாதிகள் ஆதங்கப்படுகின்றனர்.

பாராட்டப்பட வேண்டியவர்கள் அரசாங்க உத்தியோகத்துக்கு விண்ணப்பம் செய்வது போல் விண்ணப்பித்து விட்டு யாரையாவது காலைக் கையைப் பிடித்து உத்தியோகம் பெறுவது போலல்லவா ஆகிவிட்டது. இது உண்மையான இலக்கிய வாதிகளை அவமானப்படுத்துவதற்கு ஒப்பாகவே அமைந்து விட்டது.

இது தான் இம்முறை நுவரெலியாவில் நடைபெற்ற சாகித்திய விழாவில் இடம்பெற்ற கசப்பான உண்மை என்று குமுறுகின்றனர் பலர்.

கடந்தகால படைப்புகள் அவர்களின் ஆக்கங்கள், அவர்கள் கலை இலக்கியத்துக்கு ஆற்றிய பணிகள் என்பவற்றை அவதானத்துடன் ஆராய்ந்து பரிசீலனை செய்து பாராட்டப்பட வேண்டும். அப்போது தான் பாராட்டுபவர்களும், பாராட்டை பெறுபவர்களும் கௌரவம் பெறுவார்கள். இலக்கிய வாதிகள் விண்ணப்பம் போட்டு பாராட்டை கேட்டு வாங்கும் இழி நிலைக்கு தள்ளப்படக் கூடாது.

இரண்டாவதாக இளம் தலைமுறையினர் ஊக்குவிக்கப்பட வேண்டும். புதியவர்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். வளர்ந்து வரும் இளம் தலைமுறையினரின் ஆக்கங்களும் பரிசீலனை செய்யப்பட்டு அவர்கள் பாராட்டப்பட வேண்டும்.

இதைவிட்டு கட்டுரைப் போட்டி நடத்துவது போல் ஆக்கங்களை அனுப்புங்கள். நாங்கள் தெரிவு செய்து பாராட்டுகின்றோம் என்றாகி விட்டது.

மலையகத்தில் மூத்த எழுத்தாளர் ஒருவர் இப்படிக் கூறி நகைக்கிறார்.

''எனக்குத் தெரிந்த நபர் ஒருவர் ஒரு கட்டுரை எழுதுவதற்கு சில கருப்பொருட்களையும், தகவல்களையும் என்னிடம் கேட்டார். எனது ஆக்கங்களில் சிலவற்றை மேற்கோள் காட்டி எனது நண்பனுக்கு தேவையான அனைத்து தகவல்களையும் வழங்கி கட்டுரையையும் உருவாக்கிக் கொடுத்தேன். ஆனால் சில வாரங்களின் பின்பு தான் தெரிந்தது என்னிடம் கேட்டு எழுதிக் கொண்டு போனவர் பாராட்டுப் பெற்றுள்ளார் என்பது. எப்படியோ எனது ஆக்கத்திலிருந்துதானே பாராட்டு கிடைத்தது'' இப்படிக் கூறி பெருந்தன்மையுடன் மகிழ்ச்சியடைகின்றார்.

அந்த ஆக்கத்தின் உண்மையான படைப்பாளி யார் என்பதை பாராட்டியவர்கள் அறிவார்களா?

இலக்கியத் துறை சம்மந்தம் இல்லாத பலர் அரசியல் வாதிகளின் சிபாரிசுக் கடிதங்களுக்காக பாராட்டப்பட்டுள்ளார். சிபாரிசு கடிதங்கள் சிலவும் சிக்கி உள்ளன என்று தகவல்கள் கசிந்துள்ளன.

அமைச்சர் அருள்சாமி நல்லவர், வல்லர், ஆர்வம் உள்ள இளைஞர். அவர் மேலும் வளர வேண்டியவர். அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் மிக நிதானத்துடன் எடுத்துவைக்க வேண்டும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் அவர் நடத்திய முதலாவது விழாவே அவருக்கு சோதனையாக மாறிவிட்டது.

அடுத்து எடுத்து வைக்கும் அடியாவது திடமானதாக அமையட்டும். அதுவே அவருக்கும் அவர் சார்ந்த சமூகத்திற்கும் நன்மை ஏற்படுத்தும்

-சரா கோகுலன்-



# டேஸ்ட்கடை தணிகாசலம்



# மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

# தேர்தல் குண்டுக்கு ஏமாற மாட்டோம்.

தணிகாசலம் அண்ணன் காரியாலயத்தில் இருந்து வீட்டுக்கு கிளம்பிக் கொண்டிருந்தார். அப்போது அப்பாவு தலைவரும், மாரிமுத்து தலைவரும் அவசரம் அவசரமாக வந்து சேர்ந்தனர்.

''வணக்கம் அண்ணே'' இருவருமே கோஷ்டி கானம் பாடினர்.

''வணக்கம், வாங்க, வாங்க, என்ன இரண்டு தலைவர்மாரும் இவ்வளவு அவசரமா ஓடி வாரீங்க?

''ஆமாங்க அண்ணே! அந்த சங்கதியைச் சொல்லத்தானே வந்தோம்''

''அப்படி என்ன புதுச் சங்கதி?''

''எல்லாம் இந்தத் தேர்தல் சமாச்சாரம்தான்''

''இது ஒன்றும் புது சங்கதி இல்லியே! இனி தலைவர்மாருக்கு கொண்டாட்டம் தான்''

என்னங்க அண்ணே! அப்படி சொல்லிப்புட்டிங்க இப்ப என்ன நடக்குது என்றே தெரியவில்லை''

''ஆமாங்க அண்ணே! என்ன என்னாமோ நடக்குது ஏன் நடக்குது எதுக்கு நடக்குது என்றே தெரியவில்லை''

''என்ன தலைவரே இரண்டு பேரும் சேர்ந்து என்னையே குழப்பி அடிக்கிறிங்க''

''உண்மையும் அது தாங்க அண்ணே! நாங்க சொல்றது அத்தனையும் உண்மை''

''அது சரி ஏன் இந்தக் குழப்பம்? நடந்ததை விவரமா சொல்லுங்க''

''சொல்லி எல்லாம் புரியாது அண்ணன் நேரே வந்து பார்த்தால் தான் தெரியும். வாங்க போவம்'' என்று கூறியபடியே இரண்டு தலைவர்களும் தணிகாசலம் அண்ணனை மேட்டு கணக்கு சந்திக்கு அழைத்துச் சென்றனர்.

தணிகாசலம் அண்ணனுக்கு ஒரே ஆச்சரியம் ஒரு பக்கம் லைட் தூண்கள். இன்னொருபக்கம் தார் பீப்பாக்களும், கொங்கிரிட்கற்களும், இன்னும் ஒரு பக்கம் கூரைத் தகடுகள்.

''என்னங்க தலைவரே! நம்ம தோட்டத்துக் காரங்களுக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டம் அடிச்சிருக்கு லைட் போடப் போறாங்க, ரோட்டுப் வெட்டப்போறாங்க, போக்குகளை செய்யப் போறாங்க. இவ்வளவு காலமும் இதைத்தானே எதிர் பார்த்தோம்''

''என்னங்க அண்ணே! என்ன செய்வது என்று நாங்க தலையை பிச்சிக்கிட்டு நிக்கிறோம். நீங்க சந்தோசம் படுறீங்க''



''இதுல என்ன தலைவரே தலையைப் பிச்சிக்க வேண்டி இருக்கு. நாமலும் சேர்ந்து உதவி செய்ய வேண்டியது தானே''

''உதவி செய்யிறதா சொல்லித்தான் பெரிய உபத்திரத்தையே செஞ்சி இருக்காங்க''

''என்னங்க தலைவரே! புதிர் போடுரீங்க. ஒன்றும் புரியலியே''

''கொஞ்சம் பொறுமையா கேளுங்க அண்ணே! அந்த கொங்ரீட் கற்கள் பக்கத்து கட்சிக்காரங்க கொண்டுவந்து இருக்கி இருக்காங்க.''

''அப்படின்னா அந்த லைட் தூண்கள் எல்லாம்?''

''அது நீலக்கட்சிக் காரவுங்க கொண்டு வந்து போட்டிருக் காங்க. இந்த போக்குகளும் இரும்புகளும் சிவப்புக்கட்சிக் காரங்க கொண்டுவந்து போட்டு இருக்காங்க''

''ரொம்ப நல்லது எப்ப வேலை ஆரம்பிக்கப் போறாங்கலாம்''

''அங்க தாங்க அண்ணே வில்லங்கமே இருக்கு. எல்லாரும் தேர்தல் முடிந்த பின்புதான் செய்வாங்கலாம்''

''இது என்ன கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையோ''

''சரியா சொன்னீங்க அண்ணே! நாம ஓட்டுப்போட்டாத்தான் அவுங்க நமக்கு இதை எல்லாம் செய்து தருவோம் என்று கூறுகின்றார்கள். அது தான் வயித்தெரிச்சல்.''

''என்ன தலைவரே நாம ஓட்டுப்போட்டா ஏதாவது ஒரு கட்சிக்குத் தானே ஓட்டுப் போடலாம் மூணு கட்சி காரருக்கும் ஒரே நேரத்தில் எப்படி ஓட்டுப் போடுவது. அப்படிப் போட்டா அது செல்லுபடியாகாதே''

''ஆமாங்க அண்ணே! அது தான் உங்களைக் கூட்டி வந்தோம். இதை எப்படி சமாளிப்பது நீங்களே சொல்லுங்க''

அது சரி இந்த அரசியல்வாதிகள் எல்லாம் ஓட்டுப் போட்டால்தான் ரோட்டுப் போடுவோம் என்கிறாங்க இல்லியா? இப்ப அவுங்க தலைவிதி நம்ம கையில் மாட்டி இருக்கு. நாமலும் ஒரு நிபந்தனை விதிப்போம். எங்களுக்கு யார் முதலில் வேலை செய்கிறார்களோ! அவர்களுக்கே ஓட்டுப்போடுவோம் என்று சொல்லி விடுவோம். யார் நல்லதை முதலில் செய்கிறார்களோ அவங்களுக்கே நாம் ஓட்டு போடுவோம்.''

''அண்ணே சரியாச் சொன்னீங்க. கையில் மருந்தை வைத்துக் கொண்டு ஏன் தேடி அலைய வேண்டும்? தேர்தல் நேரத்தில் மட்டும் வந்து வேடம் போடுபவர்களுக்கு நாமும் பாடம் புகட்டுவோம். அதுதான் சரி என்று எல்லோரும் தீர்மானித்து விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்தமல்லியாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

# பிறந்த குழந்தைகளின் மார்பகம் வீக்கம் அடைய காரணம் என்ன?

**கே: வயது 40-ஆண். எனக்கு நீரிழிவு இருக்கின்றது. ஆனால் இன்சுலின் ஊசி போட்டு கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறேன். கடந்த சில மாதங்களாக எனது பாதங்களில் உணர்வு குறைவாக தெரிகிறது. பஞ்சுப் பொதியில் நடப்பது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. வைத்தியர்களிடம் சொன்னால் விட்டமின் பீ கம்பௌக்ஸ் மாத்திரைகளை உபயோகிக்கச் சொல்கிறார்கள். மாதக்கணக்கில் அவற்றை உபயோகித்தும் பலன் இல்லை. பரிகாரம் கூறவும்.**

ப: உங்களுக்கு ஏற்பட்டுள்ளது நீரிழிவு நோயின் ஒரு பக்க விளைவு. நீரிழிவு நோயின் போது உடலில் உள்ள உறுப்புகள், நரம்புகள் என்பன சதாகாலமும் சர்க்கரைச் சத்து நிறைந்த - இரத்த ஓட்டத்தில் மூழ்கிக் கிடக்கின்றன இந்த நிலையில்- சர்க்கரை கூடிய சூழலில் இந்த உள் உறுப்புகள், நரம்புகள் கெட ஆரம்பிக்கின்றன. இப்படி உணர்வு நரம்புகள் பாதிக்கப்படும் போது ஏற்படும் நிலையை- DIABETIC NEUROPATHY -என்று அழைப்பர்.



நரம்புகள் எமது தொடுகை. வலி, வெப்பம் போன்ற உணர்வுகளை கடத்திச் செல்லும் தன்மையால் இந்த நரம்புகள் பாதிக்கப்படும்போது இந்த உணர்வுகள் செயலிழக்கின்றன. இதில் முதலில் தொலைந்துபோகும் உணர்வு தொடுகை உணர்வு. இதனால்தான் நீங்கள் நடக்கும் போது பஞ்சு மெத்தையில் தடம் பதிப்பதுபோல் உணர்கின்றீர்கள். மின்சார வயர்களில் மின்சாரம் நடுவில் உள்ள கம்பியில் செல்கிறது. வெளியே இந்த கடத்தியை சுற்றி மின்கடத்தி அல்லாத றப்பர் உறை உள்ளது. ஆனால் நரம்புகளிலோ இது எதிர்மறையாக நடக்கின்றது. உணர்வுத் தாக்கங்கள் வெளியே உள்ள MYELIN SHEATH என்கின்ற நரம்பு உறைகள் மூலமாகவே கடத்தப்படுகின்றன.

இந்த மையலின் உறைகள் - சர்க்கரைச் சத்துக் கலந்த இரத்தத்தில் நீண்ட காலம் அமிழ்ந்து இருக்கும் போது - பாதிப்படைவதால் அவற்றில் செல்லும் உணர்வுத் தாக்கங்கள் குறைந்து -எமக்கு உணர்வுகள் மழுங்கிப் போய்விடும். இவ்வாறு ஒரு தடவை மையலின் உறை அழிந்து அல்லது சிதைந்து போனால் அவை திரும்ப வளராது. புதிதாக உருவாகவும் மாட்டாது.

எனவே தொலைந்துபோன உணர்வுகளை திரும்பப்பெற முடியாது. நீங்கள் நீரிழிவை கட்டுப்பாட்டில் வைத்திருந்தாலும்-24 மணிநேரமும் தினமும் சர்க்கரைச் சத்து கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்த முடியாது. நீங்கள் உங்கள் சர்க்கரைச் சத்து அளவை 12 மணிநேரம் பட்டினி கிடந்து காலையில் பார்க்கும் போது (FASTING- BLOOD SUGAR) சர்க்கரைச் சத்து குறைவான அளவில் இருக்கலாம். பின்னர் மாத்திரை அல்லது ஊசி போட்டு இடையில் திரும்பவும் பார்க்கும்போது கட்டுப்பாட்டில் இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு உணவு வேளையின் பின்னரும் - இந்த அளவு நிச்சயம் கூடித்தான் சிலமணி நேரத்தில் கட்டுப்பாட்டினுள் வருகிறது. எனவே - நீரிழிவு நோயாளர்களுக்கு நீண்டகால இந்த கூடுதல் - குறைதல் ஏற்படும் போது எவ்வாறாயினும் சர்க்கரைச் சத்து சூழலிலேயே உள் உறுப்புகள், நரம்புகள் இருப்பது தவிர்க்க முடியாது. எனவே NEUROPATHY என்ற நரம்பு நோய் VASCULOPATHY என்ற இரத்தக்குழாய் நோய் - என்பன நீடித்த நீரிழிவு நோய்களால் ஏற்படக்கூடிய தவிர்க்க முடியாத விளைவுகள். எனினும், சரியான கட்டுப்பாட்டில் சர்க்கரைச் சத்தை வைத்திருந்தால் இவை ஏற்படும் காலகட்டத்தை தள்ளிப் போட முடியும். ஆனால் இவை ஆரம்பித்து விட்டால் மேலும் இவை உக்கிரம் அடையாமல் வைத்தியம் செய்யலாமே ஒழிய ஏற்கனவே ஏற்பட்ட உணர்வு மழுங்கலை குணமாக்க முடியாது.

உங்கள் விஷயத்தில் NEUROPATHY ஆரம்ப நிலையில் இருப்பதால், மேலும் அது அதிகரித்து விடாமல் இருப்பதற்கு நீரிழிவு கட்டுப்பாடு விசேடமாக அவசியம். அத்துடன் B,CO மாத்திரைகள், PRIMROSE or EVENING PRIM ROSE மாத்திரைகள் என்பவை நோயின் வீரியத்தை குறைத்து மேலும் நோய் உக்கிரமடையாமல் பாதுகாக்கும்.

**கே: எனது குழந்தை பிறந்து ஒரு வாரம் ஆகின்றது. ஆண் குழந்தை. ஆனால் அதனது மார்பகப் பகுதி வீங்கி காணப்படுகின்றது. மார்பில் பால் இருப்பதாகவும் - அந்தப்பாலை பிசைந்து வெளியேற்ற வேண்டும் அல்லாவிடில் பிற்காலத்தில் பெண்கள் போல் மகனுக்கும் மார்பகம் பெருத்து விடும் என்றும் வீட்டில் உள்ளோர் பயமுறுத்துகின்றார்கள். ஆனால் எனது வைத்தியரோ இதெல்லாம் முட்டாள் தனமான கற்பனைகள் மார்பகத்தை பிசைந்து எடுப்பதால் பற்றீரியா தொற்று உண்டாகும் என்று பயமுறுத்துகின்றார். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆலோசனை தரவும்.**

ப: வரிசைக்கிரமத்தில் பதில் எழுதுவதால் - உங்கள் கடிதம் கிடைத்து 2 மாதங்களாகிவிட்டன. எந்த முறையிலே, அல்லது ஒன்றும் செய்யாமல் விட்டோ உங்கள் பிரச்சினை இன்றைய அளவில் நிச்சயம் தீர்ந்திருக்கும். எனினும் இப்படியான விஷயங்கள் எதிர்காலத்தில் தாயாகப் போகும் பல பெண்களுக்கு உதவும் என்பதனால் காலம் தாழ்த்தியும் உங்கள் வினாவுக்கு பதிலளிக்கிறேன்.

பிறந்த குழந்தைக்கு மார்பு பெருத்தல் - மார்பில் சிறிது சுரப்பு இருத்தல் சாதாரணமாக எற்படும் விஷயம் தான். மார்பில் ஏற்படும் சுரப்பை WITCH MILK 'மந்திரக் கிழவியின் பால்' என்று சொல்லி - வெளியேற்றும் பழக்கம் முற்காலத்தில் பல ஐரோப்பிய நாடுகளிலும் இருந்து வந்துள்ளது. ஆனால் தாயின் பாலில் இருக்கின்ற - ஹார்மோன்களின் விளைவே இந்த மார்பு பெருத்தலுக்கு காரணம். தாயின் உடலில் கர்ப்ப காலத்தில் ஊறி இருக்கின்ற பெண்களுக்கே உரித்தான ஹார்மோன்களே பாலுடன் சேய்க்குசென்று இந்த மாறுதல்களை உருவாக்குகின்றன. சில வேளைகளில் கர்ப்பகாலத்துக்கு முன்னர் குடும்பக் கட்டுப்பாடு மாத்திரைகள், ஊசி உபயோகப்படுத்திய தாய்மார்களின் குழந்தைகளில் அநேகருக்கு இவ்வாறு நேரிடலாம்.

இதற்கு மருந்துகள் தேவையில்லை. பாலை பிசுக்கி வெளியில் எடுக்கவும் வேண்டாம். பிற்காலத்தில் மார்பகம் பெருக்கும் என்பதற்கு எதுவித மருத்துவ ஆதாரமும் இல்லை. மார்பு சிவந்து காய்ச்சல் - வலி இருந்தால் - தொற்று ஏற்பட்டிருக்கின்றது என்பதற்கு அறிகுறி. தொற்று ஏற்படுவதற்கு முக்கிய காரணம் மார்பை பிசுக்கி சுரப்பை வெளியேற்ற முயற்சிப்பதே. அவ்விதம் ஏற்படின் சில ANTIBIOTICS நோய் கொல்லி மருந்துகள் உபயோகிப்பது அவசியம்.

**கே: வயது 17. ஆண். எனக்கு பரீட்சைகள் எதற்காவது போக முன்னர் அல்லது INTERVEW என்கிற நேர் காணல் எதற்கும் போக முன்னர் - வயிற்றுக்குள் ஏதோ செய்யும். அடிக்கடி மலம் கழிக்க வேண்டும் போன்ற உணர்வு தோன்றும். இது எதனால்? எனக்கு நரம்புத்தளர்ச்சி நோய் ஏற்பட்டிருக்கின்றதா? விளக்கம் வேண்டுகிறேன்.**


ப:உங்களைப் போல் உலகில் ஐந்து பேருக்கு ஒருவர் இப்படி அவதிப்படுகின்றார். இதற்கு காரணம். ANXIETY என்கிற விஷயம். ஓர் ஆபத்தான சந்தர்ப்பத்தில் எமக்கு ஏற்படும் ஒரு பாதுகாப்பு உணர்வுதான் இந்த ANXIETY. இந்த உணர்வு சில உடலியக்கங்களான படபடப்பு, வயிற்று பிசைதல், வயிற்றோட்டம், உடல் சோர்வு போன்றவற்றோடு சேர்ந்து வெளிவருகின்றது. ANXIETY ஏற்படும் போது உடலில்- ADRERALINE NOR - ABRENALINE போன்ற சுரப்புகள் வெளிவருகின்றன. இவற்றின் தாக்கங்கள் இருதயம், குடல் உறுப்புகள், தசைகள் என்பவற்றில் நடைபெறும் போது தான் - மேற்கூறிய உடல் இயக்கங்கள் நேருகின்றன. இது சாதாரணமான ஒரு விஷயம். பரீட்சைக்கு, நேர் காணலுக்கு சரியாக தயாராக இல்லாதவிடத்து - பய உணர்வு இந்த ANXIETY ஐ தோற்றுவிக்கிறது. ஆனால் இந்த ANXIETY தேவையில்லாத விஷயத்துக்கு - தேவையில்லாத அளவு அதிகமாக சம்மந்தமில்லாத விதத்தில் வாழ்க்கையை பாதிக்கும் அளவிற்கு அடிக்கடி ஏற்பட்டால் - அது ஒரு மனோவியாதி. இவை PANIC ATTACKS, PHOBIAS என்கிற அதீத பயச் சுபாவம் என விருத்தியடையும். இப்படிப்பட்ட வியாதிகளுக்கு மருத்துவ உதவி அவசியம் தேவை.



# மருந்து சாப்பிடும் போது அவதானம் தேவை

மருந்து சாப்பிடும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் பல உண்டு. அவைகளில் சிலவற்றை இங்கு காண்போம்.

எப்போதும், எக்காரணம் கொண்டும், நோயின் தாக்கம் குறைவாக இருந்தாலும், சாதாரண நோயாக இருந்தாலும் அதில் அலட்சியம் காட்டவேண்டாம்.



எந்த நேரத்திலும் டாக்டர்களின் ஆலோசனை இன்றி சுயமாக மருந்துகளை வாங்கி சாப்பிடக்கூடாது.

டாக்டரிடம் தயக்கமின்றி உங்களுக்கு இருக்கும் நோய் பற்றி பேசுங்கள். அவராகவே உணர்ந்து கொண்டு உங்களிடம் கேட்பார் என்று நினைத்துக்கொண்டிருக்காதீர்கள்.

டாக்டர் மருந்து எழுதித் தரும் சீட்டைப்பார்த்து எந்தெந்த மருந்து என்னென்ன நோய்க்கு என்று விளக்கம் கேளுங்கள். அந்த மருந்துக்களை எந்த அளவில், எந்த நேரத்தில் சாப்பிட வேண்டும் என்றும் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். வீட்டிற்கு வந்த பிறகும் உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் தயக்கமின்றி டாக்டரிடம் கேளுங்கள்.

மருந்துக்களை வாங்கிவிட்டு, அந்த கடையில் வைத்தே மருந்துகளை சரிபார்த்து எடுங்கள். வீட்டிற்குப் போய் சரிபார்த்துக்கொள்ளலாம் என்று நினைக்கக்கூடாது. வாங்கும் எல்லா மருந்துகளுக்கும் மறந்து விடாமல் பில் வாங்கிவிடுங்கள் . பில் மட்டுமே பின்னால் பிரச்சினைகள் எற்பட்டால் ஆதாரமாக இருக்கும்.

சில டாக்டர்கள் எழுதிக்கொடுக்கும் மருந்துகள், அந்த டாக்டரின் பார்மசியிலோ, சில குறிப்பிட்ட கடைகளிலோ தான் கிடைக்கும். அப்படிப்பட்ட நிலை இருந்தால் அந்த குறிப்பிட்ட பார்மசிகளிலே அந்த மருந்துகளை வாங்கிவிடுங்கள். அல்லது அந்த டாக்டரிடமே அதற்கு மாற்றாக எந்த மருந்து வாங்கலாம் என்றும் எழுதி வாங்கிக்கொள்ளுங்கள்.

வாங்கிய மருந்துகளை சப்பிடும் போதும் கவனம் தேவை. சில மருந்துகள் சிலருக்கு ஒத்துக்கொள்ளாது.

பின்விளைவுகளோ, ஏதாவது உபாதைகளோ ஏற்பட்டால் உடனடியாக டாக்டரின் கவனத்திற்கு அதை கொண்டு சென்று விடுங்கள்.

மருந்துக்கும் மதுவுக்கும் ஆகாது. அதனால் தான் மது அருந்துபவர்கள், அல்லது டாக்டரிடம் முதலிலே அதைப்பற்றி பேசிவிட வேண்டும். மது அருந்தும் கட்டாயம் இருப்பவர்கள், மருந்து சாப்பிடுவதற்கு முன்னால் எப்போது எந்த அளவில் மது அருந்தலாம் என்பதையும் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

சில நேரங்களில் மருந்து மீதம்



இருக்கும் போதே நோய் தீர்ந்துவிடும் நிலை ஏற்படலாம். அப்போது அந்த மருந்துகளை சாப்பிடுவதை நிறுத்திவிடக் கூடாது.

வீட்டில் சிறுவர்கள் இருந்தால் அவர்களின் கைகளுக்கு எட்டாத தூரத்தில் மருந்துகளை வைத்திருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் போட்டி இல. 199

சொற்சிலம்பம் 199 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் பெப்ரவரி 26ஆம் திகதி ஆகும். விடைகள் மார்ச் 5ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மார்ச் 12ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.197க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும்.பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 197

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வி | 2 வ | 3 சா | யி | ■ | 4 அ | 5 மு | 6 து |
| 7 ர | த | ம் | ■ | 8 சே | வ | க | ன் |
| 9 ச | ம் | பி | ர | தா | ய | ம் | ■ |
| ம் | ■ | ரா | ■ | 10 ர | ம் | ■ | 11 வ |
| ■ | 12 வ | ணி | 13 க | ம் | ■ | 14 ப | ரு |
| 15 ந | ரி | ■ | த் | ■ | 16 ஏ | ல | ம் |
| ம் | ■ | 17 ஆ | த | 18 வ | ன் | ■ | ப |
| 19 ப | த் | தி | ரி | கை | ■ | 20 தா | டி |

## சொற்சிலம்பம் போட்டி இல. 184

1. அனீஸா. அல். ஆஸாத், புன்னைக்குடா வீதி, ஏறாவூர் – 03
2. காமில்ஜாவீத் பாத்திமாஹானா, இல.33, காட்டுப்பள்ளி, குறுக்கு வீதி, ஏறாவூர் – 03
3. கௌ.லோகேஷன், இல.448, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

1. என்.லயந்தினி, இல.469, மல்லாவி, யோகபுரம்.
2. பொன். கனகரத்தினம், அரசினர் மருந்தகம், மானிப்பாய், யாழ்ப்பாணம்.
3. எம்.எம்.றிஸ்மி, ''பழக்கடை'' புன்னைக்குடா வீதி, ஏறாவூர் – 03
4. இ. சாரதாதேவி, ''ராஜபுரம்'', மல்வம் குறுக்கு வீதி உடுவில்.
5. ஸ்ரீ அ. அரசரெத்தினம், சேனையூர் – 06, மூதூர்.
6. திருமதி எஸ். ரெஜினோல்ட், இல.262, பதுளை வீதி, பண்டாரவளை.
7. து.சிரம்பரராசா வினோதன், இல, 10/1, கணேசபுரம், கிளிநொச்சி.
8. அ. ஜெனோஷன், ஏழாலை கிழக்கு, ஏழாலை, யாழ்ப்பாணம்.
9. மீராமுகைதீன் ஹாலீத், இல.21, ஏறாவூர் –03ஏ
10. ச.சிறீலதா, எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ்

## சொற்சிலம்பம் போட்டி இல. 199

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | | 10 | ■ | 11 | |
| 12 | | ■ | 13 | | | ■ | |
| ■ | 14 | 15 | | | ■ | 16 | |
| 17 | | | | ■ | 18 | | ■ |
| | ■ | | ■ | 19 | | | 20 |
| 21 | | | | | ■ | 22 | |

## சொற்சிலம்பம் போட்டி இல.199

### இடமிருந்து வலம்

1. இரக்கப்படல்
4. நீரில் வேகவை
6. பிழை அல்ல
7. மனிதன் எழுப்பும் ஒலி
8. ஆசைப் பெருக்கத்தை எற்படுத்துவது
11. பூமி
12. செல்வம்
13. மக்கள்
14. நண்பகல்
16. காலால் விடுவது
17. இரத்தம்
18. மரம்
29. நித்திரை செய்யும் இடம்
21. ஆசைப்படல்
22. பாய்

### மேலிருந்து கீழ்

1. முத்தி
2. அடிமையானவர்
3. பழக்கமுள்ளது/ தெரிந்தது.
4. மத்திய கிழக்கில் முக்கிய மொழி
5. முன்னைய காலத்தில் போர் வீரன் பழகியிருக்க வேண்டிய ஒன்று
9. வர வேண்டியது
10. கோபம்
15. பொருட்களின் மூன்று நிலைகளுள் ஒன்று
16. வலிமையான உலோகம்
17. தேவைக்கு வழங்கும் ஒத்தாசை
18. மறி
19. இது நமக்கு முப்பத்திரண்டு
20. பிடிக்கப்பட்டிருப்பவர்

# கடும் போக்காளர்களின்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

அர்த்தமுள்ளதாக அமைவது குறித்தே பேசப்போகின்றோம் என்று அரசாங்கம் கூறுவதன் அர்த்தம் என்ன?

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் இராணுவத்தை சுதந்திரமாக நடமாட அனுமதிக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்றையே அர்த்தமுள்ள ஒப்பந்தமாக அரசாங்கம் கருதுகின்றதா? தேர்தல் காலத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக இருக்கும் போது தாம் கூட கிளிநொச்சிக்கு சுதந்திரமாகச் செல்வதற்கு இடமளிக்காமல் தடுக்கும் இந்த யுத்த நிறுத்த உடன்பாடு அவசியம் தானா என்று கேள்வி எழுப்பி இருந்தார். இத்தகைய சுதந்திரம் ஜனாதிபதிக்கோ அல்லது தென்னிலங்கையருக்கோ அல்லது முப்படையினருக்கோ கிடைக்கும்போதுதான் யுத்தநிறுத்த உடன்பாடு அர்த்தமுள்ள உடன்பாடாக தென் இலங்கையரால் ஏற்றுக்கொள்ளப்படுமா?

இவ்வாறானதொரு நிலைப்பாட்டில் மஹிந்த இருப்பாரேயானால் அவர் ஜெனிவாவுக்கு பேச்சுவார்த்தைகளுக்காக தனது தூதுக்குழுவை அனுப்பத் தேவையில்லை. 14 நாள் முன்னறிவித்தலோடு ஒப்பந்தத்தை இல்லாது ஒழித்துப் பார்க்கலாமே!

இறுதியாக ஒன்றை மட்டும் கூறலாம். தற்போது நெருக்கடிக்கு உள்ளாகி உள்ள பாதுகாப்பு நிலவரத்தை சீராக்கும் வகையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அமுலாக்குவதற்கான இணக்கநிலை ஜெனிவா பேச்சுக்களின் போது உருவாக்கப்பட வேண்டும். அதைவிடுத்து ஜே.வி.பி, சிகல உறுமய போன்ற கட்சிகளை திருப்திப்படுத்தி தனது ஆதரவு தளத்தை வலுப்படுத்தும் களமாக ஜெனிவாவை மாற்றுவதற்கு மஹிந்த முயலுவரானால் ஸ்ரீலங்காவின் எதிர்காலம் நிச்சயமாக சூனியமாகி விடும் என்று கூறுவதைத் தவிர வேறு எதையும் கூற முடியாது.

# சுற்றி சுற்றி சுப்பரின்

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகள் தயாராகின்றனர்

ஆனால் புலிகள் தரப்பு முன்னர் நாம் குறிப்பிட்டதைப் போல யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை சீராக அமுலாக்கல் அல்லது பலப்படுத்தல் என்ற ஒரு வரி விடயம் மட்டுமே ஜெனிவாவில் பேசப்படும் என அறிவித்துள்ளதுடன் அதற்கு அப்பால் ஒரு அங்குலமேனும் நகரப் போவதில்லை எனவும் கூறிவிட்டது.

அதுமட்டுமல்ல, அரச தரப்பில் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த மீறல்களை பட்டியலிட்டு விட்டு பேச்சுவார்த்தை மேசையில் சமர்ப்பிப்பதற்கான பணியிலும் தீவிரமாக கவனம் செலுத்தி வருகிறது. மேலும் ஆயுதக்குழுக்கள் அல்லது ஒட்டுப் படைகள் மூலம் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளையும் யுத்த நிறுத்தத்தை பலப்படுத்துவதற்கான தனது ஆலோசனைகளுடன் இணைத்து பேச்சுவார்த்தையின் போது முன்வைக்க காத்திருக்கிறது. இவ்வாறு இவை முன்வைக்கப்படும்போது அரசாங்கத்தின் யுத்த நிறுத்த மீறல்களும் மனித உரிமை துஷ்பிரயோகமும் சர்வதேச மயப்படுத்தப்படும் எனவும் அதற்கான பொன்னான சந்தர்ப்பம் இது எனவும் விடுதலைப் புலிகள் நம்புகிறார்கள்.

### பேய்கள் சேர்கின்றன

இது இவ்வாறு இருக்க, தென்னிலங்கை கட்சிகள் அனைத்தும் இந்த நாட்டின் தமிழ் மக்களின் உரிமைகளை நசுக்குவதற்கு அல்லது அவர்களின் உரிமைப் போராட்டங்களை முறியடிப்பதற்கு கைகோத்து செயல்படுவதென்பது புதுமையான விடயமல்ல. என்றென்றும் தொடர்ந்து வரும் செயற்பாடே இது. அதனால்தான் ஜெனிவா செல்லவுள்ள அரச தூதுக்குழுவினரின் மூளையைச் சலவை செய்வதற்கென நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையில் ஐ.தே.கட்சியின் ஜீ.எல்.பீரிஸும், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்த ஒஸ்ரின் பர்னாந்துவும் உரையாற்றி உள்ளனர். தவிர எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவும் பேச்சுவார்த்தை சம்பந்தமாக ஜனாதிபதியை சந்தித்து உரையாட இருக்கின்றார். முன்னாள் ஜனாதிபதி ஜேர்.ஆர். கூறியது போல் தமிழர்களுக்கு எதிராக சிங்களத் தலைமைகள் பேயுடனும் கூட்டுச் சேரத் தயாராக இருப்பதையே இவை எடுத்துக் காட்டுகின்றன.

மேலும், இதுவரை ஏகாதிபத்திய எதிர்ப்பு வாதியாக தன்னை இனங்காட்டி வந்த ராஜபக்ஷ இப்போது அமெரிக்காவின் புகழ் பாட ஆரம்பித்துள்ளார்.

* அமெரிக்காவின் அழுத்தம் காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் ஜெனிவா பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டனர் என தனக்கு நெருக்கமானவர்களிடம் அவர் கூறியிருப்பதுடன்

* ஈரானின் அணு ஆயுத தயாரிப்பு விவகாரத்தை ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்லும் தீர்மானத்துக்கு ஆதரவாகவும் ஸ்ரீலங்கா வாக்களித்துள்ளது.

மேலும், ஸ்ரீலங்காவுக்கு அமெரிக்கா அளித்துவரும் ஆதரவுக்கு நன்றி தெரிவிப்பதற்காக விரைவில் அமெரிக்கா சென்று ஜனாதிபதி புஷ்ஷைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளிலும் இறங்கியுள்ளார் ஸ்ரீலங்கா ஜனாதிபதி மஹிந்த ராஷபக்ஷ.

இவற்றையெல்லாம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளும்போது அரசாங்கம் நடைபெற இருக்கும் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை வைக்கவில்லை என்பதும் இராணுவத் தீர்விலேதான் நாட்டம் கொண்டுள்ளது என்பதும் தெளிவாகிறது. அதனால்தான் ராஜபக்ஷ அமெரிக்காவை நோக்கி மட்டுமல்ல இந்தியா, சீனா, பாகிஸ்தான் மற்றும் ஈரான் போன்ற நாடுகளிடம் இராணுவச் சரணாகதிக்காகக் கைநீட்டி உள்ளார்.

இந்த வகையில் அரசு ஜெனிவாவையும் யுத்த களமாகவே நோக்குகின்றது என்று சொல்லலாம். பேச்சுக்கள் நடக்கப் போவதில்லை. நடந்தாலும் தொடரப் போவதில்லை. தொடர்ந்தாலும் பயன்தரப் போவதில்லை என்று துணிந்து கூறலாம். சுற்றிச் சுற்றி சுப்பரின் கொல்லைக்குள்தான் இந்த அரசாங்கமும் நிற்கப் போகிறது.



### அட்லஸ் வந்த கதை!

மெர்கோடர் என்ற ஐரோப்பிய மேதைதான் 1534இல் முதன் முறையாக தேசப்படம் வரைந்தார். முதன் முறையாக அவர் வெளியிட்ட தேசப்பட புத்தகத்தின் மேலட்டையில் அட்லஸ் உலகைத் தாங்கிக் கொண்டிருப்பது போன்ற படம் வரையப்பட்டிருந்தது. எனவே தான் இன்றும் தேசப்படப் புத்தகங்களை அட்லஸ் என்று அழைக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமபலத்துடன் அணிகள்

இந்திய - பாகிஸ்தான் அணிகளிற்கிடையேயான ஐந்து ஒரு நாள் ஆட்டங்களில் இரண்டு ஆட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில் இரு அணிகளும் தத்தமது பலத்தை நிருபித்து தொடரை 1:1 என்ற ரீதியில் சமநிலையில் வைத்துள்ளன. அதுபோலவே இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளின் சிறப்பு மூன்று இறுதியாட்டங்கள் கொண்ட வி.பி. கிண்ணத்தின் இறுதிச் சுற்றில் இரண்டு ஆட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில் இரு அணிகளும் ஒவ்வொரு ஆட்டத்தில் வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றுவதற்கான மூன்றாவது ஆட்டத்தில் மோதவுள்ளன.

பலராலும் எதிர்பார்த்தபடியே விறுவிறுப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்திய - பாகிஸ்தான் அணிகளிற்கிடையிலான ஒருநாள் தொடர் இரு நாட்டு இரசிகர்களிற்கும் பெரும் விருந்தாக அமைந்து வருகின்றது. பெஷாவரில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் துடுப்பாட்டத்தில் சோபித்த இந்திய அணி பந்து வீச்சில் பிரகாசிக்கத் தவறியமையால் தோல்வியடைந்தது. அதேநேரம் பாகிஸ்தான் அணி தனது திறமையான துடுப்பாட்டத்தின் மூலம் இந்திய பந்து வீச்சாளர்களிற்கு நெருக்கடியினைக் கொடுத்து 300 ஓட்டங்களைத் தாண்டி வெற்றியைப் பெற்றது. அவ் ஆட்டத்தில் இந்திய அணியின் முன்னணித் துடுப்பாட்டவீரரான சச்சின் டெண்டுல்கர் 39 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தது மட்டுமன்றி ஒரு நாள் ஆட்டங்களில் 14000 ஓட்டங்களைக் கடந்து உலக சாதனை புரிந்தார்.

சச்சின் பாகிஸ்தான் அணிக்கு எதிராக இதுவரை ஐந்து சதங்களை ஒரு நாள் ஆட்டங்களில் பெற்றுள்ளார். ஆனால், இந்த ஐந்து சதங்களில் நான்கு சதங்களை பெற்ற போது இந்திய அணி தோல்வியையே கண்டுள்ளது. கடந்த 2004 ஆம் ஆண்டு ராவல்பிண்டியில் நடைபெற்ற ஒரு நாள் ஆட்டத்தில் சச்சின் 141 ஓட்டங்களைப் பெற்ற போதும் தனது அணியின் தோல்வியை தவிர்க்க முடியவில்லை. அதுபோலவே பெஷாவரில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் சச்சின் 100 ஓட்டங்களைப் பெற்றபோதும் அணியை தோல்வியிருந்து காப்பாற்றவில்லை.

முதல் ஆட்டத்தில் கிடைத்த தோல்விக்கு பழிவாங்கும் ரீதியில் இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்தில் இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் திறம்படச் செயற்பட்டனர். ராவல் பிண்டியில் நடைபெற்ற இவ் ஆட்டத்தில், முதல் ஆட்டத்தில் சதம் பெற்ற சல்மான்பட்டை ஓட்டமெதுவும் பெறாத நிலையில் பதான் ஆட்டமிழக்கச் செய்தார். தொடர்ந்து சிறப்பாகச் செயற்பட்ட பதான், கம்ரன் மற்றும் சயீட் அப்ரிடி ஆகியோரின் விக்கெட்டுக்களையும் கைப்பற்றி பாகிஸ்தான் அணியின் ஓட்டக்குவிப்பை கட்டுப்படுத்தி இருந்தார்.

பாகிஸ்தான் அணியால் அவ்வாட்டத்தில் 266 ஓட்டங்களையே பெறமுடிந்தது. இந்த இலக்கை இந்திய அணி மூன்று விக்கெட்டுக்களை மட்டும் மாத்திரம் இழந்து அடைந்தது. ஆரம்ப ஜோடிகளான சச்சின் 42 ஓட்டங்களையும் சேவாக் 67 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இவ்விருவரும் இணைந்து முதல் விக்கெட்டுக்காக 106 ஓட்டங்களைப் பெற அதேவேளை மூன்றாவது விக்கெட்டுக்காக டிராவிட் - யுவராஜ் ஜோடி 118 ஓட்டங்கள் பெற்றுகொடுத்து அணிக்கு அபார வெற்றியைப் பெற்றுக்கொடுத்தனர்.

இரு ஆட்டங்களிலும் துடுப்பாட்டத்தில் பிரகாசித்த இந்திய அணி இரண்டாவது ஆட்டத்தில் பந்துவீச்சு, களத்தடுப்பு போன்ற துறைகளிலும் பிரகாசித்திருந்தது. இது போலவே அவ்அணி தொடர்ந்தும் செயற்பட்டால் பாகிஸ்தான் அணியை வீழ்த்த முடியும் இல்லாது விடின் பெரிய ஓட்ட எண்ணிக்கையை கடந்தாலும் பந்துவீச்சு எடுபடாதவிடத்து தோல்வியையே சந்திக்க நேரிடும். திட்டமிட்டு செயற்படுவதன் மூலம் முதல் ஆட்டத்தில் பெற்ற தோல்வியைப் போல மேலும் நேரிடுவதை தடுக்க முடியும்

இதேவேளை, வி.பி. கிண்ணத் தொடரின் விறுவிறுப்பு உச்சத்திற்கே சென்றுவிட்டது. முதல் இறுதி ஆட்டத்தில் உலக சம்பியனை 22 ஓட்டங்களால் வெற்றிபெற்றிருந்தது நமது இலங்கையணி. அவ் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி ஆரம்பத்தில் நிதானமாக ஆடி விக்கெட்டுக்களை விழாமல் பாதுகாத்துக்கொண்டு ஓட்டங்களை எடுத்தது. பின்னர் இறுதி ஓவர்களில் அதிரடி ஆட்டத்தின் மூலம் 274 ஓட்டங்களை எடுத்து இலங்கை அணி.

அண்மைக்காலமாக நிதானம் கலந்த அதிரடியுடன் ஓட்டங்களைக் குவித்து வரும் இலங்கை அணியின் விக்கெட்காப்பாளர் குமார் சங்ககார இவ்வாட்டதில் 83 ஓட்டங்ளைப் பெற்று இலங்கை அணி வெற்றி பெறக் காரணமாயிருந்தார். அதேவேளை, இலங்கை அணியின் களத்தடுப்பும் இவ்வெற்றிக்கு காரணமாயிருந்தது. திலகரட்ண டில்சானின் அற்புதமான களத்தடுப்பின் மூலம் அவர் அவுஸ்திரேலியாவின் நான்கு முக்கிய வீரர்களை 'ரன் அவுட்' செய்தார்.

எட்டு ஆண்டுகளின் பின்பு வி.பி. கிண்ணத்தின் முதல் இறுதியாட்டத்தில் தோல்வியடைந்த அவுஸ்திரேலிய அணி சிட்னியில் நடைபெற்ற இரண்டாவது இறுதியாட்டத்தில் ஆவேசமாக விளையாடி 167 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி ஆரம்பத்தில் 3 விக்கெட்டுக்களை வெறும் 10 ஓட்டங்களிற்கு வேகப்பந்துவீச்சாளர் வாஸின் அற்புதமான பந்துவீச்சால் இழந்தது. ஆனால், பின்னர் ஜோடி சேர்ந்த பொன்டிங் - சைமன்ஸ் ஜோடி தம்மிடையே 237 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்று தமது அணியின் வெற்றிக்கு அடித்தளமிட்டனர்.

சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 99 ஓட்டங்களை அள்ளி வழங்கி உலக சாதனை படைத்தார். அவுஸ்திரேலிய நாட்டு இரசிகர்களின் வார்த்தை துஷ்பிரயோகங்களால் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ள முரளியில் அந்த ஆட்டத்தில்விக்கெட்டுக்கள் எதனையும் வீழ்த்த முடியாமல் போனது. முக்கிய ஆட்டத்தில் முன்னணி வீரர் ஜெயசூரியா ஓட்டமெதுவும் பெறாதநிலையில் ஆட்டமிழந்தது இலங்கை ரசிகர்களை கோபங்கொள்ள வைத்திருக்கும். அவ் அணியில் 201 ஓட்டங்களை மட்டுமே சேகரிக்க முடிந்தது. அதுவும் 14 ஓவர்கள் மீதிருக்க தனது அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.



**- தங்கா -**

இனிமேல்தான் கிண்ணத்தை சுவீகரிக்கவுள்ள அணியை தெரிவு செய்யவுள்ள ஆட்டம் நடைபெறவுள்ளது. இறுதியாட்டங்களில் ஓர் இறுதியாட்டமாக நடைபெறவுள்ள இவ்வாட்டத்தில் வெற்றிபெற இரு அணிகளிற்கும் சந்தர்ப்பம் உள்ளது.■

# காதலில் வீழ்ந்த ஷரபோவா!



**'அது'** எப்போது வரும் என்று யாராலையும் சொல்லமுடியாது. எது என்று உங்களுக்கு கேட்கத் தோன்றும். அதுதான் காதல்! இன்றைய காலத்தில் இளசுகளுக்கு காதல் மட்டும் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வந்து விடுகின்றது. அது பிரபலங்களையும் விட்டு வைத்து விடுமா என்ன ? அதிலும் டெனிஸ் பிரபலங்கள் காதலிப்பது ஒன்றும் புதில்லை. ஏற்கனவே அமெரிக்காவின் அகாசி மற்றும் ஸ்டெபி கிராவ் காதலித்து மணம் முடித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இந்த வரிசையில் சேர்ந்திருக்கும் பிரபலம் ரஷ்யாவின் டெனிஸ் அழகுப் புயல் மரியா ஷரபோவா. இவர் டென்னிஸ் விளையாட்டின் மூலம் ஏராளமான ரசிகர்களின் உள்ளத்தை கொள்ளை கொண்டவர். இவரை ஒரு டெனிஸ் **பிரபலம் காதலிக்கிறார்.**

**அந்த டெனிஸ் வீரர் யார் தெரியுமா?** அமெரிக்க வீரர் அன்டி ரொடிக். ஆரம்பத்தில் சாதாரணமாகப் பழகிய இவர்களிடையே காலப்போக்கில் காதல் அரும்பியது. முதலில் இவர்கள் இருவரும் இதை மறுத்தாலும் ஒன்றாக ஊர் சுற்றுவதை மட்டும் நிறுத்தவே இல்லை. எந்த நாட்டிற்கு டெனிஸ் விளையாடச் சென்றாலும் ஒன்றாகவே வலம் வந்தார்கள். எந்த நிகழ்சியானாலும் ஒன்றாகவே கலந்துகொண்டார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக அமெரிக்காவில் நடந்த ஒரு விருது வழங்கும் விழாவினை குறிப்பிடலாம். இந்த விழாவில் கலந்துகொள்ள, ஷரபோவாவுக்கு அன்டிரொடிக் அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பினை ஏற்று ஷரபோவாவும் சென்றார்.

ஷரபோவாவும் சும்மா இருப்பாரா? தன் பங்குக்கு ரொடிக்கை பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் சென்றார்.

இப்படி நிகழ்ச்சிகளில் ஒன்றாக இவர்கள் கலந்துகொண்டாலும் பத்திரிகையாளர்களிடம் தங்கள் பழக்கம் நட்பு ரீதியானது என்றே கூறினார்கள். இந்த நிலையில் அண்மையில் நடந்த ஒரு நிகழ்வு இவர்களுக்குள் இருக்கும் காதலை உறுதி செய்தது.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு டெனிஸ் வீரர்களுக்கான விழா ஒன்று நடந்தது. இந்த விழாவில் முக்கிய விருந்தினராகக் கலந்துகொள்ள ஷரபோவாவுக்கு அழைப்பு விடுக்கப் பட்டது. இந்த அழைப்பினை ஏற்று ஷரபோவாவும் விழாவுக்குச் சென்றார். விழா தொடங்கும் நேரத்தில் ரொடிக் அருகில் உள்ள கேளிக்கை விடுதியில் டெனிஸ் விளையாடிக் கொண்டிருக்கிறார் என்று ஷரபோவாவின் காதுகளுக்கு செய்தி எட்டவே அந்த முக்கிய நிகழ்ச்சியை ரத்துச் செய்து விட்டு தனது காதலனைத் தேடிச் சென்றார்

அங்கு ரொடிக்கின் டெனிஸ் ஆட்டத்தை ரசித்த இவர் அப்படியே விருந்திலும் கலந்துகொண்டார். அப்போது அங்கு சென்ற நிருபர்கள் ஷரபோவாவிடம் ரொடிக்கைப் பற்றி கேட்ட போது பதிலேதும் சொல்லாமல் சிரித்துக்கொண்டே சென்று விட்டாராம். தற்போது ஷரபோவாவுக்கு 18 வயதும் அன்டி ரொடிக்கு 23 வயதும் ஆகின்றது.


எது எப்படியோ! ரஷ்யாவின் அழகு ராணியை சுற்றி வரும் ராஜாவாக மாறிவிட்டார் ரொடிக். போகிற போக்கைப் பார்த்தால் கூடிய விரைவில் அமெரிக்க மருமகளாக ஷரபோவா ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்சுவை கதம்பம்

ஆக்கம்: ஜூலியட்

## தாஜ்மஹால்



பாரசீகக் கட்டட நுணுக்கமும் இந்தியாவின் ஆத்மாவும் கலந்து உருவான காதல் மாளிகை தாஜ்மஹால். இதுதான் உலகில் இதுவரை எழுப்பப்பட்டுள்ள காதல் சின்னங்களிலெல்லாம் பிரமாண்டமானது, விலை மதிப்பற்றது. காலம் காலமாக அழியாமல் நிலைத்து நிற்கக்கூடியது.

மகா அக்பரின் மகன் சலீம் ஜஹாங்கீர். அவரின் நான்காவது மகனான ஷாஜஹான் -1592 இல் பிறந்தார். அவர் 1607 இல் தனது 15 ஆவது வயதில் மும்தாஜ் என்றும் அர்ஜீமந்த் பானுவைச் சந்தித்துக் காதல் கொண்டார். அவளைத்தான் மணந்து கொள்வேன் என்று தன் தந்தையும் சக்கரவர்த்தியுமான ஜஹாங்கீரிடம் கூறி நான்கு ஆண்டுகள் காத்திருந்து 1611 இல் மும்தாஜை மணந்து கொண்டார். 1627 இல் தனது தந்தை மரணமடைந்ததும் இந்துஸ்தானின் ஐந்தாவது மொஹலாய மன்னராக முடிசூடிக்கொண்டார் ஷாஜஹான்.

மொஹலாயச் சக்கரவர்த்திகளின் அரண்மனையில் ஆயிரக்கணக்கான அழகிகள் மன்னர் குலத்தவரின் போகப் பொருளாக இருந்தனர். அவர்கள் நாளுக்கொரு பெண், வேளைக்கொரு மது என வாழ்க்கையை அனுபவித்து வந்தனர். ஆனால் மாமன்னர் ஷாஜஹான் மட்டும் அதற்கு விதிவிலக்காய் இருந்தார். தனது 15 ஆம் வயதிலிருந்தே மும்தாஜை விட வேறெந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்கவும் இல்லை. இதயத்தில் இடம் கொடுக்கவும் இல்லை.

இவர்கள் இருவரும் கணவன் மனைவியாக கூடிவாழ்ந்த காலம் 19 ஆண்டுகள் தான். அந்த குறுகிய காலத்தில் அவர்களின் தணியாத காதலின் சின்னங்களாக பிறந்த குழந்தைகள் மொத்தம் 14 ஆகும். அவர்களில் ஆண்கள் 8. பெண்கள் 6.

மும்தாஜ் 1680 இல் தன் காதல் கணவரை விட்டு வானுலகு சென்றார். இறப்பதற்கு முன்னர், தான் இறந்த பின்னரும் தன் காதல் நாயகன் மாமன்னர் ஷாஜஹான் வேறெந்தப் பெண்ணையும் மணக்கவோ மனத்தாலே நினைக்கவோ கூடாது. தன்நினைவைப் போற்றும் வகையில் ஒரு சிறந்த நினைவுச் சின்னத்தை நிறுவவேண்டும் என்று அவரிடம் சத்தியம் வாங்கிக் கொண்டு அவர் மடியிலேயே கண்களை மூடினார் அந்தக் காவிய நாயகி. இறந்தபோது அவருக்கு வயது39 தான்.

1630இல் மும்தாஜ் மரணமடைந்ததும் அவர் கேட்டுக் கொண்டபடியே மிகச்சிறந்த நினைவுச் சின்னத்தை நிர்மாணிப்பதில் தீவிரமாய் இறங்கினார் ஷாஜகான். இந்த நினைவுச் சின்னம் தன் காதலின் மேன்மையையும் ஆழத்தையும் பிரதிபலிக்கும் காதல் சின்னமாகவும் நினைவு மாளிகையாகவும் விளங்க வேண்டும் என்று விரும்பினார் அவர்.

ஆக்ரா நகரத்தில் யமுனை நதிக்கரையில் தாஜ்மஹால் ஓங்கி உயர்ந்து நிற்கவேண்டும் என விரும்பிய ஷாஜகான் 1633ஆம் ஆண்டு அதற்கு அத்திவாரமிட்டார். அதைக் கட்டி எழுப்ப 22 ஆண்டு காலம் சென்றது.

1566 இல் தனது 74 ஆவது வயதில் நோய்வாய்ப்பட்டு

ஷாஜகான் இறந்த பொது தாஜ்மஹாலின் அடிப்பாகத்தில் உள்ள மும்தாஜின் சமாதிக்கு அருகிலேயே அவரின் உடலும் அடக்கம் செய்யப்பட்டு சமாதி எழுப்பப்பட்டது.

டில்லிக்கு தென்கிழக்கே 200 கிலோமீற்றர் தொலைவில் உலக அதிசயங்களில் ஒன்றாக தாஜ்மஹால் இப்போது கம்பீரமாக நிமிர்ந்து நிற்கிறது. இதைக்காண உலகம் முழுவதிலுமிருத்தும் ஏராளமான மக்கள் நாள்தோறும் வந்து செல்கின்றனர்.

இந்திய மக்களும் அதை திரும்பத் திரும்ப பார்த்துக் கொண்டு இருக்கின்றனர்.

## கவர்ச்சியா கவர்ச்சி



''காதல் என்பது வயதுக்கோளாறு . நான் கல்லூரியில் படிக்கும் போது சக மாணவர்கள் எனக்கு காதல் கடிதம் தருவார்கள். வாங்கிப்படித்துவிட்டு அவர்களுக்கு அறிவுரை கூறி அனுப்பிவிடுவேன் . நீங்கள் உங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த காதலியுங்கள் தப்பில்லை.

இப்போது என்னைப் பொறுத்தவரை கட்டி அணைப்பதும் காதல் செய்வதும் தினசரி வாழ்க்கையாகிவிட்டது. நான் ஒரு நடிகைதானே. படத்திற்கு தேவையாக இருப்பதால் கட்டிப்பிடிக்கவும் காதல்செய்யவும் நிர்பந்திக்கப்படுகின்றேன்.

கவர்ச்சி ஆபாசம் என்பவை நாம் உடுத்தும் துணிமணியில் தான் இருக்கின்றன. நான் கவர்ச்சி காட்ட மறுப்பது இல்லை. கவர்ச்சி காட்டச் சென்னால் எத்தனை கிலோ வேண்டும் என்று கேட்டுவிடுகிறேன்.''

கவர்ச்சிபற்றி இப்படிச் சொல்கிறார் நடிகை அசின்.

## கலக்குகிறார் நமிதா



நடிகை நமீதா தான் காட்டும் கவர்ச்சி பற்றி என்ன சொல்கிறார்.

''முன்பைவிட நான் இப்போது குண்டாகிப் போனேன் என்பது உண்மை தான் . உடல் மெலிய நான் இப்போது உடற்பயிற்சி செய்கிறேன் . நடிகையின் சொத்தே அவள் உடம்பு தானே!

ரசிகர்களுக்கு முழுக்கக் காட்டி நடிக்கவும் நான் தயாராக இருக்கின்றேன். தமிழ் நாட்டை கவர்ச்சியால் ஒரு கலக்கு கலக்காமல் போகமாட்டேன்'' என்று சொல்ல.

கெலியூட்நாடிகைமெக்னா நாயுடு நமீதாவுடன் போட்டி போட்டுக் கொண்டு எவ்வளவு வேணுனாலும் துணியை குறைச்சுக் கிறேன். உன்னால் படம் எடுக்க முடியுமா? அட அவ்வளவு ஏன்யா? ஒட்டு துணி உடம்பில இருக்காது .

கவலையே படலை. ஆனா சென்சார் காரன் விடுவான, சொல்லு நடிக்கிறேன் - என வெள்ளை அறிக்கை விட்டிருக்கிறார்.

## ஜப்பானில் கொண்டாட்டம்

ஜப்பானிய சக்கரவர்த்தியான அகிஹிட்டோ(Akihito) வின் இரண்டாவது மகனின் மனைவி கர்ப்பமுற்றிருக்கிறார் என்ற செய்தி யப்பானிய மக்களை மகிழ்ச்சிக்கடலில் மூழ்கடித்துள்ளது.

அரசபரம்பரையில் ஆண்வாரிசுகள் மட்டுமே முடி சூடலாம் என்ற பாரம்பரியம் நீடிக்குமா என்ற கேள்வி ஜப்பானிய மக்களின் மனதில் எழுந்துள்ள இந்த நேரத்தில் முடிக்குரிய இளவரசரான அகிஹிட்டோ(Akihito) வின் மனைவியான கிக்கோ தாய்மை அடைந்துள்ளமை மக்கள் மத்தியில் பெரும் ஆர்வத்தை தூண்டி உள்ளது.

2600 ஆண்டுகள் பழைமைவாய்ந்த பரம்பரையைச் சேர்ந்த தற்போதைய அரசகுடும்பத்தில் 1965 இன் பின்னர் ஆண்குழந்தை எதுவும் பிறக்காமல் இருந்தமை பெரும் ஏமாற்றம் அளிக்கும் ஒரு விடயமாகக் காணப்பட்டது.

அரசதம்பதியினருக்கு இப்போது பிறக்கப்போகும் குழந்தை ஆண்குழந்தையாகவே இருக்க வேண்டும் என ஜப்பானிய மக்கள் எதிர்பார்ப்பது இயற்கையே என்று பத்திரிகைகள் கூறுகின்றன. பிறக்கப் போவது ஆண்குழந்தையாக இருப்பின் தற்போது நடைமுறையில் உள்ள முடிசூடும் முறையே தொடரும் என்றும் அவை கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ODYSSEY

# ரோயல் அஸ்கட் ஜின் வகைகள்

தனித்துவமான சுவையும் இதமூட்டும் மென்மையும் நிறைந்து வெற்றிக் களிப்பைப் பெருக்க வல்ல ஒப்பற்ற ஜின்... ரோயல் அஸ்கட் இறக்குமதியாகும் தரமுயர்ந்த மதுசாரங்கள் கொண்டு பக்குவமாகக் கலவை செய்யப்படும் ரோயல் அஸ்கட் லெமன் ஜின், லண்டன் ட்ரை ஜின், ஒரேஞ்ச் ஜின் ஆகிய மூன்று வகைகளும் உங்களுக்குச் சர்வதேச சுவையுடன் உன்னதமான அனுபவத்தைத் தரும். இலங்கையரின் முதற் தெரிவான ரோயல் அஸ்கட்டை நாடுங்கள்...
வெற்றிப் பாதையில் செல்லுங்கள்!

CONSUMER CHOICE IN SRI LANKA
No.1 GIN
ROYAL ASCOT

ROYAL ASCOT
வெற்றிப் பாய்ச்சலுக்கு உத்வேகமூட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ICTA முன்னெடுக்கும் e - இலங்கை

## அதன் நோக்கங்கள் நிறைவேறும் நாள் எப்போது?

ICTA ideas actioned

**இலங்கை அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) e - இலங்கை என்ற செயற் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்கிறது. இது தொடர்பாக அவர்களின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களான www.icta.lk, www.esrilanka.lk ஆகியவற்றினை அலசி ஆராய்ந்து பல கேள்விகளுக்கு பதில் தரப்படுகிறது.**



**e - இலங்கை என்றால் என்ன?**

e - இலங்கை என்பது தகவல், தொடர்பாடல் தொழில நுட்பங்களைப் பயன்படுத்தி இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும், வறுமையைக் குறைக்கவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றவும் செயற்படுத்தப்படும் ஒரு முன்னேற்பாடாகும்.

இந்தத் தூரநோக்கினை 5 செயல் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் அடையலாம். அவையாவன, செயல்பாட்டுத்திறனை கட்டமைப்பது, தகவல் உட்கட்டமைப்பை உருவாக்குவது, சூழல் அபிவிருத்தி செய்வது தகவல் தொடர்பாடல் மனித வளத்தை அபிவிருத்தி செய்வது, அரசாங்கத்தினால் மக்களுக்கு வழங்கும் சேவைகளை நவீன மயப்படுத்துவது, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஒரு விசைக் கருவியாக உபயோகித்து அரசாங்க தனியார் துறைகளின் பங்களிப்புடன் இலங்கையில் பொருளாதார சமூக அபிவிருத்தியினை ஏற்படுத்துவது என்பனவாகும்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICTA) என்ற கற்பாறையிலேயே நாம் சம வாய்ப்பும் அறிவுப்பங்கீடும் உள்ள ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என அரசாங்கமும் தனியார் துறையினரும் மற்றும் முயற்சியாளர்களும் நம்புகின்றனர். மேலும் ஏனைய நாடுகளுடனான ஒப்பீட்டு நலன்களை தீர்மானிக்கும் ஒரு திறவுகோலாகவும் நாம் நம்புகிறோம்.

இத்தகையதொரு நம்பிக்கைதான் பலரும் பங்குபற்றிச் செயலாற்றும் தூரநோக்குடைய e - இலங்கையை உருவாக்க வேண்டும் என்ற முடிவாகும். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) ஊடாக இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும் வறுமையைக் குறைக்கவும் அதன் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. e - இலங்கை 5 கிளைகளையுடைய செயற்திட்டமாக உருவெடுத்து தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தேசியப் பாதையை உருவாக்குகிறது.

**ICTA மற்றும் e - இலங்கை செயற்திட்டங்கள் என்ன செய்யப்போகின்றன?**

♦ இந்த நாட்டில் உள்ள நகரங்களையும் கிராமங்களையும் உலகோடு தொடர்புபடுத்தக்கூடிய உட்கட்டமைப்பினைக் மிகத் தீவிரமாக உருவாக்குதல்.

♦ e-அரசாங்கம் e-வணிகம் என்பவற்றிற்குரிய சட்டச் சீர்திருத்தங்களை அமுலாக்குவதற்குப் பொருத்தமான சமூக சூழலை உருவாக்குதல்.

♦ தேசிய அபிவிருத்திக்கு உதவக்கூடிய பல்துறையைச் சேர்ந்த மனிதவளங்களை விருத்திசெய்தல்

♦ மக்களுக்குச் சிறப்பான சேவையினை வழங்கும் பொருட்டு பொதுச்சேவைத்துறையினை மாற்றியமைத்து e அரசினைக்கட்டி எழுப்புதல்.

♦ நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி இலங்கையின் தகவல் தொடர்பு சாதன தொழில் நுட்பத் துறையினை சர்தேச சந்தையின்மூலம் உன்னதமான புகழ்வாய்ந்த உயர்நிலையுடைய ஒரு இடமாக உயர்வடையச் செய்தல்.

♦ வறுமைக் குறைப்பினையும் சமூக அபிவிருத்தியையும் குறிக்கோளாக் கொண்டு டிஜிரல் முறையை பிரயோகிப்பதற்குரிய தொடர்பினை ஏற்படுத்தல்.

**ICTA மற்றும் e - இலங்கை ஆகியவற்றின் நிகழ்ச்சித் திட்டங்கள் என்ன?**

- அரசினை மீள்நெறிப்படுத்தல்
- தகவல் உட்கட்டமைப்பு
- உலக அறிவு நிலையங்கள்
- ICT மனிதவள அபிவிருத்தி
- ICT முதலீடும் தனியார்துறை அபிவிருத்தியும்
- ஈ -சமூகம்
- தொழில் நுட்பக் கட்டமைப்பும் பாதுகாப்புத் தரமும்

***(இவை தொடர்பான முழுமையான விவரங்களுக்காக அடுத்தவாரம் வரை காத்திருங்கள்.)***

அடுத்தவாரம் முதல்...
√ வாரம் ஒரு கேள்விக்கு வாத்தியார் பதில்
√ இந்த வார இணையத்தளம்
√ உதவிசெய்யும் மென்பொருள்
√ தமிழால் முடியுமா?,
√ GIT உதவிக் குறிப்புகள்
√ மேலும் பல பல....

இந்தப் பகுதி தொடர்பான உங்களது கருத்துக்கள் மற்றும் ஆக்கங்கள், கேள்விகள் என்பவற்றை அனுப்பவேண்டிய முகவரி:
**கணினி உலா**
**சுடர் ஒளி**
**85, ஜெயந்தமலல்லிமாராச்சி மாவத்தை,**
**கொழும்பு 14.**

**கணினி உலா**
**அனுராஜ்**

## இந்த வார அறிமுகம்

### X-View உலகின் முதல் இரு பக்கத்திரை மொனிட்டர்....



உலகின் முதலாவது இருபக்கத் திரைகள் கொண்ட கம்ப்யூட்டர் மொனிட்டர் இந்தியாவின், சென்னையை சார்ந்த ஆய்வாளர்களால் வடிவமைக்கப்பட்டு காப்புரிமை பெறப்பட்டுள்ளது. முன்னும் பின்னுமாக இரட்டை திரை கொண்ட இந்த மொனிட்டர், கம்ப்யூட்டர் நோட்புக் அல்லது டெஸ்க்டாப் திரையின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர் அமர்ந்து இணைய வலை உள்ளிட்ட ஒரே விஷயத்தை பகிர்ந்து கொள்வதையும், பார்வையிடுவதையும் டிஜிட்டல் நுட்ப ரீதியாகத் தொடர்பு கொள்வதையும் சாத்தியமாக்குகிறது. இதற்கு அவர்கள் சூட்டியுள்ள பெயர்தான் X-View.

சென்னையில் கடந்த ஆகஸ்ட் 31ஆம் திகதியன்று செய்தியாளர்கள் முன்னிலையில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த இரட்டை திரை மொனிட்டரின் முன்னோடி வடிவம், கம்ப்யூட்டர்களின் செயல்பாடு மற்றும் பயன்பாட்டில் மிகப்பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதாகும்.

தனி உரிமை உள்ள உள்ளடக்கங்கள் அல்லது உள்வாங்கப்படும் பிளக்-இன் விஷயங்களில் எளிமையான மென்பொருள் அம்சங்களை இணைப்பதன் மூலம் மிக விரிவான செயல்பாடுகளுக்கும் பயன்பாடுகளுக்கும் வரம்பில்லா வாய்ப்புகளுக்கு X-View வழி திறக்கிறது. இதன் மூலம் திரையில் காட்டும் விஷயத்தின் ஒரு பகுதியை மறைக்கவும், தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல்களை காட்டவும், எந்தவொரு பக்கத்திலும் தொடர்பு கருவிகள் (Interactive Tools) மற்றும் இதர தொடர்பு அம்சங்களை ஏற்படுத்திக் கொள்ளவும் அவற்றை இயக்கவும் வாய்ப்பு கிடைக்கிறது. மேலும் இதன் கூடுதல் பயன்பாட்டு அம்சங்கள் காரணமாக ஒரு பக்கத் திரையை அணைத்துவிட்டு மற்றொரு பக்கத் திரையை மட்டும் இயக்க முடியும்.

X-View பயன்பாடுகளைப் பொறுத்த வரையில் வீடுகளில் குடும்ப அங்கத்தினர்கள் இணைய தள தேடலில் நேர [illegible] ஈடுபடுவது, தகவல்களை பரிமாறிக் கொள்வது முதல் பெற்றோர் - குழந்தை இடையிலான க[illegible]ர் தொடர்பு வரையில் புதிய வாய்ப்புகளையும் அனுபவங்களையும் வழங்கக் கூடியதாகும். தொழில் நிறுவனங்களில் உள் மற்றும் வெளித் தொடர்புகளுக்கும் பயிற்சி அளிப்பதற்கும் கல்வி மற்றும் சிறப்புக் கல்விக்கும், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குப் பகிர்வுகளுக்கும் புதிய வசதிகளை ஏற்படுத்தி தரக் கூடியதாகும்.

நேருக்கு நேர் டிஜிட்டல் தொடர்பு மற்றும் தகவல் பரிமாற்றம் தேவைப்படுகிற இடங்களில் அந்தந்த தேவைகளுக்கு ஏற்ப கம்ப்யூட்டர்களை தயாரிக்கவும் X-View வழி வகுக்கிறது. உதாரணமாக, விற்பனை மையங்களில் விலைப்பட்டியல் எந்திரங்கள் தேவைப்படுகிற சில்லறை வர்த்தகக் கூடங்கள் போன்ற இடங்களில், இருதரப்பு தகவல் தொடர்பு வசதிகளுடனோ அல்லது அந்த வசதி இல்லாமலோ X-View பெரிதும் பயன்படும்.

## Computer Tips

### மவுஸை சுத்தப்படுத்துவது எப்படி?

சிலர் தங்கள் கம்ப்யூட்டர் மவுஸை அடிக்கடி சுத்தப்படுத்தாமல் கடையில் மவுஸ் மேலும் அதை விற்ற கடைக்காரர் மேலும் பழியை சுமத்துவார்கள். என்னதான் தரமான மவுஸாக இருந்தாலும் இந்தப் பிரச்சினை தீராது. இதற்காக மவுஸை சுத்தம் செய்வதற்கு நிபுணர்களைக் கூப்பிடுவதற்கு பதிலாக நீங்களே கொஞ்சம் கவனமாக அதை சுத்தப்படுத்திவிடலாம்.

கீழ்க்கண்ட முறைப்படி :

நீங்கள் எந்த மவுஸ் வைத்திருந்தாலும் அதனுடன் வந்த **"owner's manual"**ஐப் படித்துப் பாருங்கள். அதில் சில வழிமுறைகள் சொல்லப்பட்டிருக்கும்.

கம்ப்யூட்டரை ஷட் டவுன் செய்யுங்கள்.

மவுஸை CPU விலிருந்து கழற்றி விடுங்கள்

மவுஸைக் கவிழ்த்துக் கொள்ளுங்கள்.

மவுஸ் பந்தை மூடியிருக்கும் பிளாஸ்டிக் வளையத்தை, அதன் மேல் இருக்கும் அம்புக்குறி காட்டும் திசையில் திருப்புங்கள். அதில் அம்புக்குறிகள் எதுவும் இல்லை என்றால் போத்தல் மூடியைத் திறப்பது போல் திருப்புங்கள்.

வளயத்தையும் பந்தையும் கழற்றுங்கள்.

பந்தை சூடான நீரில் கழுவுங்கள்.

பஞ்சை அல்லது ஒரு மென்மையான துணித் துண்டை ஐசோப்ரோப்பைல் ஆல்கஹாலில் தோய்த்து அதனால் பந்தில் இருக்கும் தூசை நீக்குங்கள். (இந்த ஆல்கஹாலை அல்லது அதற்கு பதிலீடாக பாவிக்கக் கூடிய ஒன்றை கடையில் கேட்டு வாங்க வேண்டும்.)

**மவுஸின் மூன்று ரோலர்களை ஒரு பேப்பர் கிளிப்பால் கவனமாக சுரண்டி அதில் உள்ள அழுக்கை நீக்குங்கள். இதை மென்மையாகச் செய்யுங்கள்!**

ரோலர்களை ஆல்கஹாலில் தோய்த்த பஞ்சால் அல்லது துணியால் துடையுங்கள்.

மவுஸ் பாகங்கள் உலர்ந்த பிறகு அவற்றை மீண்டும் முறையாக பொருத்திக்கொள்ளுங்கள்.

மவுஸை உங்கள் கம்ப்யூட்டருடன் இணையுங்கள்.

இப்பொழுது உங்கள் மவுஸ் முன்பை விட வேகமாக நகரும் - உங்கள் சொற்படி கேட்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்தேசிய எழுச்சிக்கு வித்திட்ட சத்தியாக்கிரகம்!

ஒரு தினம் மாலை யாழ். 2 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள கட்சிக் காரியாலயத்தில் 75 அல்லது 100 தொண்டர்கள் வழமைபோல் குழுமியிருந்த சமயம் செல்வநாயகம் என்னை அழைத்து, நான் என்னவிதமான போராட்டத்தை மனதில் வைத்திருக்கிறேன் என்பதை விளக்கும்படி கேட்டுக்கொண்டார்.

அரசாங்கம் அப்பொழுது மேற்கொண்டிருந்த நடவடிக்கைகளால் அவர் கவலையடைந்திருந்தார் என்பது எனக்குத் தெரியும்.

“அரசாங்கத்திணைக்களங்களும், காரியாலயங்களும் இயங்காமலிருக்கும்படி செய்ய வேண்டும், அதன் மூலம், வடக்கு-கிழக்கில் அரச இயந்திரத்தை ஸ்தம்பிதம் அடையச் செய்து விடலாம், அதற்கு நூற்றுக்கணக்கான தொண்டர்கள் தேவைப்படுவார்கள். அவர்களுக்கு சாத்வீக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பயிற்சியளிக்கப்படும். இரண்டு மாகாணங்களிலும் உள்ள அரசாங்க காரியாலயங்களின் முன்பாக இவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியபடி மறியல் செய்வார்கள். காரியாலயங்களுக்குள் அலுவலர்களும், பொதுமக்களும் செல்வதை இவர்கள் அமைதியான முறையில் தடை செய்வார்கள். காரியாலயங்கள் இயங்கும் நேரம் வரை மறியல் தொடரும். அவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டால் அவர்களுக்குப் பதிலாக இன்னொரு அணி செயலில் இறங்கும். அவ்வாறு மாகாணங்களில் உள்ள சிறைகளை எல்லாம் நிரப்புவோம். பொலிஸ் தடியடிப்பிரயோகம் செய்தால் தொண்டர்கள் நிலத்தில் படுத்துவிடுவார்கள். அடிகளைத் தாங்கிக் கொள்வார்கள். காயமடைந்தவர்களுக்குப் பதிலாக வேறொரு அணி களத்தில் இறங்கும். நாடாளுமன்ற உறுப்பினர்களும், தலைவர்களும் இந்தப் போராட்டத்துக்கு மாறி மாறி தலைமை வகிப்பார்கள். எல்லோரும் ஒரே சமயத்தில் கைது செய்யப்படாமலிருக்க இவ்வாறு செய்யப்படும்.

மாவட்டங்களின் அரச நிர்வாக உயிர் நாடிகளாக செயல்படுபவை கச்சேரிகள் தான். எனவே, எமது போராட்டங்களை முதலில் கச்சேரிகளில் ஆரம்பிப்போம். பின்னர் ஏனைய அலுவலகங்களுக்கு விஸ்தரிப்போம். அரச நடவடிக்கைளைப் பொறுத்து எமது திட்டங்களை மாற்றி அமைப்போம்.”





இவ்வாறு நான் கூறினேன். மேலும் சிங்களத்தை தமிழ் பேசும் மக்களின் தொண்டைக்குழிக்குள் வலுக்கட்டாயமாகத் திணிக்க முடியாது என்பதை சிங்கள அரசாங்கத்துக்கும் சிங்கள மக்களுக்கும் நாம் தெரியப்படுத்துவோம். வடக்கு-கிழக்கு மாகாணங்களை இப்பகுதி மக்களின் மன விருப்பமின்றி கொழும்பிலுள்ள ஆட்சியாளர்களால் ஆள முடியாது என்பதை எடுத்துக் காட்டுவோம். சிங்கள ஆக்கிரமிப்பை இந்த மாகாணங்களின் மக்கள் ஒருபோதும் மனதார ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதையும் நிலைநாட்டுவோம்” என்று கூறினேன்.

செல்வநாயகம் மனம் மாறிவிட்டார். அவரது ஆசீர்வாதம் கிடைத்தவுடன் செயற்குழு கூடி தீர்மானங்களை நிறைவேற்றி செயல்திட்டங்களை வகுக்க அதிக நேரம் பிடிக்கவில்லை.

திருகோணமலை நடைபவனி போலவே இப்பொழுதும் இந்த சத்தியாக்கிரகத்தை பொறுப்பேற்று வழி நடத்தும்படி நான் கேட்டுக் கொள்ளப்பட்டேன்.

ஆலோசனைகள் வழங்கவும் உதவிகள் புரியவுமென உயர்மட்டத் தலைவர்களைக் கொண்ட பணிக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.



1960 ஆம் ஆண்டு முடிவடையும் தறுவாயை அண்மித்துக்கொண்டிருந்த வேளையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்துடன் அமைதி முறையில் மோதல் ஒன்றை நடத்துவதற்குத் கட்சி தயாராகியிருந்தது.

சுதந்திரத்திற்குப் பிறகு பதவிக்கு வந்த எல்லா அரசுகளையும் போலவே இந்த

## தமிழரசுக் கட்சியினர் அணி அணியாகச் சென்று யாழ். கச்சேரி வாசலின் முன்பாக மறியல்

அரசாங்கமும் தனது முதல் கடமை சிங்கள மக்களின் நலன்களைப் பேணுவது தான், என்பதை துல்லியமாக வெளிப்படுத்தி நின்றது. அதனால், தமிழர்கள் தமது உரிமைகளை நிலைநாட்ட நீண்ட காலப்போராட்டம் ஒன்றுக்கு ஆயத்தமாவது தவிர்க்க முடியாமல் போய்விட்டது.

இரண்டு தமிழ் மாகாணங்களும் போராட்டம் ஒன்றுக்கு வரிந்து கட்டி ஆயத்தமாகியிருந்த வேளையில் 1961 ஆம் ஆண்டு மலர்ந்து.

கச்சேரிகள் அமைந்திருந்த யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய ஐந்து நகரங்களிலும் தமிழரசுக் கட்சி தனது கிளை அலுவலகங்கள்மூலம் ஏககாலத்தில் அதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

சத்தியாக்கிரகம் தொடர்பான விவரங்கள் அடங்கிய பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்டு எல்லா அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தன. மிக மோசமாக ஆத்திரமூட்டப்பட்ட, அல்லது அப்படியான சூழ்நிலைகளில் சத்தியாக்கிரகி ஒவ்வொருவரும் மிகக்கண்டிப்புடன் சாத்வீகத்தை(அகிம்சையை) கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தனர். கட்சியின் அழைப்பை ஏற்று கட்சிக் காரியாலயங்களில் ஆயிரக்கணக்கில் ஆண், பெண், இளையோர், முதியோர் என்று கிளைக் காரியாலயங்களை முற்றுகையிடத் தொடங்கினார்கள். அவர்கள் அனைவருமே பதிவு செய்யப்பட்டு, விவரங்கள் ஆவணப்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் கட்சிக் காரியாலயத்தில் பிரதம எழுத்தாளராகவிருந்தார் இலங்கை பொலிஸ்படையிலிருந்து விலகியிருந்த பரமநாதன் என்பவர். அவர் தொண்டர்களுக்கு அணிவகுப்புகள் நடத்தியும் பயிற்சிகள் கொடுத்தும் ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுனும் நடந்துகொள்ள தொண்டர்களை ஆயத்தப்படுத்தினார்.

ஒவ்வொரு பகுதிக்கிளை நிலையமும்,

உள்ளூர் நிலைமைகளுக்கும், தங்கள் வசதிகளுக்கும் ஏற்றவகையில் தங்கள் தங்கள் போராட்டங்களை ஆரம்பிப்பதென ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அதன்படியே 1961 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் திட்டமிட்டபடி பயபக்தியுடன் உணர்வு பூர்வமான நிகழ்வுகளோடு சத்தியாக்கிரகம் முன்னெடுக்கப் பட்டது. அரசாங்கத்தின் அடித்தளத்தை ஆட்டங்காணச் செய்வதே இதன் நோக்கமாகவிருந் தது. மூன்று மாதகாலம் கொழும்பு அரசாங்கத்தின் செயற்பாடுகள் எதுவும் இரண்டு மாகாணங்களிலும் செல்லுபடியாக வில்லை.

முதல் நாள், எதுவித சம்பவமும் இல்லாமல் நகர்ந்தது. அன்று காலையில் கச்சேரி அலுவலகங்கள் திறக்கப்படுவதற்கு முன்னதாக, யாழ். 2ஆம் குறுக்குத் தெருவிலிருந்த கட்சிக் காரியாலயத்திலிருந்து சுமார் 100 பேர் கொண்ட தொண்டர் அணி ஒன்று பவனியாக நடந்து சுண்டுக்குளியிலிருந்த கச்சேரி கட்டடத்தை அடைந்து அதன் வாயில்களை அடைத்துக்கொண்டு

மறியலில் ஈடுபட்டது.

அக்காலத்தில் மாவட்ட நிர்வாகத்தின் காரியாலயங்கள் இப்பொழுது (ஓல்ட்பார்க்)பழைய பூங்கா என்றழைக் கப்படும் பகுதியில் அமைந்திருந்த பழைய கச்சேரிக் கட்டடத்தில்



அமைந்திருந்தன. பூங்காவின் மத்தியில் அரசாங்க அதிபரின் வாசஸ்தலம் இருந்தது. காரியாலயங்களுக்கான வாயில்கள் யாழ்ப்பாணம்-கண்டி பிரதான வீதியில் இருந்தன. அரச அதிபர் வாசஸ்தலத்துக்கான வாயில் அதே பகுதியில் தனியாக அமைந்திருந்தது. காரியாலயங்களுக்கும் கண்டி வீதிக்குமிடையில் பெரும்பாலும் காலியான நிலப்பகுதி ஒன்று இருந்தது. அதன் நடுவில் ஒரு பெரிய நிழல் தரும் மரம் நின்றிருந்தது. இந்த வெற்று நிலப்பரப்பில்தான் பிற்காலத்தில் இரட்டைமாடி செயலகக் கட்டடம் எழுப்பப்பட்டது.

கச்சேரியில் பல்வேறு காரியாலயங்களிலும் பணிபுரியும் ஊழியர்கள் காலையில் வேலைக்குவந்தபொழுது கச்சேரி வாயில்களில் மறியல் நடைபெறுவதைக் கண்டார்கள். ஒரு சிலர் சத்தியாக்கிரகிகளுக்கிடையில் தென்பட்ட இடைவெளிகள் மூலம் உள்ளே நுழைந்து கொண்டனர். ஏனையவர்கள் வீதியில் திரண்டு நின்றிருந்தனர். சுமார் ஒரு மணிநேரம் கழித்து அரச அதிபரின் வாசஸ்தல வாயில் திறக்கப்பட்டது.

ஊழியர்களை அதன் வழியாக உள்ளே வரும்படி அரசாங்க அதிபர் அறிவுறுத்தல் அனுப்பியிருந்தார். கச்சேரிக்கு அலுவல்களுக்காக வந்திருந்த பொதுமக்களுடன் சத்தியாக்கிரகிகள் கதைத்து அவர்களைத் திரும்பிச் செல்லும்படி செய்துவிட்டார்கள். அன்றையதினம் மாலையில் ஊழியர்கள் அனைவரும் வாயில் வழியாகவே திரும்பிச் சென்றார்கள். சத்தியாகிரகம் மாலையில் நிறைவுற்றது.

இரண்டாம் நாள் போராட்டத்தின்போது அரசாங்க அதிபரின் வாசஸ்தல வாயிலிலும் மறியல் செய்யும்படி சத்தியாக்கிரகிகள் அறிவுறுத்தப்பட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் வருவதற்கு முன்னமே பொலிஸ் படையினர்வந்து கச்சேரி வாயில்களை அடைத்துக் கொண்டு விட்டனர். வாயில்களை சத்தியாக்கிரகிகள் நெருங்கியபோது பொலிஸாரினால் முரட்டுத்தனமாகத் தள்ளிவிடப்பட்டனர்.

இந்த விதமாக கச்சேரிக்குள்

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம்வரை இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது ‘தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்’ (The Fall and Rise of the Tamil Nation)



தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி. நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந்த நூலின் தொகுப்பு , தொடர் அரசியல் கட்டுரையாக சுடர்ஒளி வாரமலரில் வெளிவருகிறது. படியுங்கள்.

பலவந்தமாக தாங்கள் பணிக்காக கொண்டு செல்லப்படுவதை அரசாங்க ஊழியர்கள் கொஞ்சமும் விரும்பவில்லை என்பது அவர்களின் முகங்களைப் பார்க்கத் தெரிந்தது. விசையால் இயக்கப்படும் பொம்மைகள் போன்று அவர்கள் உள்ளே நடந்து சென்றார்கள்.

அரசாங்க அதிபர் எம்.ஸ்ரீகாந்தாவும் ஒருதமிழர்தான், அவர்தான் இவ்வாறு பொலிஸாரை அழைத்து

### தமிழில் ‘பேனா’

ஏற்பாடுகளையும் செய்திருந்தார். அவரது சொந்த உணர்வுகள்- அப்படி ஏதும் இருந்திருந்தால்- என்ன விதமாக இருந்தன என்பது எமக்குத் தெரியாது. ஆனால், அவர் அந்த பழைய பிரிட்டிஷ் சிவில் சேவை பாரம்பரியத்தைச் சேர்ந்தவர். பதவியில் எந்த அரசாங்கம் இருந்தாலும் அரசாங்க அதிபராக இருப்பவர் தாமே அதற்குப் பொறுப்பானவர் என்ற வகையில் அடையாளப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற கொள்கையை அவர் கண்டிப்பாகப் பின்பற்றியவர்.

சத்தியாக்கிரகிகள் கச்சேரி வாசலின் மதில் ஓரத்தில் அமைதியாக அமர்ந்து விட்டார்கள். அவ்வாறே முழு நாளும் தேசியப் பாடல்களைப் பாடியபடி அமர்ந்திருந்தார்கள்.

அந்த இரண்டு நாட்களிலும் கச்சேரி வேலைகள் எதுவும் நடைபெற்றிருக்காது என்பதை கூறத்தேவையில்லை. ஆனால், அது சத்தியாக் கிரகத்தின் நோக்கமாக இருக்கவில்லை. அரசாங்கம் தனது அலுவலகங்களை முற்று முழுதாக மூடும்படி செய்யவேண்டும். எனவே, நடைமுறையில் மாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. அதனால், அன்றிரவை கட்சித் தலைமையகத்திலேயே கழிக்கும்படி சத்தியாக்கிரகிகளை நான் கேட்டுக்கொண்டேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ...நெஞ்சே

பாரதி ராஜாவின் 'கண்களால் கைது செய்' பட நாயகன் வசீகரன், ஹீரோ ஹொண்டா நாளைய நட்சத்திரப் போட்டியில் வெற்றி பெற்ற ஸ்ரீராஜ், மச்சி புகழ் சுபான்சா நடிக்கப்போகிற படம் ஓ நெஞ்சே.

வானவில் படத்திற்கு வசனம் எழுதிப் புகழ் பெற்ற என்.ரகு இந்தப் படத்திற்கும் வசனம் எழுதுவதோடு இணை தயாரிப்பாளராகவும் இருக்கிறார். படத்தின் இயக்குனர் ஏ.சண்முகம். சண்முகம் ஒரு ஆர்ட் டைரக்டர் . இவரின் அப்பா அங்கமுத்து அந்தக்கால புகழ்பெற்ற ஆர்ட் டைரக்டர். எம்.ஜி.ஆர். படங்களில் ஆஸ்தான ஆர்ட் டைரக்டர் கூட.



சமீபத்தில் பாகிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்தை மையமாக வைத்து 'ஓ நெஞ்சே' படம் எடுக்கப்பட்டு வருகிறது என்கிற செய்தி நம் காதில் விழ... டைரக்டர் சண்முகத்தை சந்தித்தோம்...

வரும் பெப்ரவரி 11ஆம் திகதிதான் படத்தின் பூஜை. அதற்குள் கதையைப்பற்றி உங்கள் காதுக்கு வந்துவிட்டதா? என்றபடியே வரவேற்று பேசினார்.

''80 படங்களில் ஆர்ட் டைரக்டராக இருந்தேன். ஆர்ட் டைரக்டர் யூனியனிலும் பொறுப்பாக இருக்கிறேன். டைரக்டர் கேயாரிடம் அசிஸ்டென்டாக தொழில் கற்றுக்கொண்டேன். ஏற்கனவே சில டெலிபிலிம் மற்றும் குறும்படங்களை இயக்கியிருக்கிறேன். ஒரு நல்ல கதை அமையும் போது ஒரு படத்தை இயக்க வேண்டும் என்ற முடிவில் இருந்தேன். அந்தக் கதை கிடைத்ததால் படத்தை தொடங்கிவிட்டோம்.

காதலும் ஆக்சனும் கலந்த கதைதான் இது. மருத்துவக் கல்லூரி மாணவர்கள் நாயகனும் - நாயகியும். நாயகி மீதோ, வில்லனுக்கு ஆசை. இந்த முக்கோண காதலுக்கு மத்தியில் பாகிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ சேவை செய்வதற்காக போகிறார்கள். அங்கே முகாம் அமைத்து மீட்பு பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்க... அதே பூகம்பத்தில் பாதிக்கப்பட்ட பாகிஸ்தான் தீவிரவாதிகள் தங்கள் சகாக்களுக்கு மருத்துவ சிகிச்சை செய்வதற்காக ஹீரோவை கடத்திக் கொண்டு போகிறார்கள். ஹீரோயினுக்கு வில்லனின் டார்ச்சர் தொடங்குகிறது. அதிலிருந்து மீண்டு கதாநாயகன் எப்படி தன் காதலியை கைபிடித்தான் என்பது தான் கதை'' என்றார் சண்முகம்.

ஆக்ஷன் படம் என்கிறீர்கள்."ஹீரோ வசீகரன் எப்படி...?

இந்தக் கதைக்கு வசீகரன் தான் பொருத்தம். அதனால் தான் அவரை தேர்வு செய்தேன். அவரை தேர்வு செய்வதற்கான காரணத்தை நீங்கள் படம் பார்க்கும்போது தெரிந்து கொள்வீர்கள். வில்லனாக அறிமுகம் ஸ்ரீராஜ், ஜூனியர் பிரகாஷ்ராஜாக ஜொலிப்பார். இது ஒரு திட்டமிட்ட பட்ஜெட் படம். ....... இருக்கின்ற கதாநாயகிகளை போட்டா குறிப்பிட்ட காலத்துக்குள் முடிப்பதில் சிரமம் வரும். அதனால் தான் சுபான்சாவை தேர்வு செய்தோம். அவர் பிசியாக இல்லாவிட்டாலும் கூட அவர் ஒரு திறமையான நடிகைதான் என்பதை நீங்களே படம் பார்த்து தெரிந்து கொள்வீர்கள்.

சென்னை, காஷ்மீர், லடாக், குலுமணாலி போன்ற இடங்களில் படமாக்க திட்டமிட்டிருக்கிறோம். அதனுடன் தொடர்புள்ள கமர்சியல் விடயங்கள் படம் முழுக்க இருக்கும். இதற்காகத்தான் மும்பையிலிருந்து மொலிசாவுகான் என இரண்டு தேவதைகளை கூட்டிவந்திருக்கிறோம்'' என்றார்.

# சுள்ளானுக்கு சோதனைக் காலம்



சுள்ளான் படத்திற்குப் பின்னர் தனுஷின் நிலைமை ரொம்பவும் கவலைக்கிடமாகக் காணப்படுகின்றது.

சொல்லிக் கொள்ளும்படியான அளவிற்கு படவாய்ப்பு இல்லாவிடினும் தனது அண்ணன் செல்வராகவனின் படவாய்ப்புகள் மட்டுமே காணப்படுகின்றன.

தனுஷ் கரு. பழனியப்பனுடன் சேர்ந்து படம் ஒன்று பண்ணுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது என்று அசோகமித்திரன் கூறியிருந்தார். அதுவும் தற்பொழுது ட்ரப் ஆகிவிட்டது.

ஏ. எம். ரத்னம் பண்ணுவதாகக் சொல்லப்பட்ட தேசிய நெடுஞ்சாலை திட்டம் அரசியல்வாதிகளின் தேர்தல் நேர அறிவிப்பு மாதிரி கிடப்பில் போடப்பட்டு விட்டது.

இந்த ரேஞ்சில் போனால் தனுஷின் மார்க்கெட் நிலவரம் படு கலவரமாகிவிடும் என்பது தெரிந்து விட்டது.

ஸோ - என்ன பண்ணலாம் என்று தனுஷ் வீட்டார் யோசனை செய்து கொண்டிருக்கவே மருமகனைக் காப்பற்ற மாமனார் ரஜினி இரண்டு வருடத்திற்கு புதிய இயக்குனர்களின் படம்பண்ண வேண்டாம் என்று அட்வைஸ் பண்ணியிருகிறார். இதுதவிர, மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்றவற்றில் வெளியாகி சக்கைபோடு போட்ட படங்களின் பெட்டிகளை சென்னைக்கு கொண்டு வந்து தினமும் ஒவ்வொரு படமாக பார்த்து தனக்கு பிடித்ததை பேசி தமிழில் ரீமேக்.. ரைட் வாங்கிவிடுகிறார்.

இது வரை மூன்று படங்க்ள வாங்கிவிட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

இது குறித்து ரஜினி தரப்பில் சொல்லப்படும் செய்தி - ஜெயம் ரவி, விஜய், விக்ரம், சிம்பு என்ற எல்லா ஹீரோக்களும் பிறமொழி படங்களை வாங்கி பண்ணும் போது தனுஷ் பண்ணினால் தப்பா? கன்னடத்தில் ஹிட்டான படம்தான் சந்திரமுகி... என்று விளக்கம் சொல்கிறார்.

தப்பென்று யார் சொன்னது தலைவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதயத்திருடன்

## திரைவிமர்சனம்

சரண் படம் என்றால் துடுக்கமான காதல்... எகிற வைக்கிற இளமை என்று காப்பி ஷாப் ஸ்டைல் காதல் இருக்கும். இதுவும் அந்த வகை தான்.

ஹோம் செக்ரட்டரி வாணி விஸ்வத்தின் ஒரே பெண் காம்னா எஞ்சினியரிங் காலேஜ் மாணவி. டிசிப்ளின் என்ற பெயரில் அம்மா அவ்வப்போது கையில் பிரம்பை எடுத்து கண்டிப்பை காட்ட அது மகளுக்கு பிடிக்கவில்லை. சும்மாவாச்சும் அம்மாவை மிரட்ட தன் தோழியை விட்டு தன்னையே ஆ[illegible]ாக படம் பிடித்து ஈ-மெயிலில் அனுப்புகிறார்.

மொட்டைக் கடுதாசிபோட்டால் வேலைக்காகாது என்பதால் டி.மகேஷ் என்று அனாமதேயமாக ஒரு பெயர் போட்டு அனுப்புகிறார்கள். நிஜமாகவே அப்படி ஒரு ஆள் அது தான் ஹீரோ ரவி.

கேட்டரிங் காலேஜ் மாணவி. சம்மந்தமே இல்லாமல் பொலீஸ் விசாரணை, பிரச்சினையில் மாட்டிக்கொள்ளும் ரவி யாரது என்று தேடிப் பிடித்து லவ் பண்ணத் தொடங்குகிறார். சும்மா தமாசு என்று காம்னா சொல்லியும் ரவி அடம் பிடிக்க, ஹீரோவை வெறுப்பேற்ற அஸிஸ்டண்ட் கமிஷனர் பிரகாஷ் ராஜை லவ் பண்ணுவதாக புருடா விடுகிறார். ஒரு கட்டத்தில் ரவிக்கும் காம்னாவுக்கும் நிஜமாகவே லவ் வருகிறது. ஆனால் கடைசி வரை காதலை சொல்ல விடாமல் ஈகோ தடுக்க... யார் முதலில் காதலை சொல்வது என்று காத்திருக்கிறார்கள்.



இவர்கள் காதல் விளையாட்டில் தன்னை பகடைகாயாக பயன்படுத்திக் கொண்டதை அறிந்து பிரகாஷ் ராஜ் எடுக்கும் ஸ்டெப், படத்தின் கிளைமாக்ஸ்

கிளைமாக்ஸ் ஆரம்பித்து முடிகிற கடைசி இருபது நிமிடமும் பரபரவென்று ஜெட் வேகத்தில் பறக்கிறது.


செம ரகளையாக சொல்லக்கூடிய வாய்ப்புகள் இருந்தும் மொத்தப் படத்திலும் ஏக்கத்திற்கு தடுமாறியிருக்கிறார் டைரக்டர் சரண். காட்டாறு மாதிரி ஓடுகிறதிரைக்கதை படத்தில் ஏகப்பட்ட ஸ்பீட் பிரேக் போட்டிருக்கிறது. அதையும் தாண்டி சின்ன சின்ன சுவாரசியங்களை காட்டி ரசிக்க வைத்தருக்கிறார் என்பது உண்மை.

ஹீரோ ரவி படம் முழுக்க சிரித்தபடி படு ...... நடித்திருக்கிறார். ஆரோக்கியமான சண்டைகள், சட்டையை கிழித்துக் கொண்டு ரத்தம் கொட்டுவது மாதிரியான ஹீரோயிசம் எதுவும் இல்லை. தடாலடியாக வந்து காம்னாவை கவிழ்க்கிற காட்சிகள் அத்தனையும் இளமை குறும்பு. ஆக்ஷன் ஹீரோவை அப்படியே விட்டுவிட முடியுமா? அதற்காகவே ஒரு ஃபைட். அப்புறம் கிளைமாக்ஸ் பைட் செம த்ரில்லிங்.

காம்னா எதோ அரசியல் குடும்பத்து வாரிசு என்று சொன்னார்கள். படத்தில் பார்த்தால் அப்படி தெரியவில்லை. பஞ்சத்தில் அடிபட்ட மாதிரி கிடைச்ச துணியை உடுத்திக் கொண்டு பாதி உடம்பை திறந்து போட்ட படியே படம் முழுக்க வருகிறார். எந்த ஊரில் உள்ளாடைகளோடு பெண்கள் வாக்கிங் போகிறார்கள் என்பது சரணுக்கே வெளிச்சம். திமிறுகிற இளமை, சிம்ரான் அளவு உயரம்... என அரேபியக் குதிரை மாதிரி இருக்கிறார் காம்னா. அது தெரிந்தே இந்த குதிரையை அடக்க போகிறவன் யாரென்று ஒரு பாட்டும் போட்டு தாக்கியிருக்கிறார்கள்.

படம் தொடங்கும் போது ஹோம் செக்ரட்டரி வீடு, மீட்டிங், 'வாண்டட் ஆழ்வார்' என்று தூள் பறக்கிற போஸ்டர் எல்லாம் பார்த்து ஏதோ அதிரடியாக சொல்லப்போகிறார்கள் என்று உட்கார்ந்திருந்தால் அப்படி ஏதுவும் இல்லை. துணை நடிகர்கள் மாதிரி அவ்வப்போது வந்து போகிறார்கள் நாசர், ஜெயசந்திரன், வையாபுரி அண்ட் கோ. இந்த கதைக்கு ஒட்டாக காட்சிகள், கதாபாத்திரங்கள் போதாக்குறைக்கு ஃபாஸ்ட் கட்டிங் எனப்படும் எடிட்டிங், படம் பார்க்க விடாமல் அநியாயத்துக்கு தொந்தரவு செய்கிறது. கற்பனையான காதல், ஒரே மாதிரியாக காட்சி அமைப்புகள் என்கிற போக்கை உடனடியாக மாற்றிக் கொள்ளாவிட்டால் இயக்குனர் சரண் நிலைமை கவலைக்கிடமாவதை தவிர்க்க முடியாது!

இதயத்திருடன் என்று கவிதை மாதிரி டைட்டில் வைத்திருப்பதற்காக சரணை பாராட்டலாம். மற்றபடி படத்தில் கவிதை இல்லை. ''நீ பொரியல்... நான் பொறியியல்'' என்று காம்னா அடிக்கடி சொல்கிறார்.... இது ''பொரியல்''!!!



## சி னி ரி வி

- படிப்பிடிப்பிலும் இமேஜிலும் இருதுருவங்களாக இருக்கும் ரஜினி கமலை இணைய வைத்திருக்கிறது பிரகாஷ்ராஜின் பொய்
- 'ஆதி' பட விவகாரத்தில் விஜய்க்கு ஆதரவாக கண்டன அறிக்கை வெளியிட்டிருக்கிறார் சரத்குமார்.
- முழுநிர்வாண உடலில் பிரபல நடிகையின் தலையை ஒட்ட வைத்ததுடன் வீதி முழுவதும் அதனை ஒட்டி வைத்திருக்கிறது ஒரு கும்பல்-
- தென் மாவட்டங்களில் விஜய்க்கு எதிரரக தியேட்டர் அதிபர்கள் அப்போர்கொடி தூக்கியுள்ள போர்க்கொடி தீப்பொறியை கிளப்பியுள்ளது.
- ஷோபனாவுக்கு சாகித்திய அக்கடமி விருது கிடைத்தாலும் ஆச்சரியமில்லை.

## ஞாபகம் வருதே!

ராஜ் டி.வி ஞாயிறு தோறும் இரவு 9.30 மணிக்கு ஒளிபரப்பாக்கும் இனிய நிகழ்ச்சி ஞாபகம் வருதே. புதுப்பாடல்களை நாம் பார்த்து ரசித்தாலும் பழைய படப் பாடல்களை நாம் காணும் போது தம்முடைய கடந்த கால நினைவுகள் சற்று நம் கண்முன்னே வந்து நிழலாடும்.

அத்தகைய பாடல்களை, பாடல்களுக்கு தொடர்புடைய சம்பவங்களுடன் நேயர்கள் எழுதி அனுப்பினால் இந்நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகும். எனவே, நேயர்கள் தங்களுக்கு விருப்பமான பழைய பாடல்களை இந்த நிகழ்ச்சியில் கண்டு மகிழலாம். இந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்குபவர் குந்தவை வெங்கடேஷ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் பூவனம்



## அமைதி எப்படி வரும்?

நிம்மதி இழந்து
அமைதி குலைந்து
அந்தரத்தில் ஆடும்
சமாதானச் சூழல்
பம்மாத்துக் காட்சிம்
அரசியல் ஆதேனத்தில்
பந்தாடும் நிகழ்வு
பார்வையாளர்களைச் சும்மா
ஏமாற்றி வருகிறதை
இப்போது
எல்லோரும் அறிய
முடிகிறதல்லவா?
தலைமைத் தலையில்
உதித்த சிந்தனைகள்
நிலை தமோதியின்று
வலைப்பின்னலாகி
இயல்பு வாழ்க்கையை
இசகு பிசகாக
இழுத்தடிக்கின்றன.
மூன்று மாத காலத்துக்குள்
சமாதானத்துக்கான
ஊன்றுகோலொன்றை
அமைதியை நிலைநாட்ட
அத்திவாரமிவெதாக
அளித்த வாக்குறுதிகள்- இன்று
அந்தரத்தில் ஆடும்
அவலம் தெரிகிறதே?
அமைதி எப்படி வரும்?

*கவிக்குயிலன்-*
*சேனையூர் -06.*

## கண்விழித்துப் பார்

காதல் தேசமே எனைக் கொஞ்சம்
கண் விழித்துப்பார் பசும் செடியிடையே
என் உளம்கவர் பாவையுடன்
நடைபயின்ற
என் இனிய இளமைப் பொழுதுகளைக்
கண்விழித்துப்பார்
காலை மாலையென்று காலம்
கருதாது மதுபானச் சாலையிலே என்
கற்பனைப் பக்கங்களை கவியாக
வடிக்கின்றேன் எனைக்
கண்விழித்துப்பார்

மாடிவீட்டில் இருந்தவளை என்
கூரைவீட்டு
ஓட்டையூடு காதல்கொண்டு அவளின்
மாருதிக் காரினிலே சுற்றிவந்த எத்தன்
இனிமைப் பொழுதுகளை மீட்டிப்பார்க்க
முடியவில்லை.
இதயத்தை இடமாற்றியும் இருப்பிடத்தை
மாற்றுவதற்கு
அந்தஸ்து போர்வையில் சாகடிக்கப்பட்ட
எந்தன்
காதல் சித்திரங்களை கண்
விழித்துப்பார்

என் வீட்டுக் கூரைபோல் மதுவால்
ஓட்டையிடப்
பட்டுக் கொண்டிருக்கும் என்
இதயத்தூடு
உன்னைத் தேடுகிறேன், உனக்கு
ஆழ்தூக்கமா
கொஞ்சம் என்னை விழித்துப்பார்.
காதலியால் தோற்கடிக்கப்பட்டும்
காதலால் தோற்கடிக்க முடியாத
என் இனிய வாழ்வியலைப் பார்
மாட்டாயா நீ பார்க்க மாட்டாயா
நீ பார்க்க வரவில்லையேல்
நான் உனைப் பார்க்க வருவேன்
உயிரோடு அல்ல மதுவிலே
கரைக்கப்பட்ட என் இதயக் கரைசலோடு

*த.தர்ஸன்*
*யாழரசு.*

## பிரியமானவளே!

நான் விரும்புகிறேன்
உன் மடியில் உறங்கவும்
மனதில் விழித்திருக்கவும்

நீ சுடிதார் அணிந்து
வருகிறாய்!
பத்து வயது காணாமல் போகிறது
சேலை உடுத்து வருகிறாய்!
என் மனசு காணாமல் போகிறது.

அடிக்கடி நாவினால்
ஈரப்படுத்துகிறாய் இதழ்களை
காயப்படுத்துகிறாய் என்
மனதினை

அடித்துச் சொல்கிறேன்
என்னைப் போல் உன்னையாரும்
காதலித்திருக்க முடியாது.
உறுதியாக கூறுகிறேன்
உன்னைப் போல் என்னை எவரும்
காயப்படுத்தியது கிடையாது.

*மு.யாழவன்,*
*திருகோணமலை.*

## நான் யார்?

பெண்ணே!
நான் உன்னைக்
காதலித்தேன்
-நான் உன் காதலன் அல்ல!
உன் அழகை ரசித்தேன்
-நான் உன் ரசிகனும் அல்ல!
உன்னைக்
கட்டியணைத்தேன்
-நான் உன் துணைவனும்
அல்ல!
உன்னை மறுபடி பார்க்கத்
-துடிக்கும் உன் நண்பி!

*ச.தாட்சாயினி*
*புத்தளம்.*

## நினைத்துப் பார்க்கிறோம்

வான் படை அமைப்பதில்
பெரும் பங்காற்றிய கேணல் சங்கரை
நினைத்துப் பார்க்கிறோம்.

கைப்பற்றிய ஆட்லறிகளுக்கு
செயலுருக் கொடுத்த
கேணல் ராஜீவை
நினைத்துப்பார்க்கிறோம்.

அக்கினிக் சுவாலையை
அணைத்ததில் வீரச்சாவடைந்தோரை
நினைத்துப் பார்க்கிறோம்.

மணலாற்றில் போராளிகளுக்கு
சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்த
துணைப்படைவீரர்
மயில்குஞ்சனை நினைத்துப்
பார்க்கிறோம்.

சிறப்பு எல்லைப்படை, துணைப்படை,
காவல்துறை என பல்வேறு
அணிகளிலும்
வீரச்சாவடைந்தோரை நினைத்துப்
பார்க்கிறோம்.

தலைவன் கைச்சாத்திட்ட
உடன்படிக்கையை
மனதில் இருத்தி யுத்த நிறுத்த
காலத்தில்
வீரச்சாவடைந்தோரை நினைத்துப்
பார்க்கிறோம்.
தமிழ் தேசியத்திற்கு
துரோகமிழைத்தவர்களை
விரட்டி அடிப்பதில்
வீரச்சாவடைந்தோரை
நினைத்துப் பார்க்கிறோம்.

இவ்வாறு தமிழீழ இலட்சியக் கனவுடன்
வீரச்சாவடைந்த மாவீரர்களை
நினைத்துப் பார்க்கிறோம்.

அவர்கள் இலட்சியத்தை எம் மூச்சாகக்
கொண்டு
எத்தடைவரினும் எம்தலைவன்
வழிநடத்தலில்
நிச்சயம் தமிழீழம் அமைப்போம் என்று
உறுதி எடுத்துக் கொள்கிறோம்.

*தமிழ் அரசியற் கைதிகள்*
*களுத்துறைச் சிறைச்சாலை.*

## பெண்ணே

பெண்ணே- நீ
பேனா கேட்டிருந்தால்
கடையில் வாங்கித் தந்திருப்பேன்
பூ கேட்டிருந்தால்
மரத்தில் பறித்து தந்திருப்பேன்
நிலாவை கேட்டிருந்தால்
வானில் பிடித்துத் தந்திருப்பேன்
என்னுயிரைக் கேட்டிருந்தால்
அதனையும் விட்டிருபேன்- ஆனால் நீ
பிடித்துத்தாவெனக் கேட்டது
காற்றையல்லவா...?

*மு.ராஜேஷ்*
*புளியங்குளம்.*

## வெறுப்பு

*பூவை நேசித்தேன் அது*
*உதிர்ந்து விழுகின்றது.*
*வீணையை மீட்டுகிறேன் அது*
*சுருதி தர மறுக்கிறது*
*அன்பை வளர்க்க விரும்பினேன் அது*
*ஆசை எனும் எண்ணெயில் எரிகிறது.*
*நீல மேகத்தை ரசிக்கிறேன் அது*
*கரு முகிலாய் மாறுகிறது.*
*உன்னை நம்பினேன்- நீயும் (சகி)*
*என்னை வெறுக்கிறாய்*
*வாழ நினைக்கிறேன்- அது*
*வேப்பங்காயாய் கசக்கிறது-நான்*
*யாருக்காக வாழ?*
*நான் யாரை நம்பி வாழ- எனவே*
*வாழ்வெனும் ஆசையை வெறுக்கிறேன்.*

*கவிப்பிரியன்.*
*விசுவமடு.*

## தமிழினத்தின் துரோகிகளுக்கு...!

*நீங்கள் கூடிப்பிறந்த*
*சகோதரர்களுக்கு*
*துரோகம் செய்தால்*
*பரவாயில்லை*
*பத்துமாதம் சுமந்து*
*பெற்ற அன்னையின்*
*அடிவயிற்றையல்லவா*
*உதைந்தவர்கள்...*
*உங்கள் துரோகத்தனம்*
*அன்றே தெரிந்திருந்தால்*
*கருவிலேயே சிதைத்திருப்பாள் அன்னை...!*

*காரணமேதுமில்லாது*
*உங்களை நீங்களே*
*பிதற்றிக்கொள்ளும்*
*விளம்பரப்படுத்திக் கொள்ளும்*
*கேலித்தனங்களின்*
*சிறுமை கண்டு*
*சகிக்காதவர்கள் இல்லை...!*

*உங்களுக்கென்ன தெரியும்,*
*தமிழ் மக்களின்*
*தாயக உரிமைப் போராட்டம் பற்றி?*
*நீங்கள் அறிந்தவையெல்லாம்*
*காலத்துக்குக் காலம்*
*மாறி மாறி வரும்*
*சிங்கள அரசின்*
*கதிரைக் கால்கள் தானே...!*
*எங்களுக்கான எதிரியின்*
*செருப்பாயிருந்து*
*சொகுசு வண்டிகளில்*
*சுகம் களிப்பவர்கள்*
*நீங்கள்....*
*அவனின் ஆணைக்கு*
*அடிபணிந்து*
*தன்னினத்தையே*
*சுட்டு சோறு தின்னும்*
*நாதியற்றவர்கள்...!*

*விடுதலைக்காய்*
*போராடிக் கொண்டிருக்கும்*
*எங்களுடன்*
*மல்லுக்கட்டி மரிக்கும்*
*மடமைத்தனமுடையவர்களே*
*உங்களுக்காய்*
*மன்றாடிக்கொள்ளுங்கள்*
*ஆண்டவனிடம்...!*

*ஏனென்றால் நீங்கள்*
*நாடுவிட்டு நாடு கடத்தி*
*நடுக்கடலில்*
*எறியப்படவேண்டிய*
*நச்சுப்பாம்புகள்...!*

*ஒன்றுமட்டும் புரிகிறது...*
*நீங்களே உங்களுக்கான*
*அழிவின் வரைபடத்தை*
*வரைந்துகொண்டிருக்கிறீர்கள்*
*என்று....!!!*

*கு.பா.தீபச்செல்வன்*
*யாழ். பல்கலைக்கழகம்*

## பரீட்சை

புத்தகத்தை திறந்தால்
சொர்ப்பனமாய் உன்முகம்
அப்படியே படுத்தேன்
மேசையிலே பலதினம்
ஆசிரியர் சொற்படி- பரீட்சையோ
நாளை மறுதினம்-நான்
என்னதான் செய்வேனோ
சொல்லடி ஓருகணம்.

*த.தவசீலன்*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## பொம்மலாட்டம்

இப்போது தான் புரிகிறது நீ
சொன்ன வார்த்தையின்
அர்த்தம் என்னவென்று
என் வாழ்க்கையே தினமும்
பொம்மலாட்டம் போலாகிவிட்டது.
உன்னிடம் ஒரு நாண்
என் தாயிடம் மறுநாண்.
நீ என்ன செய்வாய்?
உன்னிடமுள்ள நாண்
இவ்வளவு விரைவில் அறுந்து
விடுமென்று
கனவிலும் நினைத்ததில்லை.
காதலுக்கு என்னிடம் ஏன்தான்
கோபமோ?
எத்தனை வலிகளைத் தந்துவிட்டது
ஆனாலும் அவ்வளவும்
பெரிதாக வலிக்கவில்லை.
ஊடல் என்று நினைத்திருந்தேன்.
ஆனால் இந்தக்
காதல் தரும் வலி
ஊடல் அல்ல. ஜென்ம வலி

*சு. தர்சினி.*

## புரியவில்லை

புல்லாங்குழல்
இசைகேட்டு
ராதை வந்தாள்
என்சோக
இசைகேட்டு
உன்தங்கை
வந்தாள்

*சி.க. இசையழகன்.*
*ஆனந்த நகர்*
*கிளிநொச்சி.*

## கவிதை

கற்பனையின்
கருவும்
பொய்யின்
பொழிவும்.

*என். ஜெய்கணேசன்*
*ஆரியபுர,*
*பொகவந்தலாவ.*

## சிரிப்பு

இந்த வாழ்வில்
வந்து சேரும்
இனிய நிகழ்வின்
எளிய வெளிப்பாடு

*அ.யாழினி,*
*மட்டக்களப்பு.*

## சாதி

உள்ளத்தில் நல்ல எண்ணம்
கொண்ட
இரு உயிர்களைப் பிரிக்க
பெரியவர்களால் போடப்படும்
ஓர் பாரிய சாவு முடிச்சு

*சி.கோபி*
*கிளிநொச்சி.*

## வெட்டாதே

நண்பியே-நீ
விதைத்த நட்பெனும்
விதை- இன்று
பாசமெனும் மரமாகிவிட்டது
அதை பிரிவெனும்
கோடரி கொண்டு
வெட்டாதே.

*தீ.செ.மோகனதாஸ்*
*முறிகண்டி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் அடக்குமுறை

என்னதான் விஞ்ஞான யுகம் வளர்ந்தாலும் 'பெண் அடக்குமுறை'— இன்று உலகில் பரவலாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கும், ஆனால் தீர்வு காணப்படாத ஒரு பிரச்சினை. இது இப்படியே தீர்வு காணப்பட முடியாத பிரச்சினையாக தொடர்வதற்கான காரணங்களாக பல கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. எனினும் அவற்றுள் சரியான கருத்து எது என்பது பற்றிய தெளிவின்மை நம்மத்தியில் நிலவவே செய்கின்றது.

பெண் அடக்குமுறை என்பது தனியே பெண்களோடு மட்டும் தொடர்புடைய பிரச்சினையல்ல. பரம்பரை அலகுகள் மூலமாக ஒவ்வொரு சந்ததிக்கும் கடத்தப்பட்டு வருகின்ற இப் பிரச்சினையின் தாக்கத்தை மிகச் சுலபமாக வெற்றி கொள்ள முடியும் என்று கூறமுடியாது.

பொதுவாகவே சமுதாயத்தில் சாதாரண விடயங்கள் ஒவ்வொன்றிற்காகவும் பெண்கள் ஆண்களின் உதவியை எதிர்பார்ப்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். இவ்வாறு சாதாரண விடயங்களுக்காக பெண்கள் தங்களில் தங்கியிருக்கும் பொழுது ஆண்கள் தங்களைக் கதாநாயகர்களாக நினைத்துக் கொள்கிறார்கள். தாங்கள் இல்லாவிட்டால் பெண்களால் இயங்க முடியாது என்ற மனப்பாங்கு சிறுவயது முதலே அவர்களுடன் வளர்கிறது. அத்துடன் ஒவ்வொரு ஆணும் முதன்முதலாய் முகமறிந்து நேசிக்கும் பெண்ணான அவனது தாயும் கூட நீ ஓர் ஆண்பிள்ளை என்பதை அவனுக்கு அடிக்கடி வலியுறுத்துவதால் தனது குடும்பத்துப் பெண்கள் அனைவருக்காகவும் வலிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை அவனுக்கு எழுகின்றது. ஆகவே அவன் பலசாலியாக வளர்கின்றான்.

ஒவ்வொன்றுக்கும் அடுத்தவர்களை அல்லது ஆண்களை எதிர்பார்ப்பதால் தாங்கள் தங்களது சுயத்தை இழந்து போவதை பெண்கள் பெரும்பாலும் உணர்ந்து கொள்வதில்லை. அவ்வாறு உணர்பவர்களை அல்லது தனித்துச் செயற்பட முனைபவர்களை 'நான் இருக்கும் பொழுது நீ ஏன் சிரமப்பட வேண்டும்?' என்பது போன்ற பாச அடிப்படையிலான செயற்பாடுகளால் மற்றவர்கள் தடுத்து விடுவதே வழமை.

இவ்வாறான உறவுகள் அற்ற, தேவைகளால் நிர்ப்பந்திக்கப்படும் பெண்கள் மட்டுமே சமூகத்தை எதிர்த்துப் போராடுபவர்களாகவும், பழமை வாதங்களுக்குள் உடைவுகளை ஏற்படுத்துபவர்களாகவும் மாறுகின்றார்கள்.



பொதுவாகவே பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆணோ, பெண்ணோ யாரும், யார் மீதும் தங்கியிருக்கலாகாது என்பதை தாங்களே உணர்ந்துகொள்ள வேண்டும்.

பெண் விடுதலை என்பது தனியே பெண்களுக்கு மட்டும் உரிய ஒன்றல்ல. ஒரு சமூகத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியே இந்த அடக்குமுறைகளை உடைத்தெறியப்படுவதில்தான் தங்கியுள்ளது.

மூன்று வேளை உணவுத் தயாரிப்பு, வீட்டுப் பராமரிப்பு தவிர பெரும்பாலான குடும்பத் தலைவிகளின் ஏனைய பெறுமதியான நேரங்கள் வீணாகவே கழிகின்றன. அந்த நேரங்கள் அவர்கள் தேவையில்லாத ஊர்ப்பிரச்சினைகளை அலசி வீண்வம்புகளையும் மற்றவர்களின் மனவேதனைகளையும் சம்பாதித்துக் கொள்ள நேரிடுகிறது.

இந்த நிலை மாற வேண்டுமானால் குடும்பத் தலைவிகளை சம்பளமற்ற வேலையாட்களாக நினைத்தும், நடத்தியும் கொண்டிருக்கும் எமது வாழ்க்கை முறை மாற வேண்டும். அம்மாவும் ஒரு மனித உயிர், அவளுக்கும் உணர்ச்சிகள் உண்டு என்பதை மறந்து ஓய்வும் தூக்கமும் இன்றி அவர் எப்பொழுதும் செயற்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவள் ஒரு நல்லதாய். இல்லையென்றால் அவள் பெண்ணே இல்லை என்று நினைக்கின்ற, பேசுகின்ற வழமைகள் சமூகத்திலிருந்து களையப்பட வேண்டும்.

இன்றைய காலத்து இளைஞர்களிடம் நட்பு மிகுந்த நேசம் காணப்பட்டாலும் சினிமா எனப்படுகின்ற ஊடகம் அவர்களைத் திசை திருப்பி விடுகின்றது. நல்லதொரு ஊடகத்தை வெறும் பொருளாதாரத்திற்காகக் கையாளும் யாரோ ஒரு இயக்குநர் குழுவின் சொந்தக் கருத்துக்கள் இவை. நடப்புத்திறன், ஒளிப்பதிவு போன்ற தொழில்நுட்பங்களால் மெருகு பெற்றுப் பிரபலமடையும் பொழுது அந்தக் கருத்துக்கள் சரியானவை என்று உணர்வு நம்மையறியாமலேயே பதிந்துவிடுகின்றது. இசைமெருகேற்றிய கவிதைகள் காதோடு இனிமையாய் அதிர்ந்து சொல்லுகின்ற கருத்துக்கள் ஆழமாக உள்வாங்கப்படுகின்றன.

பெண்களை விட உடற்கூற்றியல் ரீதியான ஆண்கள் பலமானவர்கள்தான். எனினும் வேலைகளை இலகுவாக்கும் பல கண்டுபிடிப்புகளை அவர்களே செய்கின்றார்கள். தங்களது பணிகளை விரைவாகச் செய்து முடித்துவிட்டு மிகுதி நேரங்களை உல்லாசமாகச் செலவிடவே அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் பெண்கள் அப்படியல்ல. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் அவர்களது பொறுமை காரணமாக அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

தேவை என்று வரும்பொழுது ஆண்களால் மட்டுமே செய்யக்கூடியவை என்று கருதப்படும் வேலைகளைக் கூடப் பெண்கள் இலகுவாகவும் ரசனையுடனும் செய்யக் கற்றுக்கொள்வார்கள். ஏனெனில் அப்பொழுது சுமைகளும் வலிகளும் ஒரு பொருட்டாகக் கருதப்படுவது கிடையாது. அத்துடன், ஒற்றுமை, ஒத்துழைப்பு இவை இரண்டுடனும் கூடிய நல்ல நட்பு இருந்தால் யாரும் எதுவும் செய்துவிட முடியாத சக்தியாக பெண்கள் வளர்வதைத் தடுக்க முடியாது.

தாய்மையும், பொறுமையும் நிறைந்த ஆண்களும், வீரமும், வலிமையும் நிறைந்த பெண்களும் நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றார்கள். ஒவ்வொரு விடயத்திற்குமே விதிவிலக்கும் இருக்கும். ஆனால் அவற்றுக்காக பெரும்பான்மையாக இருக்கும் விதிகளைப் பற்றிப் பேசாமலிருக்க முடியாது. இந்த விலக்குகள் தான் நாளைய விதிகளாக மாறும். அது தவிர்க்க முடியாத நியதி. ஆனால் அந்த 'நாளை' என்பதை விரைவுபடுத்தினால்தான் இன்றைய சந்ததி அழிவதைத் தடுக்க முடியும்.

ஒவ்வொருவரும் தத்தமது பராமரிப்பு வேலைகளையும் செய்துகொண்டு வீட்டு வேலைகளையும் பகிர்ந்து கொண்டால் குடும்பத் தலைவிகளினது சுமை குறையும். அதன் மூலம் மிச்சப்படும் நேரத்தில் அவர்கள் தங்களது பெறுமதியான உழைப்பை சமூக அபிவிருத்திக்கு வழங்கலாம். இதனால் அவர்களுக்கும் ஆளுமை வளர்ச்சியும் மனத்திருப்தியும் கிடைக்கும். அவர்களது உண்மையான மனச்சந்தோஷம் குடும்பத்தையும், சமூகத்தையும் மகிழ்ச்சிப்படுத்தும்.

மனிதன் ஒரு சமூகப்பிராணி. அவன் சேர்ந்தே வாழவேண்டியவன். ஆனால் இந்த ஒரு காரணத்திற்காக யாரும் யாருக்கும் சுமையாக இருப்பது இன்றைய உலகில் அழகானதாயிருக்காது. தத்தமது சுயநலமே ஒவ்வொருவருக்கும் நிமிர்வைத் தரும்.

பேச்சை விடவும் செயலுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற ஒரு சரியான வழிகாட்டலின் கீழ் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வோம். கண் கெட்ட பின் சூரிய வணக்கம் யாருக்கு?

-விஜி-

## எடையைக் குறைக்க 7 வழிகள்!

உங்கள் எடை கூடிவிட்டதா? 'எப்படிக் குறைப்பது? எந்த முறையைப் பின்பற்றுவது?'', இப்படி யோசனையிலேயே நேரம் வீணாகிக் கொண்டு இருக்கிறதா?

இதோ, உங்களுக்காக எடையை குறைக்கும் ஏழு எளிய வழிகள்:—

- **உடற்பயிற்சி:—** வாரம் 5 முறையாவது தவறாமல் செய்ய வேண்டும்.
- **பசித்தால் மட்டுமே சாப்பிடவும்:—** ''அப்படித்தான் செய்கிறேன்'' என்று கூறுவதற்கு, முன் யோசிக்கவும். எத்தனை முறை வயிறு நிறைய சாப்பிட்ட பிறகு ஐஸ்கிறீம், இனிப்பு என்று சாப்பிட்டிருப்பீர்கள்? எடையை மேலும் கூட்டவே இது உதவுகிறது!
- **எதைச் சாப்பிடலாம் என்று தெரிந்து கொள்ளவும்:—** ''நான் 4 பிஸ்கெட்டும் ஒரு கிளாஸ் ஜூஸ் மட்டும் குடிச்சேன்'' என்று நீங்கள் சொல்லலாம். நீங்கள் சாப்பிட்ட பிஸ்கெட்டுகளிலும் ஜூஸிலும் எத்தனைக் கலோரிகள் இருந்தன என்று தெரியுமா? எதைச் சாப்பிட்டால் நல்லது என்பதை அறிந்து கொள்ளுவது மிகவும் முக்கியம்.
- **தண்ணீர் தண்ணீர்:—** ஒவ்வொரு நாளும் குறைந்த பட்சம் 8 கிளாஸ் தண்ணீர் குடிக்க வேண்டும். சாப்பிடுவதற்கு முன் தண்ணீர் குடிப்பதால் சாப்பிடும் அளவு குறையும். அத்தோடு உடலில் உள்ள நச்சுப் பொருட்களையும் இது சுத்தம் செய்கிறது.
- **உட்கொள்ளும் அளவு:—** மதியம் அதிகமாக சாப்பிட்டால், இரவில் உட்கொள்ளும் அளவை குறைக்கவும். காலையில் சாப்பிடுவதை விட, மதியம் சற்று குறைவாகவும், இரவில் அதைவிட குறைவாகவும் சாப்பிடுவது நல்லது.
- **ரிலாக்ஸ் ப்ளீஸ்:—** தினமும் நாம் சந்திக்கும் பிரச்சினைகள், சில சமயங்களில் நம்மை அளவுக்கு அதிகமாக சாப்பிடத் தூண்டலாம். அதனால் தினமும் 15 நிமிடங்கள் ரிலாக்ஸ் செய்ய எடுத்துக் கொள்ளவும்.

**இதோ உங்களுக்காக சில டிப்ஸ்.**

- **''நான் குண்டு'' என்று யோசிப்பதை தவிர்க்கவும்:—** நீங்கள் இப்போது எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பற்றிய நினைப்பை விட்டு, மேற்கண்ட வழிகளைப் பின்பற்றினால் எப்படி மாறுவீர்கள் என்பதை யோசிக்கவும்.

''அய்யோ! நான் குண்டு...'' என்ற கவலை உங்களுக்கு இருக்கின்றதா என்று தெரிந்து கொள்ளவும்.

இன்னும் என்ன தாமதம்? உங்கள் எடைக் குறைப்பை இப்போதே ஆரம்பியுங்கள்!

## வாரம் ஒரு கேள்வி-பதில்

கே:- நான் படித்து வீட்டு வீட்டில் இருக்கின்றேன். எனக்கு வயது 21. நான் ஒருவரை காதலித்தேன். வீட்டாருக்கு தெரிந்து அவர்கள் மறுத்ததால் நான் காதலை விட்டுக் கொடுத்தேன். தற்போது வேறு சம்பந்தம் பேசி முற்றுப் பெறும் நிலையில் காதலித்தவன் குழப்பி எனது குடும்பத்தை அழிக்க நிற்கிறான். அதனால் என் குடும்பம் குழம்பி தினமும் கவலையுடன் என் பொழுது கரைகின்றது. அதற்கு என்ன மாற்று வழி செய்யலாம் என ஆலோசனை கூறவும்?

எஸ். புகழ்.

ப:- புகழ்! உங்கள் கடிதத்திலிருந்து உங்கள் எதிர்காலம் கேள்விக்குறியாகி இருக்கின்றது எனப்புரிகிறது. உங்களுக்கும், உங்கள் குடும்பத்துக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

எனினும் மனந்தளர்ந்து விடாதீர்கள். காதலில் எதிர்ப்பு வருவது சகஜம் தான். நீங்கள் மனதார காதலித்திருந்தீர்களானால் எவ்வளவு எதிர்ப்புகள் இருந்தாலும் போராடி பெற்றோர் சம்மதத்துடன் உங்கள் காதலனை கைப்பிடித்திருக்க வேண்டும். நீங்கள் இதைச் செய்யத் தவறிவிட்டீர்கள். அவரும் உங்களை உண்மையில் காதலித்திருந்தால் நீங்கள் எங்கிருந்தாலும் யாருடன் வாழ்ந்தாலும் சந்தோஷமாய் வாழட்டும் என்று மனதார வாழ்த்துவதே முறை. உங்கள் காதலன் அப்படி செய்யவில்லை. எல்லாக் காதலர்களும் தாம் காதலிப்பவர்களை வேறு எவருக்கும் விட்டுக் கொடுக்கமாட்டார்கள் தான். எனவே உங்கள் காதலனின் பக்கத்திலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அவர் மனதார காதலித்திருந்தால் உங்களுடனும், உங்கள் பெற்றோருடனும் முறைப்படி கலந்து பேசியிருக்கலாம். உங்கள் காதல் உண்மையானதாக அமைந்திருக்கவில்லை என்பது வெட்ட வெளிச்சமாகின்றது.

ஆண்கள் என்னதான் தப்புச் செய்தாலும் நாம் வாழும் சமுதாயம் ஏற்றுக் கொள்ளும். பெண்கள் விடயத்தில் அப்படியல்ல. எனவே உங்கள் காதல் விடயத்தை உங்கள் மாப்பிள்ளையிடம் முதலிலேயே கூறியிருக்க வேண்டும். ஏனெனில் கணவன் - மனைவியிடையே ஒளிவு மறைவு இருக்கக்கூடாது.

இந்த விடயத்தில் கடவுள் தான் உங்களுக்கு துணையாக நிற்க வேண்டும். சம்பந்தம் பேசிய மாப்பிள்ளை நல்லவராயிருந்தால் உங்களை மனதார ஏற்றிருப்பார். பிறர் சொல் கேட்பவர்களை விட்டுவிடுங்கள்.

நீங்கள் காதலித்தவரை திருமணம் செய்வது தான் நல்லது. அவர் நல்லவராயிருக்கும் பட்சத்தில் உங்கள் பெற்றோர் அவருடன் பேசி திருமணத்தை முடிவு செய்யட்டும். இல்லையேல் நல்ல வரனைப் பெற்றோர் பார்த்தால் உங்கள் காதல் விவகாரத்தை முதலிலேயே கூறிவிடுங்கள். அதுதான் உங்களிற்கும் உங்கள் குடும்பத்திற்கும் எதிர்கால வாழ்விற்கும் சிறப்பைத் தரும்.

உங்கள் நல்ல[illegible] திருமண [illegible] அமைந்து நீங்கள் சந்தோஷமாய் இருக்க கடவுளை வேண்டி[illegible].



# பெண்

### காதலை காதலோடு காதலி

பெண்ணே நீ காதலை
வெறுத்தாலும்
காதல் உன்னை வெறுக்காது
விதி எனும் சதியால் என்றோ
நீ காதலில் விழுவாய்
உனக்கோர் எச்சரிக்கை மணி!
காதலும் கரும்பும் ஒன்றுதான்
காதல் பாவமுமில்லை,
குற்றமுமில்லை
அது ஒரு புனிதமான உணர்வு
எனவே அந்தப் புனிதக் காதலை
புனிதமானவனோடு பங்கிடு
ஆண் களங்கப்பட்டாலும்
உலகம் அவனை வாழ்த்தும்
பெண் களங்கப்பட்டால்
காறி உமிழ்ந்துவிடும்
எனவே போதையை விடுத்து
கற்போடு காதலி
உன் காதலும் வாழும்
உன் காதலை உலகமும்
வாழ்த்தும்.

றெ.வேஜின் விஜிதா,
நல்லூர்.

## சமைக்க சுவைக்க

### பப்பாளி வடை



**தேவையான பொருட்கள்:-**

| | |
|---|---|
| பப்பாளிக்காய் | 300 கிராம் |
| கடலைப் பருப்பு | 100 கிராம் |
| பெரிய வெங்காயம் | 2 |
| பச்சை மிளகாய் | 5 |
| இஞ்சி | |
| எண்ணெய் | |
| கறிவேப்பிலை | |
| உப்பு | |

**செய்முறை:-**

- பப்பாளிக்காயைத் தோல் சீவி, நறுக்கி, வேக வைத்துக் கொள்ளவும்.
- கடலைப் பருப்பை தனியாக அவித்து வைக்கவும்.
- பிறகு, பப்பாளி, கடலைப் பருப்பை மின் அம்மியில் போட்டு, வடை பதத்துக்கு அரைக்கவும்.
- அதில், வெங்காயம், இஞ்சி, பச்சை மிளகாய், கறிவேப்பிலையை நறுக்கிப் போட்டு, உப்பு சேர்த்து நன்கு பிசைந்து கொள்ளவும்.
- வாணலியை அடுப்பில் வைத்து, எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும், பப்பாளி கலவையை சிறு வடையாகத் தட்டிப் போடவும்.
- வெந்ததும் புரட்டிப் போடுங்கள். பொன்னிறமாக சிவந்ததும் எடுத்து, எண்ணெயை வடிய விடவும்.

**இது புதுமையான வடை. குழந்தைகளும் விரும்பிச் சாப்பிடுவார்கள். பப்பாளி வடை உடலுக்கு நல்லது. குடல் புழுக்களை நீக்கும். அனைவரும் சாப்பிடலாம்.**

## கேள்வி-பதில்

*அன்புக்குரிய சகோதரிகளே!*

உங்களுக்குரிய இந்தப் பக்கத்தில் கேள்வி-பதில் பகுதி ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

உங்கள் கேள்வி குடும்பப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம், சமூகப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் அல்லது தனிப்பட்ட பிரச்சினையாக இருக்கலாம். உங்களுடைய கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படும். அத்துடன் இப் பகுதிக்கு வாசகர்களாகிய உங்களிடம் இருந்து ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

**உங்கள் கேள்விகள், ஆக்கங்கள் ஆகியவற்றை அனுப்ப வேண்டிய முகவரி:-**

பெண்
சுடர் ஒளி வார இதழ்
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பக்கம்

# மன்னர் மகிழ்ந்தார்



பேரரசர் அக்பரின் அரசவையில் இருந்தவர் பீர்பால். நகைச்சுவை ததும்ப பேசுவதில் சாமர்த்தியசாலி. பிரச்சினைகளை தெரிந்து கொண்டு அதை தீர்த்து வைப்பதிலும் புத்திசாலி. மன்னரை எங்கு வேண்டுமானாலும் சந்தித்து பேசும் அனுமதி அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

ஒருநாள் அந்தபுரத்தில் மகாராணியாருடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார் அக்பர். இருவருக்கும் எதிரே பெரிய தட்டு. அதில் நிறைய மாம்பழங்கள்.

மாம்பழத்தை வெட்டி சுவைத்தபடியே இருவரும் பேச்சைத் தொடர, அந்த நேரம் மன்னரைக் காண வந்தார் பீர்பால்.

பீர்பாலைப் பார்த்து விட்ட மன்னர் அவருடன் விளையாடிப் பார்க்க விரும்பினார். உடனே தட்டில் இருந்த மாம்பழக் கொட்டைகளை ராணியார் பக்கம் தள்ளி வைத்தார்.

''வாரும் பீர்பால்...'' என மன்னர் வரவேற்க, அவரை முந்திக் கொண்டு ''வணக்கம் மாமன்னா'' என்றால் பீர்பால்.

பேச்சோடு பேச்சாக பீர்பாலின் கவனம் மாம்பழத் தட்டின் மீது பாய்ந்தது. உடனே வியப்பில் கண்கள் விரிந்தன.

அதை புரிந்து கொண்ட அக்பர், ''பீர்பால்... அரசியாரைப் பாரும். எத்தனை மாம்பழங்களை தின்று தீர்த்திருக்கிறார்'' என்றார்.

மாம்பழக் கொட்டைகளை அக்பர் தன்னிடம் தள்ளிய காரணம் அரசியாருக்கு இப்போதுதான் புரிந்தது. மன்னரின் குறும்புக்கு பதிலாக எதைச்சொல்வது என்று தடுமாறினார் அவர்.


பீர்பால் நிலைமையை சட்டென புரிந்து கொண்டார். உடனே இப்படிப் பழங்களை தின்று கொட்டைகளை மீதம் வைத்திருக்கிறார் அரசியார். தாங்களோ பழங்களோடு கொட்டைகளையும் விழுங்கிவிட்டீர்கள் போலிருக்கிறதே...'' என்று சொன்னார்.

பீர்பால் இப்படிச் சொன்னதும் அரசியார் குலுங்கிச் சிரிக்க, தன் சாமர்த்தியம் பீர்பாலிடம் எடுபடாததை பெருமையாக எண்ணி மன்னரும் சிரிக்க ஆரம்பித்தார்.

## வட்டத்திற்குள் சிக்கும் வார்த்தைப் புதிர்கள்

இங்கு கலைந்த நிலையில் சில வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒழுங்குபடுத்தி நேர் எதிரே உள்ள கட்டங்களில் நிரப்பவேண்டும். பின்னர் வட்டத்திற்குள் சிக்கியிருக்கும் எழுத்துக்களை மட்டும் எடுத்து ஒழுங்குபடுத்தினால் படிப்பினை தரக்கூடிய ஒரு பழமொழி கிடைக்கும். அது என்ன பழமொழி என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | மு | ல் | வ | று | □ | ○ | □ | ○ |
| 2. | சு | டா | ப | ட் | □ | ○ | ○ | □ |
| 3. | ஒ | து | ப | ன் | ○ | □ | ○ | □ |
| 4. | உ | ம் | பு | டு | ○ | ○ | □ | □ |
| 5. | தா | க | ரி | வு | □ | ○ | □ | □ |
| 6. | கு | ன் | ண | ண் | □ | ○ | □ | ○ |
| 7. | கை | க் | வா | ழ் | ○ | ○ | □ | □ |



த.சசிகரன்,
ஞானிமடம்,
பூநகரி



நா. நவுலக்ஷன்,
தரம் - 04,
அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
ஸ்கந்தபுரம்



வை. பத்மரூபி
வ/நெளுக்குளம், கலைமகள்
மகா வித்தியாலயம்



கே. நதியா
சித்தன் குறிச்சி
பூநகரி



இஷாகா
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை
கல்கிசை



கே. சங்கர்
யாழ்சாந்தி, சுண்டிக்குளம் சந்தி
தர்மபுரம்



ச. தயந்தன்
தரம் 9
சித்தன் குறிச்சி,
பூநகரி

## எனது பாடசாலை

எனது பாடசாலையின் பெயர் யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம். இப் பாடசாலை புங்குடு தீவு என்னும் அழகிய கிராமத்தில் அமைந்துள்ளது. பாடசாலை அதிபரின் பெயர் தர்மகுணசிங்கம். எனது வகுப்பாசிரியர் பெயர் அங்கயற் கண்ணி. நான் தரம் 8ல் கல்வி கற்கின்றேன். பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் மிகவும் பொறுமையுடனும் அன்புடனும் எங்களை வழிநடத்துவார்கள். எனது எதிர்காலம் ஒரு விஞ்ஞான ஆசிரியராக வரவேண்டும் என்பதே! 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். எமது பாடசாலையில் தரம் - 1 தொடக்கம் 13 வரையான வகுப் புகள் உள்ளன.

இராசநாயகம் - இதயா
தரம் - 8,
யா/புங்குடுதீவு வித்தியாலயம்.

## திருந்திய பாம்பு

சித்திரம் - நேர்தாஜி
கதை - இந்து

ஒரு கிராமத்தின் வயல் வெளியில் உள்ள ஒரு புற்றில் ஒரு நல்லபாம்பு வசித்து வந்தது.

அந்த பாம்பு சில சமயங்களில் போவோர், வருவோரை எல்லாம் கடித்ததால் பாம்பைக் கண்டு எல்லோரும் பயந்தனர்.

அதே வழியால் ஒரு முனிவர் வந்தார்.



அந்த முனிவரின் சொல்லைக் கேட்டு திருந்திய பாம்பு, இனி யாரையும் கடிப்பதில்லை என அவருக்கு உறுதி வழங்கியது.

அந்த பாம்பு யாரையும் கடிக்காததால், அதை கிராமத்தவர்கள் ஒரு விளையாட்டு பொருளைப் போல பிடித்து இழுத்து துன்புறுத்தினர்.

மனம் வருந்திய பாம்பு முனிவரிடம் சென்று முறையிட்டது.

''நீ யாரையும் கடிக்க வேண்டாம். ஆனால், உன் தற்பாதுகாப்புக்காக படம் எடுத்து சீறுவதில் தவறில்லை'' என்று கூறி பாம்பை அனுப்பினார் அவர்.



## நேரத்தை பற்றி...

- உழைக்க நேரத்தை எடுத்துக் கொள், அது வெற்றியின் விலை.
- சிந்திக்க நேரத்தை எடுத்துக் கொள், அது சக்தியின் ஊற்று.
- விளையாட நேரத்தை எடுத்துக் கொள், அது இளமையின் ரகசியம்.
- படிக்க நேரத்தை எடுத்துக் கொள், அது அறிவின் வாயில்.
- நல்லவை புரிய நேரத்தை எடுத்துக் கொள், அது இன்பத்தின் பாதை.
- கனவு காண நேரத்தை எடுத்துக் கொள், அது சாதனைக்கு வழி.
- அன்புகாட்ட நேரத்தை எடுத்துக் கொள், அது இறைவனின் கொடை.
- சேவை புரிய நேரத்தை எடுத்துக் கொள், அது வாழ்க்கையின் குறிக்கோள்.
- சிரித்து மகிழ நேரத்தை எடுத்துக் கொள், அது இதயத்தின் இன்னிசை.

எஸ்தர் ஜெமிக்கா
தரம் - 10சீ,
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழியில்.... வலி!

கு.பா.தீபச்செல்வன்

வீட்டில் சில நாட்களாக அம்மாவோடு அடம்பிடித்து யாழ்ப்பாணம் போவதற்கு அனுமதி வாங்கியிருந்தேன். நான் அங்கு போவதில் அம்மாவுக்கு உடன்பாடில்லை. இன்றும் கூட என் இம்சை காரணமாக மெல்ல சம்மதிக்கிறாள் அம்மா. உறவினர்களும், நண்பர்களும் இவ்வாறுதான் தடுத்தார்கள்.

ஒருவாறு இன்றுகாலை புறப்பட்டு விட்டேன். மீண்டும் கல்விச் செயற்பாடுகள் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப் பட்டதையடுத்து விரிவுரைக்குப்போகவேண்டும் என்ற பேராவல் ஏற்பட்டது. என் நண்பர்களில் ஒருவன் பேருந்தில் ஏற்ற என்னை அழைத்து வந்துவிடுகிறான். மிகவும் கவனமாகப்போய்வா என்று திரும்பத்திரும்ப கூறிக் கொண்டிருந்தான். பேருந்தில் ஏறியவுடன் உள் மனது சற்று துயரப்பட்டது. பயணத்தை இடைநிறுத்தி விடலாம் போலிருந்தது. பின்னர் திடப்படுத்தியபடி புறப்பட்டுவிட்டேன்.

திரும்ப நான் உயிரோடு வருவேனா? என உள்மனது துயரோடு வினாவியது. அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாக படையினரால் கொல்லப்படுவது, பிடித்துச் செல்லப்படுவது தற்போது யாழ்.நகரை உலுப்புவதுதான் இந்த துயரின் பின்னணி.

பரந்தன், ஆனையிறவு, பளை எல்லாவற்றையும் கடந்து போகிறது பேருந்து. நான் துயரில் துவழ அவைகள் வெற்றிக் களிப்பில் சிரித்துக்கொண்டிருந்தன.

புலிகளின் சோதனைச் சாவடியைக் கடந்து இப்போது இராணுவ சோதனைச் சாவடியை மிதிக்கிறேன். அசுர நரகத்தில் நுழைவதுபோல் உணர்ந்தேன். பேய்களைப் போல படைகள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களது முகத்தில் சற்றுப் பீதியும் தெரிவதுபோல் இருந்தது. அவர்களையும் கடந்து கடுகதிப் பேருந்தில் யாழ். நகரை நோக்கி பயணிக்கத் தொடங்கினேன். முகமாலை கடக்க முகம் காட்டிய பனைமரங்கள், தென்னை மரங்கள் எல்லாம் அசைவற்று துயரில் தோய்ந்திருந்தன. நகரத்தில் சிறைவாசம் செய்வதுபோல சிக்கியிருந்தன. அவைகளை தொடர்ச்சியாகப் பார்க்க மனம் பீறிட்டு அழுகை வந்தது.



நாகர்கோவில் சந்தியில் சில சிப்பாய்கள் தம் சிற்றுண்டியகத்தை சீர்செய்து கொண்டிருந்தார்கள். எனக்கு சிரிப்புத்தான் வந்தது. சில நாள்களில் ஓடப் போகிறவன் சீர்செய்கிறான் சீமெந்துகொண்டு. பொறு பொறு உன் கற்பனைக் கோட்டை எல்லாம் விரைவில் சிதறும் என எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

கொடிகாமத்தில் நான் போய்க்கொண்டிருக்கையில்.... சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெரியவர் ஒருவரை இடைமறித்த சிப்பாய் ஒருவன் வெருட்டி ஏதோ கேட்டுக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் கோபம். அவர் முகத்தில் பயம். அதையும் கடக்கிறது பேருந்து.

தொடர்ந்து சாவகச்சேரியடியில் பயணித்துக் கொண்டிருக்கையில்... சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு இளைஞர்களை இடைமறித்து அவர்களிடம் ஏதோ துருவுகின்றார்கள் சில சிப்பாய்கள். அதிலொருவன் அடிக்க கையை ஓங்குகிறான். அவர்களோடு காவல் துறையினரும் சேர்ந்துதான்... அவர்கள் பணம் கேட்க இளைஞர்கள் கொடுக்கிறார்கள். அதையும் கடந்து இப்போது நுணாவில் பகுதியில் போய்க் கொண்டிருக்கிறேன்.

ஒரு முதாட்டி இரு சிறுமிகளை பாடசாலைவிட்டு கூட்டிச் செல்கிறாள். அப்போது முகத்தில் கறுப்புத்துணிகட்டிய ஒரு சிப்பாய், அதில் போய்க்கொண்டிருந்த சிறுமியிடம் குனிந்து கதைகேட்கிறான். எனக்கு இரத்தம் கொதித்து ஏதோசெய்தது. அவனுக்கு என்ன பாசமா, எங்கள் குழந்தைகளை ஈவிரக்கமின்றி கொன்று குவிப்பவன் என திட்டிக்கொண்டேன். அப்போது முதாட்டி முகத்தை சுழிக்கிறாள். சிறுமி அழத் தொடங்க போ என்பது போல கையைக் காட்டுகிறான்.

கைதடியில் இப்போது எங்கள் பேருந்து பயணிக்கின்றது. அங்கு சில சிப்பாய்கள் முகமாலை நோக்கி வந்த பேருந்தை இடைமறித்து சோதனையிடுகிறார்கள். பயணிகள் சிரமத்துடன் பயந்து நின்றார்கள். எங்கள் துர்ப்பாக்கிய தலைவிதியை நினைத்து என் மனம் வெகுவாக துயரப்பட்டது. யாழ்.நகரை நெருங்க நெருங்க படையினர் பெருவாரியாக ரோந்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். யாழ். நகர் துயரை உள்ளே புதைத்து 'ஏதோ' என்று இயங்கிக்கொண்டிருந்தது.

இராமநாதன் வீதி, நாங்களின்றி வெறிச்சோடி, பெருமளவு படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். பல்கலைக் கழக வாசலை அடைகிறேன்... எங்கள் பாதச் சுவடுகள் படாது எல்லாம் பாழடைந்துபோயிருந்தன. நாம் குழுமியிருந்து அரட்டையடிக்கும் கல்லிருக்கைகள் கண்ணீர் விடுவதைப் பார்க்க கதறியழ வேண்டும் போலிருந்தது. யாராவது ஒரு சக மாணவனை காணவேண்டும் போலிருந்தது. முடியாது. இங்கே யாருமே இல்லை. எவ்வளவு மாணவர்கள் குவிந்திருந்த இடம் இன்று இராணுவ அராஜகங்களால் அவலத்தில் சிக்கி இருக்கிறது என்று மனம் தனக்குள் சொல்லிக் கொண்டது.

விரிவுரையாளர்கள் மௌனித்தபடி போய் வந்துகொண்டிருந்தார்கள்; விரிவுரையாற்ற மாணவர்கள் யாருமின்றி நலம் விசாரிக்க முடியாத துயரத்தில் என்னைப் பார்த்தார்கள். நான் இங்கு வந்திருப்பதில் உடன்பாடில்லாததைப் போலவும் பார்த்தார்கள். எவ்வளவு மாணவர்கள் கூடியிருந்து குதூகலித்த மாணவ விடுதி பார்க்க பாழடைந்து மனதை பதறவைத்தது.

கல்வியங்காட்டில் ஓர் இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், கொடிகாமத்தில் ஓர் இளைஞர் சுடப்பட்டு காயமடைந்ததாகவும், வழமைபோல இன்றும் இரவுச் செய்திகள் கூறியிருந்தன. இதனால் மனம் சோகத்தில் உறைந்திருந்தது. இரவு நெடுநேரமாகியும் தூக்கம் வரவில்லை. எப்போது விடியும், விடிந்தவுடன் முதலில் கிளிநொச்சி போய்விட வேண்டும் என்பது போலிருந்தது. 'உண்மையில் அது ஒரு சுதந்திரமான ஆரோக்கிய நகரம்தான்' என்பதை வீரமிடுக்குடன் சொல்லிக் கொண்டேன். நாம் யாவரும் இணைந்து கிளிநொச்சியைப் போலவே யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை முதலியவற்றையும் மீட்டுக்கொள்ள வேண்டும். இன்று கிளிநொச்சியில் நிலவும் தமிழீழ சுதந்திரம் விரைவில் அங்கும் நிலவ வேண்டும் என மனது உறுதிபூண்டு கொண்டது. சரி விடியட்டும் என விழித்திருந்தேன்.

# ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 20-02-2006 முதல் 26-02-2006வரை

பொ. சந்திரன்

**மேடம்: அச்சுவினி, பரணி,கார்த்திகை 1.**
அச்சுவினி, பரணி, கார்த்திகை

(1,8) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது பயன் குறைவு. இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். (2,7) உரிய சுக்கிரன் 9 இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. பகை விலகும். (3,6) உரிய புதன் 11இல் இருப்பது விசேஷம். உடல் ஆரோக்கியம் உண்டு. உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்வர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். 4 இல் உள்ள சனியை சுக்கிரன் பார்ப்பதால் தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். (9,12) உரிய குரு 7இல் இருப்பது நலம். பிதா நலம், சயன சுகம் உண்டு. (10,11) உரிய சனி, 4இல் இருப்பது கூடாது. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. பொதுவாழ்வில் மதிப்பு குறையலாம்.

**இடபம்:கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 8 இல் இருப்பது நல்லது. இருப்பினும் சூரியனில் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையாட்கள், தொழிலாளர் விசுவாசமாக இருப்பர். (2,5) உரிய புதன், 10 இல் நல்ல பலன் தருவார். கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றலாம். 4க்குரிய சூரியன் 10 இல் நல்ல பலன் தருவார். தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். (7,12) உரிய செவ்வாய் ராசியில் இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் குறையலாம். பகைவரால் தொல்லையுண்டு. (8,11) உரிய குரு 6இல் இருப்பது நல்லதல்ல. முதலீடுகளால் லாபம் குறையலாம். நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. (9,10) உரிய சனி 3 இல் இருப்பது நல்லது. தொழில் துறை முன்னேறும். பிதா நலம். பொதுவாழ்வில் மதிப்பு உயரும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 9 இல் நல்ல பலன் தரமாட்டார். இருப்பினும், குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. இரண்டாம் வீட்டில் உள்ள சனியை சுக்கிரன் பார்ப்பதால் கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. (5,12) உரிய சுக்கிரன் 7 இல் இருப்பது நல்லதல்ல. சயன சுகம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (6,11) உரிய செவ்வாய் 12 இல் நல்ல பலன் தரமாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. வளர்ப்புப் பிராணிகளால் தொல்லயுண்டு. (7,10) உரிய குரு, 5 இல் இருப்பது விசேஷம். திருமணவாய்ப்பு உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. பொதுவாழ்வில் மதிப்பு உயரும். பகை விலகும். (8,9) உரிய சனி இரண்டில் நல்ல பலன் தரமாட்டார். பிதாவுக்கு நல்லதல்ல. முதலீடுகளால் லாபம் இருக்காது.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் விருச்சிகம் முதல் மகரம் வரை சஞ்சரிப்பார். வார மத்தியிலும் பிற் பகுதியிலும் நல்ல பலன் உண்டு. ராசியை சுக்கிரன் பார்ப்பதால் தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. இரண்டுக்குரிய சூரியன் 8 இல் நல்ல பலன் தரமாட்டார். கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. (3,12) உரிய புதன் 8 இல் நல்ல பலன் தருவார். சயன சுகம் உண்டு. உறவினர் மற்றும் அயலவர் உதவுவர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். (4,11) உரிய சுக்கிரன் 6 இல் நல்ல பலன் தரமாட்டார். நண்பர்களுக்கு கூடாது. தாய்க்கு கூடாது. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை ஏற்படலாம். (5, 10) உரிய செவ்வாய் 11இல் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். பொதுவாழ்வில் மதிப்பு உயரும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். (6,9) உரிய குரு 4 இல் நல்ல பலன் தரமாட்டார். பிதாவுக்கு நலமில்லை. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (7,8) உரிய சனி ராசியில் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 7இல் இருப்பது நல்லதல்ல. மேலும், ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது பயனில்லை. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். சூரியனைக் குரு பார்ப்பதால் ஆறுதல் உண்டு. (2,11) உரிய புதன் 7இல் நல்ல பலன் தரமாட்டார். கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. (3,10) உரிய சுக்கிரன் 5 இல் நல்ல பலன் தருவார். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. பொது வாழ்வில் மதிப்பு உயரும். உறவினர் மற்றும் அயலவர் உதவுவர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். (4,9) உரிய செவ்வாய் 10 இல் நல்ல பலன் தரமாட்டார். பெற்றோருக்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் சோதனை ஏற்படலாம். (5,8) உரிய குரு 3 இல் நல்ல பலன் தரமாட்டார். முதலீடுகளால் லாபம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (6,7) உரிய சனி 12 இல் இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம்.

**கன்னி: உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 6இல் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பொது வாழ்வில் பொறுப்பு அதிகரிக்கும். (2,9) உரிய சுக்கிரன் 4 இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. பிதா நலம். (3,8) உரிய செவ்வாய் 9 இல் நல்ல பலன் தரமாட்டார். முதலீடுகளால் லாபம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். தகவல் தொடர்பு சீராக இருக்காது. (4,7) உரிய குரு, 2 இல் இருப்பது விசேஷம். தாய் நலம். திருமண வாய்ப்பு உண்டு. தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். (5,6) உரிய சனி 11இல் இருப்பது விசேஷம். உடல் ஆரோக்கியம் உண்டு. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். வளர்ப்பு பிராணிகளால் லாபம் உண்டு. வேலையாட்கள், தொழிலாளர் ஒத்துழைப்பு தருவர்.12 க்குரிய சூரியன் 6 இல் இருப்பது விசேஷம். சயன சுகம் உண்டு.

**துலாம்: சித்திரை 3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது விசேஷம். இருப்பினும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். முதலீடுகளால் லாபம் உண்டு. (2,7) உரிய செவ்வாய், 8 இல் நல்ல பலனைத் தரமாட்டார். வாகன சுகம் இருக்காது. திருமண வாய்ப்பைப் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. (3,6) உரிய குரு ராசியில் நல்ல பலனைத் தரமாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். உறவினர் மற்றும் அயலவரால் தொல்லை உண்டு. வேலையாட்கள், தொழிலாளர் விசுவாசமாக இருக்கமாட்டார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,5) உரிய சனி 10 இல் நல்ல பலனைத் தரமாட்டார். தாய்க்கு நல்லதல்ல. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை வரலாம். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்ற வாய்ப்பு இல்லை. (9,12) உரிய புதன் 5 இல் நல்ல பலனைத் தரமாட்டார். பிதாவுக்கு நலமில்லை. சயன சுகம் குறையலாம். 10 இல் உள்ள சனியை, சுக்கிரன் பார்ப்பதால் தொழில் துறை முன்னேறும்.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய், 7 இல் நல்ல பலன் தரமாட்டார். இருப்பினும், சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். தொழிலாளர், வேலையாட்கள் பிரச்சினை தருவர். வளர்ப்புப் பிராணிகளால் தொல்லையுண்டு. (2,5) உரிய குரு 12இல் இருப்பது நல்லதல்ல. வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. பிள்ளைகளின் செயல்பாடு திருப்தி தராது. மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (3,4) உரிய சனி, 9 இல் நல்ல பலனைத் தரமாட்டார். தாய்க்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை உருவாகலாம். தகவல் தொடர்பு பாதிக்கலாம். உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யமாட்டார். (7,12) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. திருமண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. பகை விலகும். (8,11) உரிய புதன் 4 இல் இருப்பது விசேஷம். நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. முதலீடுகளால் லாபம் உண்டு. 10க்குரிய சூரியன் 4இல் நல்ல பலன் தரமாட்டார். தொழில்துறையில் பாதிப்பு இருக்கும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 11இல் இருப்பது விசேஷம். மேலும், தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. தாய்க்கும் நல்ல பலன் உண்டு. (2,3) உரிய சனி 8இல் இருப்பது நல்லதல்ல. வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் தொல்லை தருவர். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (5,12) உரிய செவ்வாய் 6 இல் நல்ல பலன் தருவார். சயன சுகம் உண்டு. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். (6,11) உரிய சுக்கிரன், ராசியில் இருப்பது நல்லது. நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையாட்கள் மற்றும் தொழிலாளர் விசுவாசமாக இருப்பர். (7,10) உரிய புதன், 3இல் நல்ல பலன் தரமாட்டார். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. பகைவரால் தொல்லையுண்டு.

**மகரம்: உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி 7இல் இருப்பது நல்லதல்ல. இருப்பினும், தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. பிரயாண வாய்ப்பு உண்டு. (3,12) உரிய குரு 10இல் இருப்பது நல்லதல்ல. சயன சுகம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் தொல்லை தருவர். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,11) உரிய செவ்வாய் 5இல் இருப்பது நல்லதல்ல. தனிப்பட்ட வாழ்வில் பாதிப்பு இருக்கும். தாய்க்கு நல்ல பலன் இல்லை. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. (5,10) உரிய சுக்கிரன் 12 இல் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். பொதுவாழ்வில் மதிப்பு உயரும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (6,9) உரிய புதன் இரண்டில் நல்ல பலன் தரமாட்டார். பிதாவுக்கு நலமில்லை. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். தொழிலாளர் மற்றும் வேலையாட்கள் விசுவாசமாக இருக்கார். 7 இல் உள்ள சனியை சுக்கிரன் பார்ப்பதால் திருமண வாய்ப்பு உண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி, 6இல் இருப்பது விசேஷம். மேலும், தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். சயன சுகம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,11) உரிய குரு 9 இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. (3,10) உரிய செவ்வாய், 4 இல் நல்ல பலன் தரமாட்டார். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பொது வாழ்வில் மதிப்பு குறையலாம். தகவல் தொடர்பு பாதிக்கலாம். உறவினர் மற்றும் அயலவர் தொல்லை தருவர். (4,9) உரிய சுக்கிரன், 11 இல் இருப்பது நல்லது. பெற்றோர் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். (5,8) உரிய புதன், ராசியில் நல்ல பலன் தரமாட்டார். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். முதலீடுகளால் லாபம் இருக்காது. மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. 7இற்குரிய சூரியன் ராசியில் நல்ல பலன் தரமாட்டார். திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.

### இவ்வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| ராகு | | செவ் | |
| சூரியன் புதன் | செவ்வாய் ரோகிணி சந்திரன் / சுக்கிரன் உத்தராடம் சூரியன் / புதன் பூரட்டாதி குரு | | சனி |
| | சூரியன் சதயம் ராகு / குரு விசாகம் குரு / சனி பூசம் சனி | | |
| சுக்கிரன் | | குரு | கேது |

மாசி 8 முதல் மாசி 14 வரை

சந்திரன் விருச்சியம் முதல் மகரம் வரை

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 8இல் இருப்பது கூடாது. இருப்பினும், தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம் அல்லது தடைப்படலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பொதுவாழ்வில் தொல்லை உண்டு. (2,9) உரிய செவ்வாய் 3 இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. பிதா நலம். (3,8) உரிய சுக்கிரன், 10இல் நல்ல பலன் தரமாட்டார். முதலீடுகளால் லாபம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் தொல்லை தருவர். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,7) உரிய புதன், 12இல் நல்ல பலன் தரமாட்டார். தாய்க்கு நலமில்லை. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்காது. 6க்குரிய சூரியன், 12இல் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் மற்றும் தொழிலாளர் விசுவாசமாக இருக்கார். (11,12) உரிய சனி 5 இல் நல்ல பலன் தரமாட்டார். சயன சுகம் பாதிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிர்தசரஸ் பொற்கோவில்



# சீக்கீயர்கள் வழிபடுவது!

மதங்களிலேயே இளமையான மதம் சீக்கிய மதம். இது தோன்றி ஐந்நூறு ஆண்டுகள்தான் ஆகின்றது. பிரிவுகள் எதுவும் இல்லாமல் கட்டுக்கோப்பாக இருக்கிற மதம் இது. பஞ்சாபி மொழியில் 'சீக்' என்றால் சீடர் என்று அர்த்தம். சீக்கியர்கள் எல்லோரும் சீடர்கள். பத்துக் குரும்மார்களின் படிப்பினைகளைப் பின்பற்றும் சீடர்கள். அந்தப் படிப்பினைகள் தொகுக்கப்பட்டு 'குரு கிரந்த சாகிப்' என்ற புனித நூலாகி இருக்கிறது. சீக்கியர்களுக்கு ஒரே கடவுள். அவர் எல்லா மதத்துக்கும் உரியவர். உருவமற்றவர்.

சீக்கியர்கள் வழிபடுவது குருத்வாரா வில்! இங்கு சிலைகள் இருக்காது. மதகுருக்கள் யாரும் இருந்து பூஜை செய்ய மாட் டார்கள். அங்கு புனித நூலான கிரந்தம் மட்டும் இருக்கும். அதுவே அவர்களின் குரு; வழிகாட்டி! அதை நன்கு கற்றுத் தேர்ந்த கிரந்தி ஒருவர் அதிலி ருக்கும் தத்துவங்களைப் படித்துச் சொல்லுவார். ஆனால், அவருக்கு ஸ்பெஷல் அந்தஸ்து எதுவும் கிடையாது. சீக்கியர்களுக்குச் சடங்குகளில் நம்பிக்கை கிடையாது.

சீக்கியர்களின் புனிதத்தலம் அமிர்தசரஸில் இருக்கும் பொற்கோயில். ஆனால், எல்லோரும் கட்டாயம் அங்கே போய்த்தான் ஆகவேண்டும் என்ற அவசியம் கிடையாது. குரு கிரந்த சாகிப் எங்கெல்லாம் இருக்கிறதோ, அதெல்லாமே அவர்களது புனிதத்தலம். வீட்டிலிருந்த படியே கூட அதைப் படிக்கலாம்.

## பரீட்சையில் வெற்றிபெறத் துடிக்கும் மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி

சுடர் ஒளி
THE SUDAR OLI

பத்திரிகை வழங்கும்

## கல்விச் சுடர்
15.02.2006 முதல்

உங்கள் அபிமான சுடர் ஒளி பத்திரிகையில் திங்கள் முதல் வெள்ளி வரை தொடர்ச்சியாக வெளிவருகின்றது. கொழும்பு, யாழ்ப்பாணம், குருநாகல், மன்னார், கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு, வவுனியா, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் முன்னணியில் திகழும் அனுபவமும் திறமையும் மிக்க ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்களையும் விடைகளையும் உள்ளடக்கியதாக 'கல்விச்சுடர்' வெளியீடு வெளிவருகின்றது.

| | | |
|---|---|---|
| திங்கள் | - | உயர்தர கலை, வர்த்தக வினாத்தாள்கள். |
| செவ்வாய் | - | உயர்தர கணித, விஞ்ஞான வினாத்தாள்கள். |
| புதன் | - | சாதாரணதரப் பரீட்சை வினாத்தாள்கள். |
| வியாழன் | - | வெளிவாரி பட்டப்படிப்பு பாட வினாத்தாள்கள்,<br>வேலைவாய்ப்பு பரீட்சை வினாத்தாள்கள்,<br>பாடசாலை தவணைப்பரீட்சை வினாத்தாள்கள். |
| வெள்ளி | - | தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாள்கள். |

குறித்த பரீட்சைகள் நெருங்கும் காலங்களில் அப்பரீட்சையை நோக்கிய வினாத்தாள்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இந்த வெளியீடு அமையும்.

**மாணவர்களே உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!**


**HOTEL WESTEERN (PVT) LTD**




Danial Banquet Hall (டேனியேல் பென்குவட் மண்டபம்) முற்றும் குளி ரூட்டப்பட்ட 400 பேர் அமரக்கூடிய திருமண மண்டபம், தரமான உணவு வகைகளுடன் கூடிய சிறந்த உபசரிப்பு சேவை, இலங்கை சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர்களுக்கான இலவச காப்புறுதி.

சிறந்த பராமரிப்பு சேவையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைபேசி, I.D.D., தொலைக்காட்சி, மினிபார், ரெஸ்டூரண்ட், பார், விருந்துபசார மற்றும் மாநாட்டு மண்டபம், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகை கார் மற்றும் கடன் அட்டை வசதி போன்ற உன்னத சேவைகள்.

**No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04**

T.P. : +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax : +94 11 4518481 E-mail : info@hotelwesteern.com
Website : www. hotelwesteern.com

EXPOAIR
your friend in the skies...



எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 349999 / 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290 / 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com




இப்பத்திரிக்கை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2006, பெப்ரவரி 25 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org